www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ஆக.04–10,1996
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 164

# மூண்ட பெரும்சமர்



# முல்லைக்கள நிலவரம்



## கார்த்திகை நான் காதலிக்கிறேன்

—ரம்பா

## கிட்டு தோன்றினார்

## பூலான் தேவி

அதிரடித் தொடர்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## பூனைகளும்–சுண்டெலிகளும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

ஜூலை 83 இனக்கலவரம்
என்றும் மாறாத வடு!
தமிழர்கள் விட்டகண்ணீர்
கூரிய வாளாகியது.

ஜூலை மாதத்துக்கும்
உயிரழிவுகளுக்கும
அப்படி என்ன ஒரு உடன்பாடு?
இலங்கைத் தீவுக்கும்
ஜூலைக்கும் எட்டாப் பொருத்தமோ?

இம்முறையும் ஜூலை மாதம்
உயிரழிவுகளை
தந்துவிட்டுத்தான் விடைபெற்றது!

முல்லைச் சமரிலும்
கொழும்பிலும்
யுத்தத்தின் விளைவு
மனித உயிர்களை
பெரும் தீனியாக்கிக்கொண்டிருக்கிறது.

கொழும்பு குண்டுவெடிப்பு
கண்டிக்கப்படவேண்டிய கோரம்!
மனித உயிர்களுக்கு
குறிவைக்கும் குண்டுவீச்சுக்கள்
மற்றும் குண்டுவெடிப்புக்கள்
இரண்டுமே
வலுவாகக் கண்டிக்கப்படவேண்டியவை!

குண்டுவீச்சுக்களுக்கும்
குண்டு வெடிப்புக்களுக்கும்
என்ன நியாயம் சொல்லப்படினும்
அவை அப்பட்டமான அநியாயம்!

எல்லோரும் யுத்தத்திற்கு
ஆதரவானவர்களல்ல.
சிங்கள மக்கள் மத்தியிலும்
யுத்தம் தீர்வல்ல
என்பதை உணரும் போக்கு
வெகுவாக அதிகரித்து வருகிறது!
முல்லைச் சமரும் அந்த நினைப்பை
ஊக்குவித்துள்ளது!

முல்லைச் சமர் குறித்த
பலத்த சர்ச்சைகள்
தெற்கில் ஏற்பட்டிருந்த நேரத்தில்
கொழும்பு குண்டுவெடிப்பு
கவனத்தைத் திசைதிருப்பியதால்
நஷ்டம் அரசாங்கத்திற்கல்ல.

தலைப்புச் செய்தியாகவிருந்த
முல்லைச் சமர்

கொழும்பு குண்டுவெடிப்பால்
இரண்டாம் இடத்திற்கு சென்றது!

முல்லைச் சமரைப் பொறுத்தவரை,
இலங்கைத்தீவின் இனப்பிரச்சனை
நியாயமான தீர்வை எட்டும்வரை
யுத்தம் நிரந்தர நிறுத்தமாகாது
என்பதைப் புலப்படுத்தியிருக்கிறது.

யுத்தத்தை யுத்தத்தால் நிறுத்துவது
சரியான வைத்தியமாகாது.
நோய்க்குரிய காரணம் தெரிந்தும்
தகுந்த வைத்தியம் செய்யாமல்
மருத்துவர்கள் தமது திறமைகளை
தம்பட்டம் அடித்தால் போதாது!

நோயாளி மரணப்படுக்கையில்;
வைத்தியர்களோ
புண்ணுக்குப் புனுகு பூசிவிட்டு
அதுதான் பொருத்தமான வைத்தியம்
என்று புளகாங்கிதம் அடைகிறார்கள்.

முல்லையில் என்ன நடக்கிறது?
என்று கேட்கிறது எதிர்க்கட்சி.
கேள்வியின் நோக்கமும்
சுத்தமான அரசியல் லாபம்தான்!
பதில் சொன்னால் மட்டும்
என்ன செய்யப் போகிறார்கள்?
"எங்கள் ஆட்சியில் இப்படி நடந்ததா?
விட்டோமா நாங்கள்?"
என்று கூட்டத்தில் முழங்குவார்கள்!

யுத்தம் என்பதே
இனப்பிரச்சனை பெத்துப்போட்ட
அசுரக் குழந்தைதானே!
அதனைத் தாலாட்டி, சீராட்டி, பாலூட்டி
வளர்த்ததில் தமது பங்கை
ஐ.தே.கட்சி மறுக்கலாமா?

முல்லைச் சமர் பற்றிய
தனது அக்கறையை
முழு யுத்தம்மீதும்
எதிர்க்கட்சி திருப்பலாமே!

ஒற்றையாட்சி என்று
ஒற்றைக்காலில் நிற்பது மூலம்
இனப்பிரச்சனைத் தீர்வை
அரசியல் லாபத்தோடு
சேர்த்து முடிச்சுப்போடுகிறது
எதிர்க்கட்சி!

அதன் மூலமாக, யுத்தம் தொடர்வதற்கு
தாமும் ஒரு காரணமாகிக்கொண்டு.
கள நிலவரக் கணக்கும் கேட்கிறது!

பூனைக்கு விளையாட்டு,
சுண்டெலிக்கு சீவன்போகுது.
பூனைகள் சுயநல அரசியல்வாதிகள்;
சுண்டெலிகள் மக்கள்!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## எதிர்பார்ப்பு

நாம் நமது வாழ்க்கையில் அநேகரோடு உறவு வைக்கின்றோம்: நெருங்கி ஜீவிக்கின்றோம்: பிரிவு ஏற்படும் போது, மனக்கசப்பு வரும் போது உறவை சரியாக்கிக் கொள்ளாமல், "நான் ஏன் கதைக்க வேண்டும், விரும்பினால் அவர்கள் வந்து கதைக்கட்டும். நானாகப் போய்க் கதைக்கமாட்டேன்" என்று சொல்லுகின்றவர்களாக நாம் இருக்கின்றோம்.

ஆனால் கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் கடவுளின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் கடவுளின் உறவை விட்டுத்தூரம் போன போதும் தேடி விசாரித்து உறவை புதுப்பிக்க கடவுள் முந்திக் கொள்கின்றார். "ஆதாமே...! நீ எங்கே இருக்கிறாய்....?" என்று கூப்பிட்டு விசாரித்து, செய்த தவறை மன்னித்து உறவைப்புதுப்பிக்கின்றார்.

"ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்." ரோமர்(15:7)

ஆண்டவருடைய எதிர்பார்ப்பு, நாமும் அவரைப்போல உறவை ஏற்படுத்த முந்திக்கொள்ளவேண்டும் என்பதுதான். யாரோடு பிரிந்திருக்கின்றோம் என்பதை நாமும் சீர்தூக்கிப் பார்த்து உறவைப் புதுப்பிக்க முந்திக்கொள்வோமாக.

சகோ. எஸ். யேசுநாதன், செங்கலடி.

## ஆன்மீகம்



### நபிமீது நேசம் வைப்போம்

ஒரு முஸ்லிம், இறைவனின் கட்டளைகளுக்கு அடிபணிந்து வாழ வேண்டியது எவ்வாறு அவசியமோ அதே போன்று இறைதூதர் நபிகளார் (ஸல்) அவர்களின் கட்டளைக்கும் கீழ்ப்படிந்து வாழவேண்டும். (நீங்கள்) அல்லாஹுவுக்கும் வழிப்படுங்கள். அவனது தூதருக்கும் வழிப்படுங்கள் என்ற அருள்மறை வாக்கு இதனை வலியுறுத்துகிறது. இறைவனை விரும்புவோர் அண்ணல் நபியவர்களைப் பின்பற்றுவதன் மூலம் இறை நேசம் பெறலாமென்பது இறைமறையின் இனிய வாக்கு.

நபிகள் பெருமான்(ஸல்) மீது அன்பு வைப்பதும்- அன்னார் மீது அதிகமதிகம் "ஸலவாத்" மொழிவதும் ஒரு முஸ்லிமுக்கு இன்றியமையாத கடமையாகும். "உங்களில் எவரும் தமது பெற்றோர்- புதல்வர்கள் ஆகியோர்களை விட என்மீது நேசம் வைக்காத வரையில் விசுவாசியாக முடியாது. எவர் என்மீது "ஸலவாத்" சொல்வதை விட்டு விடுகிறாரோ அவர் சுவர்க்கத்தின் பாதையைத் தவறவிட்டுவிடுவார்." என்பன போன்ற நபிமொழிகள் நபிநேசத்தை வலியுறுத்துகின்றன.

நபி பெருமானாரின் பிறந்த தினத்தைக் கொண்டாடுமுகமாக அன்னவர் பெயரால் "மவ்லித்" ஓதுவதும்-ஏழைகட்கு அன்னதானம் செய்வதும் நம்முன்னோர்கள் புரிந்த இனிய நடைமுறைகளாகும். எனவே அண்ணல் நபிகளாரை இதய பூர்வமாய் நேசம் வைத்து- அன்னவர்களின் சொல்லையும், செயலையும் பரிபூரணமாய் நம் வாழ்வில் கடைப்பிடித்து இறை அருளையும், மறுமையில் அவர்களது சிபாரிசையும் பெற்றுய்யத் திட உறுதி பூணுவோமாக. ஆமீன்.

எம்.எச்.எம். ஹாரித், திஹாரிய.

## கவிதைப் போட்டி இல.161

### பரிசுக்குரிய கவிதை

### இதுதான் இனி நியதி

புறாவும் பறக்காது;
புண்ணியமும் மலராது;
காகம் தான் பறக்கும்!
கழுகுகளும் இனிப்பறக்கும்!
நாய்கள் ஓலமிடும்!
நரியெல்லாம் நடனமிடும்.!

நிஜந்திக்கா கனகசிங்கம்-கல்லடி, மட்டக்களப்பு.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

#### அமைதி?

பரந்த கடல் கண்டோம்;
விரிந்த நிலம் கண்டோம்;
சிறந்த வளம் கண்டோம்;
எங்குமே அமைதி காணோம்!!

செல்வி ஆர்.எவ்.ராஸிக்-
மாத்தளை.

#### இன்றைய புதினம்

"வடக்கில் அமைதி"
ஆய்ந்தறிய வந்தது,
ஆகாய மார்க்கமாய்...
ஆய்வு(க்) குழுவொன்று!

மனசு- பெரியமுல்லை,
நீர்கொழும்பு.

#### தேசம்விட்டு......

ஆகாயம் பூமியெங்கும்,
அதிர்வு தரும் தேசமிது!
அடுத்தநாடு சென்றேனும்,
அமைதியுடன் வாழ்ந்திடுவோம்!

ஏ.எஸ். மரைக்கார்- மதீனா முகாம்,
கல்பிட்டி.

#### ஏமாற்றம்

வெண்புறா தேடிய
எங்கள் வாழ்வில்,
விடியல் இல்லாத
இருட்டுக்குள் இன்னும்-
அண்டங்காக்கைகள்தான்!

பூ. இதயரெத்தினம்-
ஆரையம்பதி-03.

#### ஒற்றுமையே பலம்

உங்களுக்குள் பிளவில்லை, பிணக்கில்லை.
எங்களுக்குள்ளோ ஏராளம், ஏராளம்!
என்று வரும் உங்கள் நிலை, ஏங்கித் தவிக்கின்றோம்;
அன்றுதான் எங்களுக்குப் பலம்!

க. கமலாம்பிகை-கரப்பன்காடு, வவுனியா.



#### இடப்பெயர்ச்சி

இருண்டது
வானம்
மட்டுமல்ல;
எங்கள்
நாடும்தான்!


சிவா-பிரதான வீதி,
கொழும்பு-11.

#### யாரங்கே?

வெண்புறாவை ஏன்
திறந்துவிட்டீர்கள்?
யுத்தப் புகையால்
கறுத்து விட்டதே.

சுபா வரன்-கண்டி.

## கவிதைப் போட்டி இல-164



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி- 10.08.1996

–முகவரி–
கவிதைப் போட்டி இல.164
தினமுரசு வாரமலர்
த.பெ. இல–1772, கொழும்பு.

#### விடுதலை

விடுதலை உனக்குண்டு
நீள்வெளியில் சிறகடிக்க,
விடுதலை எமக்கும் உண்டு;
ஏட்டினிலே வரைவதற்கு!
விடியலை நோக்குகின்றோம்!
விடியவில்லை ஓர் பொழுதும்.

எம்.மயில்வாகனன்- டன்கினன்,
பூண்டுலோயா.

#### காணவில்லை

வேட்டோசை கேட்டவுடன்
வெகுண்டோடும் பறவைகாள்!!
வெடிபட்டுச் சிறகொடிந்த
வெண்புறாவைக் கண்டீரோ!

உன்னஸ்கிரிய ஏ.பி.சதாசிவம்-
தெஹிவளை.

#### உறுமீன் தேடும் புள்ளினம்

தங்க நிலவின் ஒளியினிலே
தவழும் ஆற்றங்கரையினிலே
சுங்குல் நிறத்தின் புள்ளினங்கள்
உறுமீன் தேடவந்தனவோ?

ஏ.எம்.முஸ்தபா- மீராகேணி,
ஏறாவூர்.

## வாசக(ர்) சாலை

"பூலான்தேவியின் கதை" வாசித்து உள்ளேன். ஆனால் "ரசிகனின்" நடைவித்தியாசமாக உள்ளது. அதுதான் ரசிகனின் "ட்ரேட் மாக்" கிரிக்கெட் போட்டி வர்ணனை "சிரிப்பு வெடிகுண்டு"

சுபா, கண்டி.



ரசிகனின் பாணியில் 'பூலான் தேவி' எம் இதயமதை கொள்ளை கொள்ளப்போவது உறுதி. ஆரம்பமே அட்டகாசம். சம்பல் பள்ளத்தாக்கு பற்றி அறியத் தந்தமைக்கு நன்றி. அசத்தி வரும் அறிமுகமில்லா-முகம்காட்டா ரசிகனுக்கு சபாஷ்! நன்றி

எஸ். பத்மா, உமாஜினி, நவ்சாத்,
கொழும்பு-10.

என்றும் என் அன்பிற்கினிய தினமுரசே!

உன்னை என்னவென்று சொல்வதம்மா! அனைத்து அம்சங்களும் படு சூப்பர். கார்லோஸ் முடிந்தபின் தக்க சமயத்தில் பூலான்தேவியின் கதையை தொடங்கியதற்கு எனது உளம் கனிந்த பாராட்டுக்கள். எதையும் சரியான நேரத்தில் செய்யும் தினமுரசின் அனைத்து அம்சங்களும் அற்புதத்திலும் அற்புதம். உனது வளர்ச்சிக்கு வாழ்த்துக்கள்.

அருள்குமார், ஹாலி-எல.

டியர் முரசே!

கொள்ளை ராணி 'பூலான்தேவி' இவ்வாரம் ஆரம்பித்து இந்த வாரமே எம்மை கலக்குகிறாள். போகப் போக அசத்தி விடுவாள்போல் தெரிகிறது.

கே. புவனலோஜினி, சமகிபுர, இறக்குவானை.

"கொள்ளை ராணி பூலான்தேவி" ஆரம்பமே சூப்பரோ சூப்பர். முரசு 162 இல் இராமாயணப் போட்டியில் ஓர் தவறு. பதிலை கேள்வியாகவும் கேள்வியை பதிலாகவும் பிரசுரித்திருந்தீர்கள்.

நா. ஜெயகணேஸ், ஆரியபுர, பொகவந்தலாவ.

பூ ஒன்று புயலான கதை. 'பூலான் தேவி'யின் வாழ்க்கைப் பக்கங்களைப் புரட்ட முற்பட்டிருக்கும் முரசுக்கு பாராட்டுக்கள்.

அநு தேவராஜன், அத்துலத்முதலிகம, மத்துகம.

அன்பிற்கினிய முரசே!

நீ சுமந்துவரும் ஆக்கங்கள் மிகவும் சுவையாக அமைகின்றன உன்னை ஆசையுடன் பார்க்கும் உனது அன்பான வாசகர்களில் நானும் ஒருவர். நீ சுமந்து வரும் ஆக்கங்களில் என்னை மிகவும் கவர்ந்தது "காதிலை பூ கந்தசாமி," சிந்தியா பதில்கள், அலசுவது-இராஜதந்திரி. அத்தோடு பட்டுக்கோட்டை பிரபாகர் எழுதும் தொடர் நவீனம் 'தா!' மிகவும் அருமையாக இருக்கிறது. எனது வாழ்த்துக்கள் பல.

செல்வி கவிதா செல்வராஜ், ஹப்புத்தளை.

மறக்கமுடியாத சரித்திர நாமம்..!

ஆம், "மாவில்லன்+மகா நாயகன்=கார்லோஸ்! 18 வாரங்களாய், அட்டகாசமாய் அசத்திய அற்புதத் தொடர் முடிவடைந்ததில்; ஒரு சந்தோஷச் சோகம்! ஒரு புறம், ஆளைக் கொல்லும் விதம்; மறுபுறம் மாதைக் கவரும் விதம்! இன்னொரு புறம் மனதைக் கொள்ளை கொள்ளும் ரசிகனின் கவர்ச்சித்தனம்!

எல்லாமே இளமை+இனிமை+அருமை+பெருமை.

கூடவே, புதிய தொடர்களுக்கு; எங்கள் இதயங்கனிந்த "வசந்த வரவேற்புகள்...!" மணியான முரசுக்கு; இனிதான நன்றிகளோடு.....

கோட்டைமுனை முத்துமணி, பதுளை.

என் இனிய முரசே!

நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் படு சூப்பர். அதிலும் மனித வெடிகுண்டு கார்லோஸின் கதை மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. ஆனாலும் இறுதியில் கார்லோஸ் எவ்வாறு பிடிக்கப்பட்டான் என்பதைச் சொல்ல ரசிகன் ஏன் மறந்தார் என்று புரியவில்லை.

ஏ.எம்.ஏ.அஹத், பழைய தபாற்கந்தோர் வீதி,
சாய்ந்தமருது-10.

அன்பின் தினமுரசே!

எதிர்பாராத விதமாக மனிதவெடிகுண்டு கார்லோஸின் கதையை முடித்துவிட்டாயே. கார்லோஸின் முடிவை மூன்று முறை படித்தேன். இதயத்தின் ஒரு மூலையில் ஏதோ இனம் புரியா இரு உணர்வுகளை ஏற்படுத்திவிட்டது கார்லோஸின் முடிவு. கார்லோஸ் இன்னும் உயிரோடுதான் இருக்கிறார் என்பது மகிழ்ச்சியாய் இருந்தாலும் அவன் வாழ்வு சிறையிலும் அவன் மனைவி (மகதலேனா)வும் மகளும் கவலை கண்ணீரோடு இருப்பார்களே என எண்ணும்போது மனசுக்கு சற்று வேதனையாகவும் உள்ளது.

கார்லோஸின் கதையினை சுவைபடத் தொகுத்து இதுவரை எம்மை மகிழ்ச்சிக் கடலில் தள்ளிய ரசிகனுக்கு பாராட்டுக்கள்.

சாந்தி, திருகோணமலை.

கார்லோஸ் தொடர் நிறைவுற்றதையிட்டு கவலையாக இருந்தது.

ஒருவனை சமுதாயமே நல்லவனாகவோ, கெட்டவனாகவோ உருவாக்குகின்றது.

கார்லோஸும் அதில் ஒருவன். கார்லோஸை இனம் காட்டிய ரசிகனுக்கு நன்றியுடன் பாராட்டைக் கூறிக்கொள்கின்றேன்.

பூலான் தேவியின் தொடரை எழுதுவதால் ரசிகனுக்கு மீண்டும் ஒரு நன்றி.

செல்வி பானுஜெலீல், கியுல, மாத்தளை.

அந்தநாள் ஞாபகம் என்று அற்புதமான படங்களை பிரசுரித்து அசத்துவதன் மூலம் பழைய நினைவுகளை சுதிமீட்ட வைக்கிறீர்களப்பா!

எம். ஸாலிஹ் அஸீம், புத்தளம்.


படிப்பகம்

www.padippakam.com

# ஆனையிறவில் இருந்து படை நடவடிக்கை

# இரு தரப்பும் சரமாரியான ஷெல் பிரயோகம்!

## 'எதிர்பார்க்கப்பட்டதுதான்' என்று புலிகள் தெரிவிப்பு

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து முன்னேறி பரந்தன் சந்தியில் படையினர் தமது நிலையைப் பலப்படுத்தியுள்ளனர். நிலைகொண்டுள்ள படையினரை இலக்காக வைத்து புலிகள் மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். ஆனையிறவில் இருந்து பரந்தன் நோக்கிச் சென்ற படையினரை ஆரம்பக்கட்டத்தில் புலிகள் கடுமையாக எதிர்த்தனர். பின்னர் நேரடி மோதலை தவிர்த்து பின்வாங்கிச் சென்றனர். படையினர் நிலைகொண்ட பின்னர் புலிகள் பாரிய தாக்குதலை நடத்தக்கூடும் என்று சில விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனையிறவில் இருந்து பரந்தன் சந்திவரை தமது தொடர்ச்சியான நிலைகளைப் படையினர் கொண்டிருப்பதால் முற்றுகைத் தாக்குதல்களில் புலிகள் ஈடுபட முடியாமல் இருக்கும்.

அதனால் மோட்டார் தாக்குதல், பீரங்கித் தாக்குதல் ஆகியவற்றில்தான் புலிகள் கூடுதலாக ஈடுபடுவார்கள்.

படையினரும் பதிலடி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது பரந்தன் சந்தி முதல் கிளிநொச்சிவரை மக்கள் குடியிருப்பது பெரும் சிரமமாகிவிடும்.

### மக்கள் தொகை

கிளிநொச்சியில் உள்ள நிரந்தரக் குடியிருப்பாளர்களின் தொகை ஒரு இலட்சத்து 60 ஆயிரம். யாழ் குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் குடியேறியிருப்போர் தொகை ஒரு இலட்சத்து 50 ஆயிரம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டம் நோக்கி செல்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சனத்தொகை மொத்தமாக இரண்டு இலட்சத்து 80 ஆயிரம். நிரந்தர குடியிருப்பாளர்கள் ஒரு இலட்சத்து 20 ஆயிரம். யாழ் குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வசிப்பவர்கள் தொகையும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களிலும் உள்ள மொத்தமான சனத்தொகை கிட்டத்தட்ட ஐந்து இலட்சத்து 50 ஆயிரம்.

யாழ் குடாநாட்டில் தற்போது கிட்டத்தட்ட நாலரை இலட்சம் மக்கள் வசிக்கின்றனர்.

யாழ் குடாநாட்டில் இருந்து பொதுமக்களை புலிகள் இடம்பெயருமாறு கூறியபோது ஒரு பகுதி மக்கள் கிளிநொச்சிக்கும், ஏனையோர் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கும் சென்றனர்.

"கிளிநொச்சியைவிட முல்லைத்தீவுதான் பாதுகாப்பானது. எனவே இடம்பெயரும் மக்கள் முல்லைத்தீவு சென்றுவிடுங்கள்" என்று புலிகள் அறிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி படையினரின் கட்டுப்பாட்டில் செல்லக் கூடியது சாத்தியம் என்று புலிகள் முன்னரே எதிர்பார்த்திருந்தனர்.

### காட்டுப்பகுதி

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து பரந்தன் சந்தி 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அந்த இடைப்பட்ட தூரம் வெளிப்பகுதி என்பதால் விமானப் படையினரின் உதவியோடு படையினரின் முன்னேற்றம் துரிதமாக நடந்தது.

பரந்தன் சந்தியில் இருந்து கிளிநொச்சி ஆறு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. எனினும் அந்த இடைப்பட்ட தூர தரையமைப்பு வித்தியாசமானது. இடைக்கிடையே அடர் காட்டுப்பகுதி, அடர்ந்த மரங்கள் போன்றவை உள்ளன.

எனவே படையினர் முன்னேறுவதாயின் புலிகளின் கடும் எதிர்ப்பை சந்தித்தபடிதான் முன்னேற வேண்டும். நிலைகொண்டபின்னரும் பக்கவாட்டில் வந்து புலிகள் தாக்கக்கூடும்.

பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவு 45 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. பெரும் வெளிகள் கடந்து, அடர்ந்த காட்டுப்பகுதிகளை சந்தித்தே முல்லைத்தீவை சென்றாக வேண்டும்.

### சாதகமான களம்

தற்போது புலிகளிடம் நீண்டதூர பீரங்கிகள், இராணுவ வாகனங்கள் என்பவை இருப்பதால் படையினரின் முல்லைத்தீவை நோக்கிய நடவடிக்கை கேள்விக்குறியே.

காடும், காடு சார்ந்த பகுதியுமான முல்லைத்தீவில் முன்னேறிச் செல்வதைவிட, நிலைகொண்டு நிற்பதுதான் போர்த்தந்திரரீதியில் மிக ஆபத்தானது.

வடக்கு-கிழக்கில் கெரில்லா யுத்தத்துக்கு வசதியான காட்டுப்புற அமைப்பு மிகச் சாதகமாக உள்ள பிரதேசம் முல்லைத்தீவாகும்.

பரந்தன் சந்தியில் படையினர் நிலைகொண்டிருப்பதால் முல்லைத்தீவுக்கான பிரதான போக்குவரத்துப் பாதைகளில் ஒன்று படையினரிடம் சென்றுள்ளது. மாங்குளம் வழியான முல்லைத்தீவு மற்றும் மன்னாருக்கான போக்குவரத்துப் பாதை புலிகளிடம் இருக்கிறது.

இச் செய்தி எழுதப்படும் வரை ஆனையிறவில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட 'சத்ய வெற்றி' நடவடிக்கையில் இரு தரப்புக்கும் குறைந்தளவு இழப்புக்களே ஏற்பட்டுள்ளன.

புலிகள் தரப்பில் இருந்து பலியானவர்கள் இதுவரை ஒன்பது பேரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இரண்டாவது நாள் சண்டையில் பலியானவர்களில் மூன்றுபேர் பெண்புலிகள் அணியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகள் கருத்து

ஆனையிறவில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை முன்னரே எதிர்பார்த்த ஒன்றுதான் என்று புலிகளின் தரப்பு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டமும் வன்னிப்பகுதி என்ற வரையறைக்கு உட்பட்டதாகும்.

அதனால் யாழ் குடாநாட்டு யுத்தத்தின் பின்னர் படையினர் வன்னியில் ஆரம்பித்துள்ள முதலாவது நடவடிக்கை என்று 'சத்யஜெய' நடவடிக்கையைக் குறிப்பிடலாம்.

வன்னியில் படையினர் முழுமையான கட்டுப்பாட்டை செலுத்தமுடியாது. வன்னியின் சில பகுதிகள் வேண்டுமானால் படையினர் வசம் செல்லக்கூடும் என்று புலிகள் முன்னர் தெரிவித்திருந்தனர். 'முரசு' அச் செய்தியை வெளியிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### படைத்தரப்பு

படைத்தரப்பை பொறுத்தவரை, முன்னர் போல் அல்லாமல் ஒரு நடவடிக்கைக்கு பதில் நடவடிக்கையாக உடனுக்குடன் செயற்படமுடிகிறது. படைத்தரப்பு உயர் மட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமே இதுவாகும் என்றும் இராணுவ விமர்சகர்கள் கூறுகின்றனர். நோக்கம் எதுவாக இருந்தாலும் உடனடியாக 'சத்ய ஜெய' நடவடிக்கைக்கு படைத்தரப்பு தயாரானமை கடந்த காலங்களில் இருந்து இராணுவத்தினரின் இயங்கு திறன் மாறுபட்டுள்ளதை காட்டுகிறது என்கின்றனர் அவர்கள்.

# பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்

## இரத்தம் வழங்குமாறு புலிகள் கோரிக்கை

முல்லைத்தீவு இராணுவ முகாம் இருந்த முல்லைத்தீவு நகரப் பகுதியும், சுற்று வட்டாரமும் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக புலிகள் அறிவித்துள்ளனர். அப்பகுதியில் இருந்து 1991ம் ஆண்டுக்குப் பின்னர் ஐம்பதினாயிரம் மக்கள் வரை இடம்பெயர்ந்து சென்றனர் என்றும், அவர்கள் மீண்டும் திரும்பிவரலாம் என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

பதினெட்டாம் திகதி முல்லைச் சமர் ஆரம்பித்ததில் இருந்து 27.7.96 வரை தமது தரப்பில் 278 புலிகள் பலியானதாக புலிகள் அறிவித்துள்ளனர். காயமடைந்தோர் விபரம் பற்றி இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை.

காயமடைந்த உறுப்பினர்களுக்காக இரத்ததானம் செய்யுமாறு புலிகள் வன்னிப் பகுதிகளில் வேண்டுகோள் விடுத்தனர். நூற்றுக்கணக்கானோர் இரத்ததானம் வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப் பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகளில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கானோர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முல்லைக் கடலில் வைத்து பத்துக் கோடி ரூபா பெறுமதியான 'ரணவிரு' பீரங்கிப் படகையும், 40 படையினரையும் மூழ்கடித்த மோதலில் தமது தரப்பில் பலியான நான்கு பேரின் பெயர் விபரங்களை புலிகள் வெளியிட்டுள்ளனர். கடற்கரும்புலி சயந்தன் (தம்பிப்பிள்ளை துரைரட்ணம், அக்கரைப்பற்று), கடற்கரும்புலி மிதுபாலன், மற்றும் கடற்புலி எழுச்சியன் (வேலுப்பிள்ளை புலேந்திரன், காரைநகர்) புலிகளின் தொண்டர் படையைச் சேர்ந்த அழகராசா கஜானந்தன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பெயர் விபரங்களே வெளியிடப்பட்டுள்ளன.

# கடல் ஏரிப்பாதை கட்டுப்பாட்டுக்குள் செல்லுமா?

பரந்தனில் நிலைகொண்டுள்ள படையினரின் அடுத்த கட்ட நகர்வுகள் எப்படியிருக்கும் என்று வெளியாகிய ஊகங்களில் சில பின்வருமாறு:

பரந்தன் சந்தியில் நிலைகொண்டுள்ள படையினர் பூநகரிக்கு சென்றடைந்தால் யாழ் குடாநாட்டுக்குள் புலிகளின் ஊடுருவல் ஓரளவு தடுக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. மொத்தமானதூரம் 26 கிலோமீட்டர். பரந்தனில் இருந்து மேற்குத் திசையாக பெரிய பரந்தன், நல்லூர் வழியாக பூநகரி இராணுவத் தளத்துக்கு சென்றடையலாம். அப்பாதை யாழ் கடல் ஏரியை அண்டிய பாதையாகும். இதன் மூலம் யாழ் கடலேரி படையினரின் பூரண கட்டுப்பாட்டில் சென்றுவிடும். அதன்மூலம் தலை மன்னாரிலிருந்து யாழ்குடாநாட்டுக்கான கடல்வழிப்பாதையையும் திறக்கக்கூடியதாக இருக்கும்.

அதேபோல ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து முல்லைத்தீவுக்கு கடற்கரையோராப் பாதை ஒன்று இருக்கிறது. ஆனையிறவில் இருந்து வண்ணான்குளம், சுண்டிக் குளம், சாலை, புத்துமத்தாளன், வலயான் மடம், கரையாமுள்ளிவாய்க்கால், வட்டுவாக்கல்லு போன்ற பகுதிகளைக் கடந்து செல்ல வேண்டும். மொத்ததூரம் கிட்டத்தட்ட 50 கிலோமீட்டர். எனினும் பரந்தன், முரசு மோட்டை, வெலிகண்டல், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு தரைப்பாதையும் படையினரின் கட்டுப்பாட்டில் ஓரளவாவது இருக்க வேண்டும். இது கடினமான காரியம் என்று நம்பலாம்.




# உல்லாசப் பயணிகள் வரவில் வீழ்ச்சி!

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் மும்முரமடைந்து வரும் போரினால், இலங்கைக்கு அந்நியச் செலாவணியைக் கணிசமான அளவு ஈட்டித்தரும் உல்லாசப் பயணத்துறை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் இங்கு வருகை தந்த உல்லாசப் பயணிகளில், இவ்வாண்டு 30 சத விகிதம் வீழ்ச்சியடைந்திருப்பதாக இலங்கை உல்லாசப் பயண சபையின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

தெஹிவளையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மன் மற்றும் ஃபிரான்ஸ் நாட்டுத்தூதரகங்கள், உல்லாசப் பயணிகளுக்கு கொழும்பு பாதுகாப்பான இடமல்ல என்று எச்சரிக்கை விடுத்துள்ளன. கடந்த வார குண்டு வெடிப்பில் பிறநாட்டு உல்லாசப் பயணிகள் எவரும் பாதிக்கப்படவில்லை என உறுதி செய்யும் பிரிட்டன் தூதராலயப் பேச்சாளர், தங்கள் நாட்டுப் பயணிகள் எவரும் கொழும்புக்கு வருவதையோ தங்குவதையோ விரும்பவில்லை என்றார்.

# முல்லைச் சமரும்-இழப்புக்களும்

முல்லைத் தீவுச் சமர் தொடர்பாக கொழும்பில் இருந்து வெளியான சிங்களப் பத்திரிகைகள் வெளியிட்ட இழப்பு விபரங்கள் பின்வருமாறு:

441 படையினரின் சடலங்களை புலிகள் இயக்கத்தினர் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைத்தனர். அதில் அடையாளம் காணப்பட்டவை 55 சடலங்களாகும். மீதிச் சடலங்களை எரித்துவிடும்படி கிளிநொச்சி அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டன.

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்தோர் தொகை 1751 ஆகும். அதில் 51 பேர் அதிகாரிகள். 175 பேர் விடுமுறையில் சென்றிருந்தனர். 54 பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடமையில் இருந்தனர். இவ்வாறு 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

'லக்பிம' பத்திரிகை 1400 படையினர் மொத்தமாக இறந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

படையினரில் 1200 பேர் பலியானார்கள். அதில் அதிரடிப்படை வீரர்கள் 230 பேர் என்று 'சியரட்ட' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

முகாம் தாக்குதல் மற்றும் இரண்டாம் கட்டச் சமர் இரண்டிலுமாக குறைந்தது 1500 படையினர் பலியாகியிருக்கலாம் என்று மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

1800 பேருக்கு மேல் பலியானதாக புலிகள் வெளியிட்ட செய்திக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

# பொட்டம்மானின் வீட்டருகில் 'டைம் பொம்'

(ஏறாவூர் நிருபர்)

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்திற்குச் சமீபமாக கடந்த 26.07.96 அன்று காலை அடுத்தடுத்து ஒரே இடத்தில், புலிகளால் நேரம் குறித்து வைக்கப்பட்டிருந்த மூன்று குண்டுகள் வெடித்தன. எனினும் இக்குண்டுகள் வெடித்த வேளையில் படையினர் எவரும் அவ்விடத்திற்கு வந்திருக்கவில்லை. வழக்கமாக வீதிப் பாதுகாப்பை வழங்கச் செல்லும் படையினர் வீதியின் மருங்குகளிலுள்ள மர நிழல்களின் கீழ் கூடி நிற்பதுண்டு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. புலிகளின் மூத்த உறுப்பினரான பொட்டம்மான் வசித்த வந்தாறுமூலையிலுள்ள வீட்டருகிலேயே இக்குண்டுகள் வெடித்தன.

இதற்கிடையே, படையினரின் கட்டுப்பாட்டில்லாத பதுளை வீதிப் பகுதிகளில் வாகனப்போக்குவரத்து கடந்த வாரம் முதலிருந்து முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் செங்கல், கருங்கல், மணல், களிமண், விறகு, மரம், நெல் என்பன அப்பகுதியூடாக ஏற்றி வருவது தடைப்பட்டுள்ளது. எனினும் மாட்டு வண்டிகள் மூலம் இப்பொருட்களைக் கொண்டு வருவது அனுமதிக்கப்படுகிறது. இந் நிலைமையால் விவசாயிகளுக்கும் ஏழைத் தொழிலாளிகளுக்கும் ஏற்பட்டுள்ள கஷ்ட நிலை குறித்து கொம்மாதுறைப் படை முகாமின் இணைப்பதிகாரியிடம் செங்கலடிப் பிரதேச செயலாளர் திரு. என். ஸ்ரீ சங்கர் விளக்கிக் கூறியுள்ளார்.

# கொடுப்பனவும்-கழிப்பனவும்

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் சம்பளக் கொடுப்பனவில் இழுபறி நிலை ஏற்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தலைமைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தியால் 11.07.96 அன்று சகல திணைக்களங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

தனது மறு அறிவித்தல் கிடைக்கும்வரை ஊழியர்களுக்கான கஷ்டகால ஊக்குவிப்புப் பணம் (ரிஸ்க் அலவன்ஸ்) கொடுக்கப் படக்கூடாது என்று தெரிவித்திருந்தார்.

பட்டுவிட்டது.

தனது அறிவித்தலையும் மீறி 'ரிஸ்க் அலவன்ஸ்' வழங்கிய திணைக்களங் களிடம் விளக்கம் கேட்டு 23.07.96 அன்று ஒரு கடிதம் அனுப்பினார் தலைமைச் செயலாளர்.

வழங்கப்பட்ட ரிஸ்க் அலவன்சுக்காக இம்மாத சம்பளப் பணத்தில் பிடித்தம் செய்துகொள்ளுமாறும் தலைமைச் செயலாளரால் உத்தரவிடப்பட்டது.

இதனை அடுத்து இம்மாத சம்பளக் கொடுப்பனவு விடயத்தில் இழுபறி ஏற்பட்டது.

25.07.96ல் வழங்கப்படவேண்டிய சம்பளம், இச்செய்தி எழுதப்படும்வரை ஒருவார காலமாக இழுபறிப்பட்டது.

சம்பளப் பணத்தில் ரிஸ்க் அலவன்ஸாக கொடுக்கப்பட்ட பணத்தை கழிப்பனவு செய்வதை ஊழியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. கழிப்பனவில் ஏற்பட்ட பிரச்சனையால் கொடுப்பனவில் ஏற்பட்டது இழுபறி.

# சினைப்பர் தாக்குதல்

யாழ்குடாநாட்டில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் தென்மராட்சி மிருசுவில் பகுதியிலும், வரணியிலும் இரு மோதல்கல் இடம்பெற்றன.

27.07.96 அன்று புலோலியில் புலிகள் நடத்திய சினைப்பர் தாக்குதலில் அப்பகுதியின் கட்டளையிடும் அதிகாரியான மேஜர் ஒருவர் பலியானார். அதேநாளில் வடமராட்சியிலும் இரு மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன. 28.07.96 அன்று மறவன்புலவு என்ற இடத்திலும் மோதல் ஒன்று இடம்பெற்றது.

# குடாநாட்டில் மோதல்

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ் குடாநாட்டில் அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

மானிப்பாய் தொகுதியில் உள்ள கட்டுடையில் படையினருக்கும், புலிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் தமது தரப்பில் ஆறுபேர் பலியானதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கப்டன் வெற்றிக்கனி (கணபதிப்பிள்ளை சிவநேசன், சுழிபுரம்,) கப்டன் சுபாஸ் (செபமாலை சுரேஸ், மானிப்பாய்) லெப்டினன்ட் தூயவன் (பற்றிக் கதிரின் சசிக்குமார், ஆனைக்கோட்டை) லெப்டினன்ட் பாரதி (தம்பிராசா கணேசமூர்த்தி, காரைநகர்) லெப்டினன்ட் பழனி (மயில்வாகனம் சுந்தரமோகன், அரியாலை) இரண்டாம் லெப்டினன்ட் நிலவன் (ஜெகநாதன் உதய சூரியகுமார்) ஆகியோரே பலியானவர்களாவர்.

# சுவிஸிலும் பார்சல் குண்டு

சுவிற்ஸர்லாந்திலும் பார்சல் குண்டு ஒன்று வெடித்ததில் இலங்கைத் தமிழ் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது: சுவிற்ஸர்லாந்தில் ரேப்பர் சுவில் என்னுமிடத்தில் கடை ஒன்று நடத்தி வருபவர் பாலா. அவரது மனைவியான கௌரியே குண்டு வெடிப்புக்கு இலக்கானார்.

தமது வீட்டில் உள்ள தபால்பெட்டியை திறந்து தமக்குரிய கடிதங்களை எடுத்துக் கொண்டிருந்தபோது, பார்சல் ஒன்றும் காணப்பட்டது. அதனை எடுக்க முற்பட்டபோதே பார்சல் வெடித்தது. உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். தீவிர சிகிச்சை நடைபெற்றது. காயமடைந்த திருமதி கௌரிபாலாவும், அவரது கணவரும் திருக்கோணமலையைச் சேர்ந்தவர்கள்.

குண்டுவெடிப்பு தொடர்பாக சுவிஸ் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இறையருள் வேண்டி ஏராளமானோர் விரைவு!

## மட்டக்களப்பிலிருந்து மட்டும் 15 ஆயிரம்பேர் கதிர்காமத்திற்கு!

(ஏறாவூர் நிருபர்)

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் கதிர்காமம் ஆடி மகோற்சவம் கடந்த 23.07.96 அன்று இரவு 8 மணிக்கு ஆரம்பமானது. இம்முறை வழக்கத்திற்கதிகமாக ஆயிரக்கணக்கானோர் இலங்கையின் போக்குவரத்துச் செய்யக்கூடிய பல பகுதிகளிலிருந்தும் கதிர்காமத் தலத்தில் குவிந்தார்கள்.

கதிர்காமம் நுழைவாயிலில் பாதுகாப்புக் காவல் அரண்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

கலை, இசை, நடன நிகழ்ச்சிகள் கடந்த வருடத்தைவிட இம்முறை அதிகளவில் இடம்பெற்றன.

மட்டக்களப்பிலிருந்து நாளாந்தம் 25 இற்கு மேற்பட்ட இ.போ.ச. பஸ்கள் சேவையில் விடுபடுத்தப்பட்டன. தனியார் போக்குவரத்து வாகனங்கள் பலவும் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்களால் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தன. இதனால் உள்ளூர் போக்குவரத்துச் சேவை முற்றாகப் பாதிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் உள்ளூர்ச் சேவையிவிடுபட்ட ஓரிரு பஸ்களில் ஏறிக் கொள்வதற்காக வீதிகளில் காத்துக் கிடந்தார்கள்.

மட்டக்களப்பிலிருந்து இம்முறை 15 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கதிர்காமத் தலத்திற்குச் சென்றிருந்தார்கள். பெரும்பாலும் ஏதோ ஒரு வகையில் வன்முறைப் பாதிப்பிற்குள்ளான இவர்கள் ஆண்டவனின் ஆறுதலைப் பெற அங்கு திரண்டிருந்தார்கள்.

கதிர்காம யாத்திரிகர்கள் நிறைந்த வாகனங்கள் ஒவ்வொரு சோதனைச் சாவடிகளிலும் சோதனை முடித்துப் புறப்படும் போது யாத்திரிகர்களால் அரோகரா கோஷம் பெரும் சத்தத்துடன் எழுப்பப்பட்டது.

கதிர்காம சுவாமி ஊர்வலத்தில் இம்முறை ஆலவட்டம் பிடிக்கப்படவில்லை. என்றாலும் அறங்காவலர் செந்தில்வேள் மாற்று ஏற்பாடாக சுவாமி வலம் வந்த பாதையெங்கும் செவ்வந்திப் பூக்களைத் தூவினார்.

www.padippakam.com

**ஹங்வெலயில் கஞ்சா பிடி:** மட்டக்களப்பு மண்முனைப் பிரதேசப் பிரிவில் தலைமையகத்தைக் கொண்டு, உடலுக்கு ஊதியம் தேடும் இந்த அரச சார்பற்ற நிறுவனம் ஹங்வெலையில் வைத்து கஞ்சாவுடன் மாட்டிக்கொண்ட சம்பவம் இப்பகுதியிலுள்ள இதர அரச சார்பற்ற நிறுவனங்களை ஒரு உலுப்பு உலுப்பிவிட்டிருப்பதாக ஊர்மக்கள் பேசிக் கொள்ளுகின்றனர். இந்நிறுவனத்தின் தலைவர் உட்பட ஐவர் கொண்ட குழு ஹனங்வெல பொலிஸாரால் வாகனப் பரிசோதனையின்போது தப்பித்துக்கொள்ள முடியாது அகப்பட்டுக் கொண்டனர். இந்நிறுவனத்தின் பெயருக்கு அவமானத்தை தேடித்தந்த தலைவரும், உத்தியோகத் தர்களும், நிறுவனத்திலிருந்து பதவி விலக வேண்டுமென கோஷம் எழுப்பப் பட்டுள்ளது.

**சுற்றி வளைவுகள்:** மட்டக்களப்பு பிரதேசத்தின் போர் அநர்த்தங்கள், தாக்குதல்களை மனதில் கொண்டு, படையினர் மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் மயிலம்பாவெளி, சின்னக்கிளாலி, வாழைச்சேனை, நாவலடி முகாம்களை அண்டியுள்ள பகுதிகளில் நெளிவு சுளிவான வளைவுகளை ஏற்படுத்தியுள்ளனர். பாதுகாப்புத் தடையாகக் கருதப்படும்-பாதுகாப்புப் படையின் இம்முயற்சி வாகனாதிகளுக்கும், பயணிகளுக்கும் பெருத்த சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. மக்கள்படும் துன்பம் சொல்லில் அடங்கா என்றால் புரியாமல் போகுமா, விபரம் அறிந்தவர்களுக்கு?

# காதோடு காது



உதாரா

**றவுண்டப்:** மட்டக்களப்பு மாநகரப் பிரதேசத்தில் சுற்றிவளைப்புகள், தேடுதல் வேட்டை என்பன 1990 ஜூன் திங்களுக்குப் பின் ஏற்பட்டதுபோல ஆகிவிட்டது. "கரும்புலி'களின் ஊடுருவல் இருப்பதால் 'றவுண்டப்' மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் நாம் தள்ளப்படுகிறோம்" என்று படையினர் கையை விரிக்கின்றனர். இவர்களின் கதையிலும் கருத்துண்டு என்கின்றனர் மக்கள். ஏனெனில் கடந்த இரண்டொரு வாரங்களுக்குள் மட்டக்களப்பு, புளியந்தீவுப் பகுதிக்குள் மட்டும் நான்குக்கு மேற்பட்ட தற்கொலைப்படை 'கரும்புலிகள்' பிடிபட்டுள்ளனர் என்றால் நம்புவீர்களா?

**தற்கொலைப்பயம்:** மட்டக்களப்புப் பகுதியில் கரும்புலிகளின் ஊடுருவல் இருப்பதாகச் சந்தேகிப்பதால வீதியில் நடமாடும் வழிப்போக்கர்களும் பயப்பீதியுடன் வீதியில் விரைவாக நடக்கிறார்கள். எந்தப் புற்றுக்குள் எந்தப்பாம்பு இருக்குமென யாருக்குத் தெரியுமெனக் கேள்வி கேட்கிறார்கள்.

# தேனகப் புதினம்

**விசாரணையும் அழைப்பும்:** மட்டக்களப்பு மேற்குப்புறப் பிரதேசத்தில் தளம் அமைத்திருக்கும் புலிகள், விசாரணை, அழைப்பு என்று பலரை தமது காலடிக்கு வரச் செய்கின்றனர். பொதுமக்களும் 'புலிக்கும் காவல், பூனைக்கும் காவல்' என்றாகி விட்டது.

**விபுலானந்தர் ஒரு கைதி:** மட்டக்களப்பு கோட்டடி மைதானத்தில் அமைந்துள்ளது முத்தமிழ் வித்தகன் விபுலானந்தரின் திருவுருவச்சிலை. ஜூலை 19ம் நாள் அவரின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து பெருமைப்படுத்திய மாநகர முதல்வர், அடிகளாரும் இன்று சிறைவைக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னார். உயரமான கம்பி வேலிக்குள் அடிகளாரின் சிலை அகப்பட்டுப் போனதால் பாதுகாப்பு வலையத்திற்குள்ளே அவர் பத்திரமாக இருந்து வருகிறார். மாலை அணிவித்து மகிழ்வுப் படுத்துவதற்கு பாதுகாப்புப்படையினர் 'உத்தரவு' பெறவேண்டும். இல்லை என்றால் மாலையும் இல்லை. மரியாதையும் இல்லை.

# ஊக்குவிப்பு பணத்துக்கு என்ன நடந்தது?

## பாதிக்கப்பட்ட பிரதேச ஆசிரியர்கள் வேதனை

அரச பரிபாலன அமைச்சின் செயலாளர் ஆர்.எஸ்.ஜெயரத்த அவர்களினால் ஒப்பமிடப்பட்ட 29/95 இலக்கம் கொண்ட 95.09.25ம் திகதியிடப்பட்ட சுற்று நிருபத்தின்படி அனுராதபுர மத்திய நுவரகம் பிரிவு பிரதேச செயலாளர் சபைக்குட்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய பாதிக்கப்பட்ட பிரதேச செயலகங்களில் கடமை புரியும் அரசாங்க ஊழியர்களுக்கான ஊக்குவிப்புப் பணம் 25%த்தை இதுவரை வழங்குவதற்கான ஏற் பாடுகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

1995 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை எனவும் 1996 முழு வருடத்திற்கெனவும் அரசு அறிவித்தும் இதுவரை ஆசிரியர்கள் விடயத்தில் இவ்வலவன்ஸ் எட்டாப் பழமாகவே இருக்கிறது.

இது விடயமாக திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியும் இதுவரை மாகாண சபையோ அல்லது பதவி வகிக்கும் மக்கள் பிரதிநிதிகளோ வருட அலவன்ஸ் கிடைப்பதற்கான எந்த ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கவில்லை. இதனால் அப்பகுதி ஆசிரியர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

1996ல் அறிவித்த வானொலி அறிவித்தலுக்கிணங்க மத்திய நுவரகம் பிரிவைச் சேர்ந்த பிரதேச செயலாளர் அலுவலக ஊழியர்கள், ஏனைய அரச ஊழியர்களுக்கு 1995ம் வருடத்திற்கான மற்றும் 1996 ஜூன் மாத வரையிலான கொடுப்பனவுகள் வழங்கப் பட்டிருக்கின்றன.

இதில் ஆசிரியர்கள் மட்டும் அரசினாலும் மாகாண சபையினாலும் ஏன் புறக்கணிக்கப்படுகின்றனர் என்பது புரியாத புதிராகவே உள்ளது. மேலும் அண்மையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய ஆசிரியர்களுக்கெதிராகவும் ஒழுக்காற்ற நடவடிக்கை எடுக்க திரை மறைவில் முயற்சிகள் நடப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை!

## மன்னாரில் மின்சார சீர்கேடு!!

(மன்னார் நிருபர்)

மன்னார்ப் பகுதியில் நீண்டகாலமாக மின்சார விநியோக நடவடிக்கையில் சீர்கேடு காணப்படுகிறது.

இதனை நிவர்த்திக்க சுமார் 65 இலட்சம் ரூபா செலவில் புதிய இரு ஜெனரேட்டர்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் கொண்டு வரப்பட்டன.

எனினும் இதன் பயனை இப்பகுதி மக்கள் பெற முடியாதுள்ளனர். அதிகாரிகளிடையே காணப்படும் கயிறிழுப்பு மற்றும் பலப்பரீட்சையினாலேயே இந் நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் நகர், பேசாலை என்பவற்றிற்கு பிரதேச சபையே இதுகால வரையிலும் இவ்விநியோகத்தை மேற்கொண்டு வந்தது. இதனை இலங்கை மின்சார சபை பொறுப்பேற்பதற்கான நடவடிக்கையும் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

இதில் ஏற்பட்ட இழுபறி நிலை காரணமாக இத்திட்டம் கை கூடவில்லை.

இருந்தபோதிலும் அதிகாரிகளின் கயிறிழுப்பும் இழுபறி நிலையும் இப்பகுதி மக்கள் சீரான மின்சாரத்தைப் பெற முடியாமல் தடுக்கின்றன.

கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை. மன்னார் மக்களின் இப்பரிதாப நிலையை யாரிடம் கூறுவது?

# இலக்கமில்லாத இல்லங்கள்

(அக்குறணை நிருபர்)

அக்குறணை பஸார் வீதி, தெலும்புகஹவத்தை, புளுகொஹதன்ன, மல்வானஹின்ன உள்ளடங்கிய ஏனைய பகுதிகளில் உள்ள வீடுகளில் வீட்டிலக்கம் தெரியப்படுத்தப்படாமையால் தபால் சேவகர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர், என சம்பந்தப்பட்ட தபால் நிலைய பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் கடித விநியோகம் தாமதப்படுவதுடன் சில கடிதங்கள் கொடுபடாமலேயே தபால் நிலையத்திற்கு மீள வருகின்றன.

அத்துடன் பெயர்கள் கஷ்டமான சிங்களப் பகுதிகள் உள்ள கிராமத்தவர்களும் ஏனையோரும் அவ்வப்பகுதி தபால் நிலைய குறியீடுகளை அறிந்து அந்த இலக்கங்களை தவறாமல் இட்டால் ஊரின் பெயர்கள் மாறுபட்டாலும் கடிதங்கள் போய்ச் சேர வாய்ப்புண்டாகும். தமிழில் விலாசமெழுதி தபால் நிலைய எண்ணைக் குறிப்பிட்டால் தமிழ் தெரியாதவர்களும் குறிப்பிட்ட நிலையத்திற்கு அனுப்பிவிடுவார்கள். எனவே பொதுமக்கள் இவ்விடயத்தில் அக்கறை காட்டுவது சிறந்தது.

# கிரிக்கெட் போட்டியில் வெற்றி

அக்குறணை அல் அஸ்ஹர் தேசியப் பாடசாலைக்கும் மடவளை மதீனா மத்திய கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 50 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் சிங்கர் கிண்ண கிரிக்கெட் போட்டியில் மதீனா மத்திய கல்லூரிக்கு எதிராக ஆடிய அக்குறணை அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலை 30 மேலதிக ஓட்டங்களினால் வெற்றியீட்டிக் கொண்டது.

மடவளை மதீனா மத்திய கல்லூரி 50 ஓவர்களில் 7 விக்கட்டுகள் இழப்பிற்கு 200 ஓட்டங்களைப் பெற்றது. அக்குறணை அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலை 50 ஓவர்களில் 6 விக்கட்டுக்கள் இழப்பிற்கு 230 ஓட்டங்களைப் பெற்றது.

அக்குறணை அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலை அணியில் எம்.ஏ.எம்.ரியாஸ், எம்.ஐ.பைருஸ் ஆகியோர் சிறப்பாக துடுப்பெடுத்தாடி முறையே 67, 63 ஓட்டங்களைப் பெற்றனர். இதே பாடசாலை அணியில் எம்.என்.எம். அஸ்லம் சிறப்பாக பந்து வீசி 60/4 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

# பிறப்பது புலிக்குட்டிகளா?

(குருநாகல் நிருபர்)

ரித்கமை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் தமிழ் தாய்மார்களுக்கு பிறப்பது புலிக்குட்டிகளா? இப்படிக் கேள்வியெழுப்புகின்றனர் இப்பகுதி வாழ் தமிழ் மக்கள்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: பிரசவத்திற்காக அனுமதிக்கப்படும் தமிழ்த் தாய்மார்களுக்கு புலி நாமம் சூட்டப்பட்டு தகுந்த கவனிப்பும் கொடுக்காமல் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் இவ் வைத்தியசாலை ஊழியர்கள் நடந்து கொள்வது பலருக்கு பெருந்தொல்லைகளை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்லாமல் குழந்தை பிறந்தவுடன் அதை எடுத்து தாயிடம் "இதோ உன் புலிக்குட்டி" எனக் காட்டப்படும் சந்தர்ப்பமும் பல ஏற்பட்டுள்ளன.

இப்பகுதியில் வாழ்பவர்கள் பலர் தோட்டத் தொழிலாளர்கள். இவர்களுக்கு இப்படியான இகழ்வை ஏற்படுத்துவது மன்னிக்க முடியாதது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். நீதியான விசாரணை நடைபெறுமா? ஏங்கி நிற்கின்றனர் இப்பகுதிவாழ் தமிழ்மக்கள்.

# நஷ்ட ஈடு வழங்குவதில் தாமதம்!

(மன்னார் நிருபர்)

கடந்த கால வன் செயலினால் பாதிக்கப்பட்ட மன்னார்ப்பகுதி அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு இதுவரை கிடைக்காமையினால் இவர்கள் அதிருப்தியுற்ற நிலையில் உள்ளனர்.

கடந்த 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் இப் பகுதியில் சிவில் நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும். நஷ்டஈடு வழங்கப்படுவதில் தாம்தம் காட்டப்பட்டு வருகின்றது.

இதனால் இங்குள்ள அலுவலகங்களில் கடமை புரியும் அரச ஊழியர்கள் தாம் எதற்காகப் புறக்கணிக்கப்படுகின்றோம் என்பதை அறிய ஆவலாகவுள்ளனர்.

காலங்காலமாக மன்னார்ப் பகுதி பல வழிகளாலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. இப்பகுதி மக்களின் குறை தீர்க்க எவருமே முன்வராததையிட்டு இவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# "இந்த யுத்தம் வெல்லப்பட முடியாதது!"

## முன்னாள் விமானப்படைத் தளபதி

"இன்றைய அரசு சமாதானத்துக்காக யுத்தம் என்ற கோஷத்தோடு தொடரும் இந்த யுத்தமானது என்றும் வெல்லப்பட முடியாதது. உலகில் எந்தவொரு நாடும் சமாதானத்துக்காக யுத்தம் செய்ததாக வரலாறு இல்லை. எனவே இந்த யுத்தம் என்றும் வெல்லப்பட முடியாதது." இப்படிக் கூறினார் முன்னாள் விமானப் படைத் தளபதி ஏயார் வைஸ்மாஷல் ஹரி குணதிலக அவர்கள்.

இலங்கையில் நீதிக்கும், சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் விசேட விருந்தினராக வந்திருந்த அவர் மேலும் தனதுரையில், "சூரியக்கதிர்-1" ஜனாதிபதி தான் பதவி விலகக் கொடுத்த காலக்கெடு முடியும் தறுவாயில் ஆரம்பிக்கப்பட்டது. சூரியக்கதிர்-2 உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெற வேண்டிய தருணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவை அனைத்தும் மக்களை திசைதிருப்ப மேற்கொண்ட முயற்சிகளேயன்றி, இராணுவ நடவடிக்கை அல்ல. இராணுவ வல்லுநர்கள் செய்யவேண்டிய தொழிலை இன்று அரசியல்வாதிகள் மேற்கொள்கின்றனர். தாங்கள் உழைத்துக்கொள்ள யுத்தம் அவர்களுக்கே அவசியம். பொதுமக்களுக்கு அல்ல. எனவே சமாதானம் ஏற்பட பேச்சுவார்த்தையே அவசியம்" எனத் திடமாகத் தெரிவித்தார் முன்னாள் விமானப்படை தளபதி.

இரத்மலானை கம்கறு செவன மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து மூவின மக்களும் கலந்து கொண்டமை, எதிர்காலத்தில் சமாதானம் அவசியம் என்பதை எடுத்துக்காட்டுவதாய் அமைந்திருந்தது. பல அரசியற் பிரமுகர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டும் பலர் கலந்து கொள்ளாமை மிக்க வேதனையளிப்பதாய் உள்ளதாக சங்கத்தின் செயலாளர் தெரிவித்தமையும் கவனிக்கத்தக்கது.

(குருநாகல் நிருபர்)


**Bright ன் தபால் மூலம் கல்வித்திட்டம்**

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.

பெயர்..............................

விலாசம்..............................

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
COLOMBO 11. TEL : 434770

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S. மணி**

மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030

**என்றும் சந்திக்கலாம்**

எங்களது வாடிக்கையாளர்களின் வீண் சிரமத்தையும் அலைச்சலையும் கருத்தில் கொண்டு திரு. P.K. சாமி அவர்களிடம் நுவரெலியாவிலும் கொழும்பிலும் வரும் வாடிக்கையாளர்கள் நேரடியாக அவரவர் பிரச்சனைகளைக் கூறி தீர்வுக்கான புதுமுறையாக செட்லைட் நெட்வேர்க், T.V. மூலம் திரு.P.K. சாமியுடம் கலந்துரையாடலாம்.



**3 மாதத்தில் தீர்வு**

கணவன்-மனைவி பிணக்கு, பிரிந்தவர் ஒன்று சேர, காதலித்தவர் திருமணம் புரிய, தொழில் உயர்ச்சியை மேம்படுத்த, வீழ்ச்சியுற்ற தொழிலை வீழ்ச்சி அடையா வண்ணம் இருந்த நிலைக்கு 3 மாதத்திற்குள் கொண்டு வர, எண்ணிய தொழில் கிடைக்க, திருமணமே ஆகாதென விரக்தி உற்றோருக்கு தெய்வீக வரத்தால் திருமணம் நடைபெற இன்னும் முனிவர்களால் அருளிய ஜீவிய கால காண்டம்-நாடி ஜோதிடம் எழுதிக் கொள்ள, அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் காது கேளாதவர், கண் தெரியாதவர், வாய்பேச முடியாதவர்கள், பாரிச வாதம், முடக்கு வாதம், இடுப்பு வலி, அஸ்மா, படபடப்பு, வீரியமின்மை, பெண்களுக்கு வெள்ளைபடுதல், மாதவிடாய் கோளாறு, மனநோய் (ஹிஸ்டீரியா) குழந்தை பேறின்மை, பாலியல் குறைபாடுகள், ஞாபக சக்தி இன்மை, நித்திரை இன்மை, பசியின்மை, தலை முடி உதிர்தல், தோல், நோய் இப்படி தீர்க்க முடியாத வியாதிகளுக்கு மனோதத்துவ ரீதியிலும், வைத்திய முறையிலும், மாந்திரிக முறைகளிலும் வெற்றி கண்டவர். எத்தனை எத்தனையோ பேர்-இதைவிட பெரிய சக்தி வந்தாலு வாழவைக்கும் மகாசக்தி ஸ்ரீ துர்கா தேவியின் அருளால் வசதி அற்றோருக்கு வல்மாத கடைசியும் கொழும்பிலும், நுவரெலியாவிலும் இலவச அற்புத ஞான தியான பூஜை நடைபெறுகிறது. தேவைகளுக்கு முன் அறிவித்தலுடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு:-

டாக்டர் P.K.SAAMI (J.D.G.A.N) & J P, மலையாள மாந்திரீக உச்சாடபீடம், 162, கொட்டாஞ்சேனை வீதி, மே பீல்ட் ரோட், கொழும்பு-13.
தொலைபேசி - 01.342463/64 344832 விசேட பிரிவு - 344831 EXT FRS



**மலையாள மாந்திரீகம்**



நம்பினார் கெடுவதில்லை என்ற நற்பெயரை 33 வருடமாக தன்னகத்தே கொண்டுள்ள எமது நிறுவனம் என்றென்றும் நற்பெயரை பெற்றுள்ளது. என்னையும் எமது நிறுவனத்தையும் நம்பி பணம் அனுப்பி வைப்போருக்கு அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவே செயல்படுகிறோம். வாடிக்கையாளர்களை கண்ட மாத்திரம், "இதுவே உங்கள் பிரச்சினை" என திட்டவட்டமாக என்னால் கூறமுடியும். இதையொட்டியே மக்கள் கூட்டம் குவிந்த வண்ணம் உள்ளது. வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எந்நேரமானாலும் என்னோடு உரையாட அதிக செலவில் T.O.D. CALL ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதன் மூலம் வெளிநாட்டவர் தங்கு தடையின்றி உரையாடலாம்.

தொடர்புகளுக்கு:-

விசேட வெளிநாட்டு தொலைபேசி :-
TEL 00941344831 EXT. FRS
FAX 00941342464


மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி டாக்டர் பி.கே.சாமி (J.D.G.A.N.)JP.
பி.கே.சாமி அஸோசியட் பிரைவேட் லிமிட்ட்,
இல,162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் ரோட், கொழும்பு-13.

**விளம்பரப் பகுதி**



**"மந்திரயோகி" மாந்திரீக மருத்துவம்**

காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியங்களிலும் தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன்-மனைவி குடும்பப் பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், தீயசக்திகளின் தொல்லைகள், தீவினைகளினால் தீராத உடல்-மனநோய்களும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவன் அருளி, முனிவர்கள் கையாண்ட, மர்மமான மருந்து, மந்திர ஐந்திர வசிய தாயத்துக்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ ஆண்-பெண் ஜனராஜ வசியங்கள், பாதுகாப்பு ரட்சைகள், வேறு நன்மையான காரியங்களுக்கு, வேண்டிய மந்திரம் வசியங்கள் செய்துகொள்ள அரசாங்கத்தினால் பதிவுசெய்யப்பட்ட மலையாளம் புகழ் மஹாசக்தி உபாசகர் மந்திரயோகியிடம் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் சம்பந்தப்பட்டவர்களினதும், தாய் அல்லது தந்தையர்களினதும் பெயர்களுடன் தங்கள் கோரிக்கைகளை எழுதி 10 ரூபா 50 சத முத்திரைகள், 2 பதிவுத்தபாலில் வைத்து அனுப்பி தெய்வீகமருத்துவ ஆலோசனைகளை பதிவுத்தபாலிலும் இறை பரிகாரப்பொருட்களை (வி.பி.பி.) பார்சல்களிலும் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றலாம். YOGI. DR. SACKTHYANANTHEBABA என்ற பெயருக்கு விரும்பிய குருதட்சனை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும். விலாசம்:-



YOGI. DR. SACKTHYANANTHEBABA
INDIAN CLINIC, GURUSACKTHY CENTRE,
KALLADY-BATTICALOA (P.O), SRI LANKA.
குருசக்தி நிலையம், கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.



www.padippakam.com

# கொழும்பு குண்டுவெடிப்பு காரியமும் காரணமும்

**தெற்கிலுள்ள தனது விரோதிகளையும் புலிகளையும் முடிச்சுப்போடுகிறது அரசு. அரச சார்பு சக்திகளில் பழிபோடுகிறார்கள் புலிகள். குண்டுவெடிப்பால் நஷ்டம் யாருக்கு. இலாபம் யாருக்கு?**

—நாரதர்

எக்ஸ்ரே ரிப்போர்ட்



கொழும்பு தெகிவளைக் குண்டு வெடிப்பு தலைநகரை மட்டுமல்ல, முழுநாட்டையுமே ஒரு உலுக்கு உலுக்கி விட்டது.

தணிக்கை விதிகள் வடக்கு-கிழக்கு குண்டு வீச்சுக்கள், பொதுமக்களின் உயிரழிவுகள் பற்றிய செய்திகள், மற்றும் புகைப்படங்கள், வடக்கு, கிழக்கு போர் முனையில் படைத்தரப்புக்கு ஏற்படும் பின்னடைவுகள் போன்றவற்றையே விரும்பிச் சாப்பிட்டுவிடுகின்றன.

தெகிவளைக் குண்டுவெடிப்புக்கு முன்பாக முல்லைச் சமரும், அதையொட்டி நடந்த குண்டுவீச்சுக்கள், ஷெல்தாக்குதல்கள் தொடர்பான விபரங்கள் உள்நாட்டு பத்திரிகைகளில் வெளியிடமுடியவில்லை.

கொழும்பு குண்டுவெடிப்பு நடைபெற்றவுடன் அதன் கோரங்கள் அப்பட்டமாக தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்டன.

மறுநாள் அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் முதற்கொண்டு சகலவற்றிலும் துண்டான கால்களை தூக்கிச்செல்லும் மிகக் கோரமான காட்சி உட்பட, நெஞ்சை உலுக்கும் வகையிலான புகைப்படங்கள் மிகக்கவனமாக தெரிவு செய்யப்பட்டு வெளியாகின.

இன உணர்வுகள் தூண்டப்படுவதும், அதனால் நாட்டில் பதட்டம் ஏற்படுவதைத் தடுப்பதும் தணிக்கைக்கான முக்கியமான காரணங்களில் ஒன்று என்று முன்னர் சொல்லப்பட்டதாக ஞாபகம்.

தணிக்கை புலிகளுக்கு எதிரானது. புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதைச் சொல்வதும் புலிகளுக்கு சார்பானதாகி விடும். புலிகள் தரப்பில் ஆயிரம்பேர் பலியானால் அதனை வெளியிடலாம். படையினர் தரப்பில் ஆயிரம் பேர் பலியானால் அதனை வெளியிடக்கூடாது என்பதுமாதிரியான ஒரு போக்கே காணப்படுகிறது.

சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு வடக்கு-கிழக்கு போர்முனையில் ஏற்படும் பொதுமக்களின் உயிரிழப்புக்களைப் பற்றி செய்தி வெளியிடமுடியாமை ஒரு பொருட்டல்ல.

முல்லைத்தீவு போர்முனைச் செய்திகளை வெளியிட்டு வாசகர்களை திருப்தி செய்ய முடியாமல் போனதும், அரசாங்கத்தை ஒரு பிடி பிடிக்க முடியாமல் போனதும்தான் மகா கவலை.

சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டன.

வடக்கு-கிழக்கில் புலிகளை வெல்லவும் வேண்டும். அதே நேரம் அதன் பயன் முழுக்க அரசாங்கத்திற்கு போய்விடவும் கூடாது. அரசாங்கத்திற்கும் எதிரான, அதே சமயம் அரசியல் தீர்வுக்கும் எதிரான பேரினவாத சிந்தனையின் இரட்டைப் போக்கு அப்படித்தான் இருக்கிறது.

புலிகள் வெல்லப்படவேண்டும் என்ற கருத்தில், தமிழர்களின் பலம் அடக்கப் படவேண்டும் என்பதும், அரசாங்கம் தனது இமேஜை உயர்த்திக் கொள்ளக்கூடாது என்ற கருத்தில் தங்கள் அரசியல் நலன் பாதிக்கப் பட்டுவிடும் என்ற வடிகட்டிய சுயநலமும் அந்த இரட்டைப்போக்கின் உள்ளடக்கங்களாக இருக்கின்றன.

அரசாங்கமும் அதற்கேற்பவே தனது அணுகுமுறைகளை வைத்திருக்கிறது. யாழ் குடாநாட்டு யுத்தத்தின் பின்னர் அரசாங்கத்தை கையில் பிடிக்கமுடியவில்லை.

ஒரு பலமான சண்டியனை அடித்து வீழ்த்திவிட்ட மற்றொரு சண்டியன், நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு எல்லோரையும் ஒரு முறைப்பான பார்வை பார்ப்பான். அரசாங்கமும் தனது தென்னிலங்கை அரசியல் எதிரிகளையும் அப்படித்தான் முறைத்துக்கொண்டது. தமிழ் கட்சிகளையும் ஒரு அலட்சியப் பார்வை பார்த்தது. 'அடியைப் பார்த்தியா' என்ற விலாசப் பார்வை.

அந்த அணுகுமுறைதான் அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் சக்திகளை மட்டுமல்ல, புலிகளுக்கு எதிரான தமிழ் கட்சிகளைக் கூட புலிகளின் தாக்குதல் ஒன்றை மானசீகமாக எதிர்பார்க்க வைத்திருந்தன.

வடபுல வெற்றியைவைத்து தம்மை அரசியல்ரீதியாக ஓரம் கட்டிவிடுமோ ஆளும் கட்சி என்று அதற்கு எதிரான சிங்கள கட்சிகளுக்கும் கவலை.

தமக்குரிய மதிப்பும் புலிகளின் வீழ்ச்சியோடு போய்விடுமோ என்பது தமிழ் கட்சிகளின் கவலை.

முல்லைத்தீவு முகாமை புலிகள் வீழ்த்திய செய்தி மேற்கண்ட இரு தரப்புக்குமே உள்ளூற மகிழ்ச்சியான செய்திதான்.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு தலைகால் புரியாத உற்சாகம்.

முல்லைச் சமரில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட பின்னடைவை பெரும் பிரசாரமாக்குவதற்கு தாரை தப்பட்டைகள் சகிதம் தயாரானது ஐக்கிய தேசியக் கட்சி.

பொதுஜன முன்னணி அரசாங்கம் அப்படி ஒன்றும் திறமையாக யுத்தம் நடத்தவில்லை. யாழ் குடாநாட்டை பிடித்தது இருக்கட்டும், முல்லைத்தீவு முகாமை கோட்டை விட்டுவிட்டார்கள் பாருங்கள் என்று பிரசாரம் செய்யக் கிடைத்த வாய்ப்பு. தவறவிட விரும்பவில்லை

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டத்தில் மண் விழுந்தது போல கொழும்பு குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

அந்தக் குண்டுவெடிப்பு முல்லைச் சமரைப் பின்தள்ளிவிட்டு புதிய சர்ச்சை ஒன்றைக் கிளப்பியது.

குண்டுவெடிப்புக்கு யார் காரணம்?

புலிகளும் தெற்கிலுள்ள அரச விரோதிகளும் சேர்ந்து சதி செய்வதாக குற்றம் சாட்டியது அரச தரப்பு.

தெற்கிலுள்ள அரச விரோதிகள் என்று பொதுப்படையாக சொன்னாலும் அந்த குற்றச்சாட்டு குறிவைத்தது ஐ.தே.கட்சியைத்தான்.

கொழும்பு குண்டுவெடிப்புக்கு யார் காரணம்? தெற்கிலுள்ள அரசாங்க விரோதிகளாகவும் இருக்கலாம் என்று சில விமர்சகர்களும் மிகச் சுலபமாக கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

மிகத் தவறான கணிப்பு அது.

முல்லைத்தீவு யுத்தத்தில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட பின்னடைவை வைத்து பெரும் சர்ச்சைகளை கிளப்ப நினைத்திருந்தது ஐக்கிய தேசியக் கட்சி.

தென்பகுதியில் உள்ள அரசாங்க எதிர்ப்பு சக்திகளுக்கு வடபுலப் போரில் அரசாங்கத்திற்கு ஏற்படும் தோல்விகளை பற்றிப் பிரச்சாரம் செய்வதுதான் பயனுடைய காரியம்.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியை எடுத்துக் கொண்டால், ஜனாதிபதி சந்திரிக்கா யுத்தத்தில் வெற்றிபெற்றுவரும் தலைவர் என்ற இமேஜை சேதப்படுத்துவதான் முக்கிய இலக்கு.

எனவே-புலிகள் ஒரு பலமான தாக்குதலை தொடுக்கமாட்டார்களா என்பது நீண்டகால எதிர்பார்ப்பு. அதனால் முல்லை முகாம் தாக்குதல் அக்கட்சிக்கு பிரசாரரீதியில் கிடைத்த ஒரு வரப்பிரசாதம்.

அதனால்தான் பாராளுமன்றத்தில் பெரும் விவாதம் கேட்கப்பட்டது. அதற்கு அனுமதியும் கிடைத்தது.

தெகிவளைக் குண்டுவெடிப்பை அடுத்து ஐ.தே.கட்சி விவாதத்தில் இருந்து பின்வாங்கியது. ஒரு விரிவான அறிக்கை மட்டும் வெளியிட்டுவிட்டு அமர்ந்துவிட்டார் ரணில்.

உடனடி விவாதத்தை ஐக்கிய தேசியக் கட்சி தவிர்த் தமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1. தெகிவளை குண்டுவெடிப்பால் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்ட நேரத்தில் முல்லைச் சமர் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தால் சிங்கள மக்களிடம் அதிருப்தி ஏற்படலாம்.

2. பாராளுமன்ற விவாதம் காரசாரமாகி அதன்பிரதிபலிப்பு பதட்டமாக மாறினால் தமிழ் மக்களின் அதிருப்தியை சம்பாதித்து வாக்கு வங்கிகளை இழக்க நேரலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல எந்தவொரு அரச விரோத சக்திகளும் முல்லைத்தீவு மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மக்களின் கவனத்தை திசை திருப்ப விரும்பியிருக்கப் போவதில்லை.

ஏனெனில் அதனால் அரசாங்கத்திற்குத்தான் இலாபம். தெகிவளை குண்டுவெடிப்பு நடை பெற்றவுடன் முல்லைச் சமர் செய்திகள் முக்கியமிழந்திருந்தன

புலிகள் அரச சார்பு சக்திகளில்தான் குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

ஆனால், அரச சார்பு சக்திகள் தமது தலையில் தாமே மண் அள்ளிப்போட துணிந்திருக்கலாம் என்று ஒரு போதும் நம்ப இடமில்லை.

குண்டுவெடிப்பால் புலிகளுக்கு கெட்ட பெயர் ஏற்படலாம் என்று கருதியிருக்கலாம் அல்லவா? என்று ஒரு வாதம் எழலாம்.

கெட்டபெயர் புலிகளுக்கு ஏற்பட்டாலும், ஒரு இனப் பதட்டம் ஏற்பட்டிருந்தால் வெளியுலகில் புலிகளைவிட கெட்டபெயர் அரசாங்கத்திற்குத் தான் ஏற்பட்டிருக்கும்.

தமிழ் மக்களுக்கு நாட்டில் பாதுகாப்பில்லை. எந்தவொரு அரசாங்கத்தாலும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கமுடியாது என்ற கருத்துக்கு மீண்டும் ஒரு வலு கிடைத்திருக்கும்.

மிக முக்கியமாக தமிழ்நாட்டில் 1983இல் ஏற்பட்டது போன்ற ஒரு அனுதாப அலை தோன்றியிருக்கும்.

எனவே அரச சார்பு சக்திகளின் வேலை என்ற தோரணையில் புலிகள் குற்றம் சாட்டியிருப்பது பொருத்தமாகப்படவில்லை.

குண்டுவெடிப்பால் இரண்டு தரப்புக்குத்தான் உடனடி இலாபம்.

ஒன்று, ஆளும்கட்சி சார்பாளர்கள்.

இரண்டு, புலிகள்.

முல்லைத்தீவு இழப்புக்களை திசைதிருப்ப அரசாங்க சார்பாளர்கள் விரும்பியிருக்கலாம் அல்லவா என்றொரு கேள்வியும் இருக்கிறது.

முல்லைத்தீவு மோதல் ஆரம்பித்து இரண்டாவது மூன்றாவது நாளே அங்குள்ள நிலவரத்தை விமானப்படை மூலமாக அரசாங்கம் அறிந்திருக்காது என்று சொல்ல முடியாது.

முகாமை புல்டோசர் மூலம் புலிகள் மூன்றாவது நாளன்றே தரைமட்டமாக்கி விட்டனர்.

நாலாவது நாளுக்குப்பின் முல்லைச் சமர் ஒரு பேருக்குத்தான் நடைபெற்றது.

கண்ணிவெடி இருக்கிறது. புலிகள் தாக்குகிறார்கள் அதனால்தான் மெதுவாக முன்னேறுகிறோம் என்று படைத்தரப்பு சொன்னதில் பாதிதான் உண்மை.

டாங்கிகளும், கனரக ஆயுதங்களும் கொண்டு சென்று இறக்கப்பட்டபோதும், இரண்டு கிலோமீற்றர் தூரத்தை கடக்க இரண்டு நாள் தேவைப்பட்டது ஏன்?

காரணம் தெளிவானது. அங்கே போக்குக் காட்டியபடி ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து ஒரு நடவடிக்கையை ஆரம்பிக்கத் திட்டமிட்டு, தயாரிப்புக்களும் செய்து முடிக்கப் பட்டன.

முல்லை முகாம் இழப்புக்கு பதிலடியாகவும், அச்செய்திகளின் முக்கியத்துவத்தை குறைக்கும் தந்திரமாகவும் 'சத்ய வெற்றி' ஒப்பரேசனுக்கு திட்டமிடப்பட்டது. முல்லை முகாம் இல்லையென்று தெரிந்தவுடனேயே அரசாங்கம் போட்ட திட்டம் அது.

ஒரு பாரிய பின்னடைவை, மற்றொரு பாரிய நடவடிக்கை மூலம் சரிசெய்து தனது இமேஜை காத்துக்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுவிட்டது. எனவே வேறு வகையிலான குழப்பங்களை உருவாக்கி தமக்கும் கெட்ட பெயர் சம்பாதிக்க அரச சார்பு சக்திகள் முயன்றிருக்க முடியாது. அதுதவிர கொழும்பில் பதட்டநிலை ஏற்பட்டு நாடெங்கும் அது பரவியிருந்தால் வடபுல நடவடிக்கைக்கு பயன்படுத்தும் இராணுவத்தினரில் ஒரு பகுதியை திருப்பி அழைத்திருக்கவும் வேண்டியநிலை ஏற்பட்டிருக்கும்

எனவே-குண்டுவெடிப்புக்கு காரணம் அரச சார்பு சக்திகள் என்ற குற்றச்சாட்டும் அடிபட்டுப்போகிறது.

1983 ஜூலை 23ம் திகதிதான் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் புலிகளின் வெற்றிகரமான கண்ணி வெடித் தாக்குதல் இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்தே நாடெங்கும் ஜூலை 24ம் திகதி இனக்கலவரம் உருவாகியிருந்தது. அந்த இனக்கலவரம் தான் இந்திய அரசு ஈழப் போராளிகளுக்கு ஆயுதங்களும், பயிற்சியும் வழங்குமளவுக்கு இட்டுச்சென்றது.

ஜூலை 83 இனக்கலவரத்தால் தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். அதே வேளை அந்த பாரிய சோகத்திலும் ஒரு இலாபம் என்னவென்றால் போராளி இயக்கங்கள் திடீர் வளர்ச்சி அடைந்தன. ஆயிரக்கணக்கான புதிய உறுப்பினர்கள் இயக்கங்களில் சேர்ந்தனர்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட அனுதாப அலையானது போராளிகளுக்கு உதவ மறுப்பவர்கள் தமிழின உணர்வு இல்லாதவர்கள் என்று கருதுமளவுக்கு சென்றிருந்தது.

தற்போது புலிகளுக்குள்ள பிரதான பிரச்சனை தமிழ்நாட்டில் அனுதாப அலை குறைந்திருப்பதும், சர்வதேச அளவில் ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான அரசு இனப்பிரச்சனையை தீர்க்க விரும்புகிறது என்ற அபிப்பிராயம் ஏற்பட்டிருப்பதும்தான்.

யாழ்ப்பாண குடாநாட்டை கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, தமிழ் மக்கள்தமது பக்கம் என்றும், தமிழ் மக்களுக்கு புனரமைப்பு புனர்வாழ்வு பணிகளை செய்து கொடுக்கப் போவதாகவும் அரசாங்கம் செய்துவரும் பிரச்சாரத்தையும் முறியடிக்க வேண்டிய தேவை புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இனக்கலவரம் ஏற்பட்டு தமிழ் மக்களை பாதுகாக்க முடியாத அரசாங்கம் என்ற பெயரை பொதுஜன முன்னணி சம்பாதிக்குமானால், அது புலிகளுக்கு பிரசார அளவில் பாரிய பயன் கொடுக்கும்.

முல்லைத்தீவு சமர் நடக்கும்போது, தமது வெற்றிச் செய்தியை பலவீனமாக்க புலிகள் நினைத்திருக்க முடியுமா? என்ற கேள்வி எழலாம்.

முல்லை முகாம் தாக்குதலின் முக்கிய நோக்கமே வன்னியில் படை நடவடிக்கைக்கு அச்சுறுத்தல் விடுப்பதுதான். முல்லைச் சமர் செய்திகளைவிட வன்னித்தள பாதுகாப்புத்தான் புலிகளுக்கு முக்கியம்.

அதனால் எந்தளவுக்கு எந்தளவு மற்றொரு படை நடவடிக்கைக்கு அரசாங்கம் தயாராவதை தடுக்கலாம் என்பதுதான் புலிகளின் சிந்தனையாக இருக்கிறது.

முல்லை முகாம் தாக்குதல் மட்டுமே படைத்தரப்பு நடவடிக்கைகளை தடை செய்யப் போதுமானதல்ல என்பது புலிகளுக்கு தெரியும்.

எனவே-முல்லைச் சமர் செய்தி ஏற்படுத்திய பதட்டத்தை, நாடெங்கும் தொடர்ந்து தக்கவைக்கக்கூடிய குண்டு வெடிப்புக்கு புலிகள் திட்டமிட்டனர்.

அது மட்டுமல்ல அநுராதபுரம் பகுதியில் பொலிஸ் நிலையத் தாக்குதல் ஒன்றும் புலிகளால் நடத்தப்பட்டது. அரசினதும், படைத்தரப்பினதும் முழுக் கவனத்தையும் வடபுலத்துக்கு வெளியே திருப்பி வைத்திருப்பதற்காக புலிகள் போட்ட திட்டத்தின் ஒரு பகுதிதான் கொழும்பு குண்டுவெடிப்பு.

அதுதவிர, சமீபத்தில் 'எல்லாளன் படை' ஒரு அறிவித்தல் வெளியிட்டிருந்தது. வடக்கில் குண்டு வீச்சுக்கள் நடைபெறுவதை நிறுத்தாவிட்டால் தெற்கில் மனித அழிவுகளை ஏற்படுத்துவோம். நாம் முன்னர் விடுத்த எச்சரிக்கைகளை அலட்சியமாக நினைக்க வேண்டாம்." என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மனித இலக்குகளை குறிப்பிட்டே தமது எச்சரிக்கையை விடுத்திருந்தது எல்லாளான் படை.

மனித இலக்குகளை குறியாக வைத்து கொழும்பில் குண்டுவெடிப்பு நடைபெற்றது இது முதல் தடவையல்ல.

1987 இல் புறக்கோட்டை பஸ் நிலையத்தில் புலிகள் நடத்திய கார் குண்டு வெடிப்பால் 100 பேர்வரை கொல்லப் பட்டனர்.

அதையும் மிஞ்சும் அளவுக்கு மற்றொரு கார் குண்டுவெடிப்புக்கு புலிகள் திட்டமிட்டனர். 1987 இல் மருதானையில் நடைபெற்ற கார் குண்டு வெடிப்பு கடைசி நேரத் தவறால் குறிப்பிட்ட மனித இலக்குக்கு முன்பே வெடித்துவிட்டது.

150க்கு மேற்பட்டோர் பலியானார்கள். திட்டமிட்டதுபோல வெடித்திருந்தால் குறைந்தது 500 பேர் பலியாகியிருப்பர்.

அந்த இரண்டு நடவடிக்கைகளுக்கும் புலிகள் இதுவரை உரிமை கோரவில்லை. பழி ஈரோஸ் அமைப்பில் விழுந்தபோதும் புலிகள் மௌனமாகவே இருந்தனர்.

தற்போது தெகிவளை குண்டு வெடிப்பை புலிகள் மறுத்திருப்பதும் எதிர்பார்க்கக் கூடியதுதான்.

மேலும் அதிக உயிரிழப்புக்களை எதிர்பார்த்தே குண்டு வைக்கப்பட்டிருந்தது. மூன்றாவது குண்டு ஏமாற்றிவிட்டதால் எதிர்பார்க்கப்பட்ட உயிரிழப்புக்களில் பாதி குறைந்தன.

வைக்கப்பட்ட குண்டும், செய்நேர்த்தியும் பழக்கப்பட்டவர்களின் கைவரிசை என்பதை நன்கு தெளிவாக்கியுள்ளன.

புலிகளைத் தவிர வேறு ஒரு தென்பகுதி குழு அவ்வாறு செய்திருக்குமானால், அக்குழுவால் கலவரம் ஒன்றை தூண்டிவிட்வும் முடிந்திருக்கும்.

உண்மையில் அரச விரோத சக்திகள் செய்தது என்னவென்றால், குண்டுவெடிப்பின் பின்னர் புரளிகளைக் கிளப்பிவிட்டதுதான்.

அவர்களால் மிக நேர்த்தியாக குண்டுகளை தயாரிக்க முடியாது. ஆனால் குண்டுப் புரளிகளை கிளப்ப முடியும்.


கொழும்பு குண்டுவெடிப்பு இனப் பதட்டம் ஏற்படாதளவில் நின்றுவிட்டதால் அரசாங்கத்திற்கு சாதகமானதாக முடிந்தது உண்மை.

இனப் பதட்டம் ஏற்பட்டிருந்தால் புலிகளுக்கு அரசியல், இராணுவரீதியில் மிகப் பெரிய சாதகங்கள் ஏற்பட்டிருக்கும் என்பதும் உண்மை.

சர்வதேச ரீதியில் புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கான அரசியல் நியாயமும், உள்நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது படை நடவடிக்கைகளை ஒத்திப்போடும் அவசியம் அரசுக்கும் ஏற்பட்டிருக்கும். ஏனெனில் நாடு குழப்பத்தில் உள்ளபோது தமிழ் பகுதிகளில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது எவ்வகையிலும் பொருத்தம் உடையதாக இருந்திருக்காது.

ஆனால், கொழும்பு குண்டுவெடிப்பு செய்தியை அமுக்குமளவுக்கு ஆனையிறவில் இருந்து ஆரம்பமான படை நடவடிக்கை வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் முதலிடம் பெற்றுவிட்டது.

## அதிரடி அய்யாத்துரை



**கி**ளிநொச்சி சிகிச்சை மனையில் ரெண்டு எழுத்தார் நூற்றுக்கணக்கானோருக்கு சிகிச்சை நடந்ததாம். சண்டையில் காயப்பட்டவர்களாம். விஷயம் எப்படியோ அறிந்து முட்டை கூரையில் போடப்பட்டதாக ஒரு கதை. முட்டையை கூடையில் போடலாம். கூரையில் போடலாமோ?

**கொ**ழும்பில் 'டிப்டொப்'பான உடையோடு வந்து குண்டை வைச்சுட்டுப் போட்டினம். அதனால் டிப்டொப்பாக உடையணிவோர் பாடுதான் தர்மசங்கடமாய் போச்சுது. 'ரை' கட்டிக்கொண்டு ரயிலில் ஏறுபவர்கள் பாடும் சங்கடம்தான். கழற்றிப் பையில் வைத்துக்கொண்டு பயணம் செய்வது உத்தமம். மத்திய வங்கித் தாக்குதலுக்கு பிறகு கசங்கிய உடைக்காரர் எண்டால் ஒரு மாதிரித்தான் பார்வைகள் மேயும். இப்ப 'டிப்டொப்' ஆசாமிகள் எண்டால் சந்தேகப் பார்வைகள் சட்டென்று பாயுது. போகிற போக்கைப் பார்த்தால் ஆதாம் ஏவாள் கால ஸ்ரைல்தான் வசதி.

**ரெ**ண்டு எழுத்தாரை திட்டிக்கொண்டிருந்த ஒருத்தரை சமீபத்தில் சந்திச்சனான். ஆள் பேச்சை மாற்றிப் போட்டார். 'எண்டாலும் பெடியள் விடமாட்டாங்கள் பார்த்தியளோ' எண்டார். குண்டு வெடிப்புக்கு பிறகு மீண்டும் சந்திச்சு "என்ன இப்படி நடந்துபோட்டுது?" எண்டு கேட்டேன்." உப்பிடியும் செய்யிறதோ?" எண்டார் கடுமையாக யோசித்துக்கொண்டு. பெரிய வீடொன்று புதுசா வாங்கியிருக்கிறார் கொழும்பில். அதுதான் மனுசன் அமளிப்பட்டுப் போனார். குண்டு வெடிப்பு பதட்டம் எல்லாம் முடிஞ்சபிறகு மூன்றாவது சந்திப்பு. என்ன சொன்னவர் தெரியுமோ? "அவங்கள் சூரன்கள்தான்." மடியில் பாதிப்புவராத வரை துடிப்புக்காட்டும் ரகம் அவர்.

**பொ**ன்னான தலைவரின் 'குமாரர்' அவுஸ்திரேலியாவுக்கு போன நேரத்திலை கடும் விசாரணை நடந்ததாம். புலமையைக் காட்டி வாதிட்டும் அதிகாரிகள் மசியவில்லை. மேலிட உத்தரவு எண்டு சொல்லி கடவுச் சீட்டையும் பறித்து துருவித் துருவி பார்த்தவையாம். துள்ளிப் பயனில்லை என்பதால் துவண்டு போனாராம் குமாரர். ஐம்பதுக்கு ஐம்பது. சோகம் ஐம்பது. வெறுப்பு ஐம்பது.

**ச**மீபத்தில் இலண்டனில் சுற்றுப் பயணம் செய்தார் புத்திர குமாரர். ரெண்டு எழுத்தார் இரகசிய பதவி கொடுக்காமையால் வேறு ஒரு திட்டத்தோடு கோதாவில் இறங்கியிருக்கிறார். "ரெண்டு எழுத்தார் காட்டில் இருக்கினம். தமிழ் கட்சிகள் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கினம். இருப்பது நான் மட்டும்தான். எனக்கு ஆதரவு தந்தால் அரசியல் தலைமைக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை பக்குவமாக நிரப்பலாம்" எண்டு சொல்லித் திரியுறாராம். 77 முதல் அவரும் நிரப்பத்தான் திரியுறார். இன்னமும் நிரப்பினபாடில்லை. போனில் ஒரு பிரமுகரை குமாரர் தொடர்பு கொண்டாராம். போனில் அந்த பிரமுகரே சொன்ன பதில்; "அவர் வீட்டில் இல்லை. ஒரு அவசர வேலையாக போய்விட்டார்"

**யா**ழில் ஒரு வீட்டில் ரெண்டு எழுத்தார் தங்கியிருந்தவையாம். இரண்டு ஆச்சிமார் மட்டும்தான் அந்த வீட்டில் இருந்தவை. வீட்டு சுற்றாடலில் ரெண்டு எழுத்தார் கண்ணிவெடி புதைச்சு வைச்சிருந்தவை. ஒரு ஆச்சி தப்பித்தவறி காலை வைக்க கண்ணிவெடி வெடிச்சு கால் போச்சு. ரெண்டு எழுத்தார் கேட்ட கேள்வி, "ஒரு கரைப்பக்கமாக காலை வைச்சிருக்கலாம் அல்லோ? உங்களை யார் நடுப்பக்கமாக நடக்கச் சொன்னது?" ஆச்சி பதில் சொல்லவில்லை.

**வெ**ளிநாடுகளில் உள்ள ரெண்டு எழுத்தார் படு உற்சாகமாக இருக்கினமாம். ஸ்கோர் போர்டில் இரண்டாயிரம் எண்டு குறிச்சு வைச்சிருக்கினமாம். பெரிசு பெரிசாக தந்ததுக்கு நன்றி எண்டு சொல்லியிருக்கிறார் திலகமானவர்.

சில விஷயங்களை அறியவும், எடுத்ததை பாவிக்கக் கற்றுக் கொள்ளவும் சிலரைப்பிடிச்சுக் கொண்டும் போயிருக்கலாம் எண்டு ஒரு தகவல். உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியேல்லை. நடந்திருக்காது எண்டும் நான் மறுக்கேல்லை. எல்லாம் ரெண்டு எழுத்தாருக்குத்தான் வெளிச்சம்.

**த**ங்கள் வாயால் சொல்லாவிட்டாலும் எண்ணிக்கை மெல்ல மெல்ல வெளியே வர அனுமதிச்சிருக்கினம் அதிகார தரப்பார். ஆயிரம் பேருக்குமேல் போய்விட்டதாகச் சிங்களப் பத்திரிகைகள் செய்தி போட்டிருந்தவை. அதைச் சொல்ல அனுமதித்த படியால் எண்ணிக்கை மேலும் கூடுதலோ எண்டு சில அதிகப் பிரசங்கிகள் யோசித்தால் யார் என்ன செய்கிறது?

**எ**க்காலத்திற்கும் பொருத்தமான ஒரு பொன் மொழி.

"வேகம் இல்லாத விவேகம்
வெறும் கனவு.
விவேகம் இல்லாத வேகம்
வேருடன் அழிவு.
விவேகத்துடன் இணைந்த வேகம்
வெற்றி வாயிலின் நுழைவு."



படிப்பகம்

www.padippakam.com

நாரதர்

# முல்லைக் களம்

# கள ஆய்வு ரிப்போர்ட்

**முகாம் நோக்கி நகர்வு**

**18.7.96** வியாழக்கிழமை. நேரம் அதிகாலை ஒரு மணி.

அமாவாசைக்கால பின்னிரவு முல்லைத்தீவை கரிய போர்வையாக மூடியிருந்தது.

அந்த கரிய போர்வைக்குள் முல்லைத்தீவு இராணுவ முகாமை நோக்கி மூவாயிரம் பேர் கொண்ட புலிகளது படையணிகள் சத்தமில்லாமல், காதுகளையும், கண்களையும் மட்டுமே கூர்மையாக்கிக் கொண்டு தமது பாரிய நகர்வை மேற்கொண்டன.

கடல்வழியாகவும், தரைவழியாகவும் புலிகளின் படையணிகள் களத்தில் இறக்கப்பட்டன.

முகாம் தாக்குதலுக்கு முன்னரே முகாம் அமைப்பு, காவலரண்கள், மற்றும் முகாம் தாக்குதலுக்கு வசதியாக நிலையெடுத்து நிற்கக்கூடிய இடங்கள் போன்ற விபரங்கள் யாவும் புலிகளின் உளவுப் பிரிவினரால் திரட்டப்பட்டிருந்தன.

அந்த விபரங்களை வைத்தே தாக்குதல் திட்டம் பிரபாகரனால் வகுக்கப்பட்டிருந்தது.

முகாம் பகுதியை நெருங்கிய புலிகளின் அணிகள் முகாமை முற்றுகையிட்டு நிலை எடுத்துக் கொண்டன.

முடிக்கப்பட்டன.

1. முகாமை பூரணமாக கட்டுப்பாட்டில் கொண்டுவருவது.

2. முகாம் தாக்குதல் நேரத்தில் வெளியிலிருந்து முகாமுக்கு உதவிகள் வராமல் தரையிலும், கடலிலும் கட்-அவுட் போட்டு இருப்பது.

3. முகாமில் உள்ள ஆயுதங்களை கைப்பற்றி வன்னித் தள முகாமுக்கு கொண்டு செல்வது.

4. படையினரை தேடியழிப்பது. ஒரு குறிப்பிட்ட தொகையினரை மட்டும் கைது செய்வது.

திடீரென்று ஹெலியை நோக்கி புலிகள் சுடத்தொடங்கினார்கள். ஹெலியை செலுத்திய சிரான்பெரேரா என்பவரின் சாதுரியத்தால் கடும் சேதத்தோடு ஹெலி தப்பிப் பறந்தது.

எனினும் ஹெலிகொப்டர் ஒன்றை தாம் வீழ்த்தியதாகப் புலிகளின் வெளிநாட்டு செய்திகள் தெரிவித்தன.

நான்காவது நாளன்று முகாம் தாக்குதலை முடித்துக் கொண்டு புலிகளின் முதலாவது படையணி வன்னித் தள முகாமுக்கு திரும்பியது. அதற்கு முன்னர் முல்லை முகாம் கட்டிடங்கள் புல்டோசர் மூலம் நிர்மூலம் செய்யப்பட்டன. ஒரு குட்டிச் சுவர்கூட மிச்சம் வைக்கவில்லை.

ஓயாத அலைகள் என்று பெயரிடப்பட்ட முல்லைச் சமரின் முதல் கட்டமான முகாம் தாக்குதல் முடிவடைந்தது.

**இரண்டாம் கட்டம்**

அதன்பின்னர் முல்லைச் சமரின் இரண்டாம் கட்டம்.

விமானப் படையினர் மூலமாக முகாம் நிலவரம் படைத்தரப்புக்கும் தெரிந்தே இருந்தது. வானில் வட்டமிட்ட விமானங்களுக்கு முகாம் தரையில் இல்லை என்று தெரியாமல் போயிருக்காது.

எனினும் முகாம் பக்திவரை செல்லா விட்டால் ஏனைய முகாம்களில் உள்ள

இறக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்.

நானூறுக்கு மேற்பட்ட படையினர் அந்த தரையிறங்கு கப்பலில் இருந்தனர்.

அப்போது தரையில் இருந்து புலிகள் ஏவிய பீரங்கிக் குண்டொன்று கப்பலின் இறங்கு படியருகே விழுந்து வெடித்தது. அந்த பீரங்கி ஷெல் மட்டும் சில மில்லி மீட்டர்கள் தள்ளி விழுந்திருந்தால் கப்பலில் இருந்தவர்களுக்கு பாரிய இழப்பு ஏற்பட்டிருக்கும்.

இறங்கு படியருகே விழுந்து வெடித்ததால் 28 பேர்வரை பலியாகியதாகத் தெரிகிறது.

கனரக ஆயுதங்களுடன் தரை இறங்கிய படையினர் முல்லை முகாம் பகுதிக்கு மெதுவாகவே நகர்ந்தனர்.

மெதுவான நகருதலுக்கு புலிகளின் எதிர்ப்பு மட்டும் காரணமல்ல.

முல்லை முகாம் பகுதிக்கு செல்லும்வரை அங்குள்ள நிலமைகள் தமக்குத் தெரியாது என்று அரசாங்கம் கூறக்கூடியதாக இருந்தது.

முகாம் இருந்த பகுதிக்கு சென்று விட்டோம் என்று அறிவித்தால் அங்குள்ள நிலவரம் பற்றியும் சொல்லியாக வேண்டும்.

ஆனால், நிலவரமோ சொல்லிக் கொள்ளும்படியாக இருக்கவில்லை.

முழு விபரங்களை வெளியிட்டால் தென் பகுதியில் ஒரு பதட்ட நிலைகூட தோன்றலாம்.

அது மட்டுமல்லாமல் யாழ் குடாநாட்டு சமரின் பின்னர் தென்பகுதியில் செய்யப்பட்ட பிரசாரமும், யுத்தத்தில் திறன் வாய்ந்த அரசாங்கம் என்ற 'இமேஜு'ம் சட்டென்று வீழ்ச்சி கண்டுவிடும்.

எனவே-முல்லை முகாம் பகுதிக்கு படையினர் சென்றடையும் அதே நேரத்தில், மற்றொரு பாரிய நடவடிக்கைக்கு திட்டமிட்டது அரசாங்கம்.

அதாவது ஒரு கல்லில் இரண்டு மாங்காய்.

ஒன்று: முல்லை முகாம் தாக்குதல், அதில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு, மற்றொரு பாரிய நடவடிக்கையால் ஈடு கட்டுவது.

இரண்டு: முல்லைச் சமரில் புலிகளுக்கு போக்குக் காட்டி, அவர்களது பெரும்பாலான அணிகளை அங்கு இருக்கச் செய்து விட்டு, ஆனையிறவு முகாம் ஊடாக படைகளை நகர்த்துவதை சுலபமாக்குவது.

ஆனையிறவு முகாமில் இருந்து படைத்தரப்பு முன்னேறி பரந்தனை நோக்கி சென்று கொண்டிருந்தபோதே, முல்லை முகாம் பகுதிக்குள் படைகள் பிரவேசித்தன.

உண்மையான கள நிலவரப்படி சமர் ஆரம்பித்த ஏழாவது நாளே படைகள் முல்லை முகாம் பகுதிக்குள் பிரவேசித்திருக்க முடியும்.

ஆனால், ஆனையிறவு முகாமில் இருந்து மேற்கொள்ளப்படவிருந்த படை நடவடிக்கை செய்திக்காக முல்லைக் களத்தில் படை நகர்வு மிக மெதுவாக இருந்தது.

புலிகளும் முல்லைக் களத்தில் முன்னேறிய படைகள்மீது நேரடித் தாக்குதலை தவிர்த்து, கெரில்லாப் பாணியிலான தாக்குதல்களையும், மோட்டார் தாக்குதல்களையுமே மேற்கொண்டனர்.

**சென்றனர்-திரும்பினர்**

முல்லைத்தீவு முகாமை நோக்கி முழுப் பலத்துடன் முன்னேறிய படையினரை நேரடி மோதலில், சந்தித்தால் புலிகளுக்குத்தான் நஷ்டம் கூடுதலாயிருந்திருக்கும்.

அதனைவிட முல்லை முகாம் பகுதியில் மீண்டும் முகாமை நிறுவி படையினர் நிலை கொண்ட பின்னர் வேண்டுமானால் மற்றொரு

பாரிய முற்றுகைத் தாக்குதலை நடத்த புலிகள் முயன்றிருப்பர்.

அதனை உணர்ந்தோ என்னவோ முல்லை முகாம் பகுதிக்கு சென்று பார்வையிட்டுவிட்டு படைத்தரப்பு திரும்பி விட்டது.

'முல்லைத்தீவு பகுதியில் இராணுவ முகாம் ஒன்றை தொடர்ந்து தக்கவைத்திருப்பது புத்திசாலித்தனமல்ல' என்று முன்னரே படைத்தரப்பு மட்டத்தில் ஒரு கருத்து நிலவியது.

முகாம் தாக்கப்பட்டு தகர்க்கப்பட்ட பின்னர் அக் கருத்து வலுப்பட்டுவிட்டது.

முல்லைத்தீவுக்குப் பதிலாக வெலி ஓயா, கொக்காவில், நாயாறு பகுதிகளில் தமது நிலைகளை பலப் படுத்துவதே படைத்தரப்பின் நோக்கம்.

ஒன்றோடு ஒன்று தொடர்பற்ற முகாம்களை அவை எவ்வளவு பெரியதானாலும் வைத்திருக்க முடியாத நிலை வடபுலத்தில் ஏற்பட்டுள்ளது.


**இழப்புக்கள்**

முல்லைத்தீவு முகாமில் குறைந்தது 1800 படையினர் இருந்தனர். அதில் விடுமுறைக்கு சென்றவர்கள் தவிர 1600 படையினராவது இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

முல்லை முகாம் பகுதிக்குச் சென்ற படையினர் ஒரு பாழடைந்த கிணற்றிலும், மரம் ஒன்றிலும் மறைந்திருந்த 14 படையினர் மீட்கப்பட்டனர்.

200 படையினர்வரை புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று ஒரு தகவல் கூறுகிறது.





# நீண்ட பெரும் சமர்

# முதலாவது அழித்தொழிப்பு யுத்தம்

அதிகாலை 1.30 மணியளவில் தமது படையணிகள் அனைத்தும் குறிப்பிட்ட இடங்களில் நிலையெடுத்து தயாராகி விட்டனவா என்று வோக்கி டோக்கி மூலம் தொடர்பு கொண்டு சரி பார்த்தார் புலிகளின் துணைத் தளபதி பால்ராஜ்.

தாக்குதல் பிரிவுத் தலைவர்கள் அனைவரும் தமது தயார் நிலையை தெரிவித்ததும் முதல் வேட்டு தீர்க்கப் பட்டது.

தாக்குதல் தொடங்கப்படுவதற்கு உரிய சிக்னல் அதுதான்.

முதல் வேட்டை தொடர்ந்து முகாமை நோக்கி சரமாரியான வேட்டுக்களை தீர்த்தபடி புலிகளின் படையணிகள் முன்னேறிச் சென்றன.

காவலரண்கள் கைப்பற்றப்பட்டன. முகாம் சுற்றாடல் பகுதி முழுக்க புலிகளால் நிரம்பியது.

**முகாம் வீழ்ச்சி**

முகாமுக்குள் தூங்கிக்கொண்டிருந்த படையினருக்கு நிலமையை கணிப்பிட்டு வியூகம் வகுக்க சந்தர்ப்பமே இல்லை.

முகாமை பாதுகாப்பதாயின் தாக்குதல் யுத்தம் நடத்த வேண்டும். ஆனால் வேட்டுச் சத்தங்களை வைத்தே புலிகளின் எண்ணிக்கை ஓரளவு புரிந்திருக்கும்.

ஒரே வழி முகாமைவிட்டு பின்வாங்குவது. புலிகளின் முற்றுகையை உடைத்துக் கொண்டு ஒரு வழியை ஏற்படுத்தியாக வேண்டும்.

எப்படியும் முடிவு ஒன்றுதான் என்ற நிலையில் கரணம் தப்பினால் மரணம் என்ற கட்டத்தில் படையினர் தம்மால் முடிந்தவரை தற்காப்புக்கான தாக்குதலில் ஈடுபட்டனர்.

படையினரைவிட புலிகளுக்கே சாதகமான சண்டையாக இருந்தாலும், முகாமிலிருந்து படையினர் தாக்கியதில் மட்டும் 150 புலிகள் வரை பலியானார்கள்.

ஒரு கட்டத்தின் பின்னர் படையினரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

முகாம் முழுவதும் புலிகளின் கைகளில் வீழ்ந்தது.

படையினர் தரப்பில் பலத்த உயிரிழப்பு ஏற்பட்டது. எவ்வழியாலும் தப்பிச் செல்ல முடியாதவாறு திட்டமிடப்பட்ட அழித்தொழிப்பு யுத்தம் ஒன்றை புலிகள். நடத்தி முடித்தனர்.

அப்படியிருந்தும் எப்படியோ தப்பிச் சென்ற படையினரையும் சமர் ஆரம்பித்த பின்னர் வந்த இரண்டு நாட்களும் தேடியழிப்பதில் புலிகள் ஈடுபட்டனர்.

முகாம் தாக்குதல் தொடர்பான முழு நடவடிக்கைகளும் மூன்று நாட்களுக்குள்

மூன்று நாட்களாக முகாம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அதுதான். குறிப்பிட்ட மூன்று நாட்களும் முல்லை முகாம் கட்டிடங்கள் பல அப்படியேதான் இருந்தன.

முகாம் இருக்கிறது. உள்ளே படையினர் இருக்கிறார்களா இல்லையா என்பது தெரியாத நிலை. அதனால்தான் விமானப் படையினர் அந்தப் பகுதியில் கடும் தாக்குதல் எதனையும் உடனே மேற்கொள்ள முடியாமல் போனது.

**கடற் கரும்புலி தாக்குதல்**

முகாம்மீதான தாக்குதலை புலிகள் ஆரம்பித்த மறுநாள், அதாவது 19.7.96 அன்று முல்லை முகாம் படையினருக்கு உதவ திருமலையில் இருந்து 'ரணவிரு' எனப்படும் பீரங்கிப்படகு அனுப்பி வைக்கப்பட்டது.

40 படையினர் அதில் இருந்தனர். கடற்படையினர் உதவிக்கு வரலாம் என்று எதிர்பார்த்து காத்திருந்த கடற்புலிகள் ரணவிரு பீரங்கிப்படகை வழிமறித்துத் தாக்கினார்கள்.

கடற் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வேறு ஒரு முனையில் இருந்து பாய்ந்துசென்ற கடற் கரும்புலி படகு 'ரணவிரு'வுடன் மோதி வெடித்தது. 40 படையினருடன் 'ரணவிரு' கடலில் மூழ்கியது.

சயந்தன் (தம்பிப்பிள்ளை துரைரத்னம்-அக்கரைப்பற்று), மிதுபாலன் (வேதரஞ்சன் ஜெகநாதன் -சங்கானை) ஆகியோரே 'ரணவிரு' பீரங்கிப் படகுடன் மோதிப்பலியான கடற்கரும்புலிகளாவர்.

முகாம் கட்டிடங்கள் தகர்க்கப்பட முன்னர் பெல் 212 ரக ஹெலிகொப்டர் ஒன்று படையினருக்கு உதவச் சென்றது.

முகாம் பகுதி நிலவரம் சரியாகத் தெரியாமையால், முகாமுக்கு அருகே தாழப் பறந்து தரை இறங்க முற்பட்டது.



புலிகளின் துணைத் தளபதி பால்ராஜ்(வலது புறம்), கடற்புலித் தளபதி சூசையுடன்.

படையினருக்கும் ஒருவிதமான சஞ்சலம் ஏற்படலாம். முகாம் ஒன்றுக்குள் இருந்து போரிட்டபடியே இருந்தால் மேலதிக உதவி வரும் என்ற நம்பிக்கை படைத்தரப்புக்கு கொடுக்கப்படுவது அவசியமானது. எதிர்கால நடவடிக்கைகளுக்கு தேவையானது.

அதுதவிர, முல்லை முகாம் தாக்குதலில் இருந்து படையினர் தப்பியிருந்து, அவர்களை சென்று மீட்காமல் விட்டால், வேறு வழிகளில் அவர்கள் தப்பிவந்தாலும் படையினருக்குள் அதிருப்தி ஏற்படலாம். 'கைவிட்டுவிட்டார்களே' என்று நினைக்கக்கூடும்.

எனவே முல்லை முகாம் பகுதிக்கு எப்படியாவது சென்றடைவது என்று படைத்தரப்பு திட்டமிட்டது.

**கப்பல்மீது தாக்குதல்**

23.07.96 முல்லை முகாம் பகுதிக்குச் செல்வதற்காக தரையிறங்கு கப்பல் ஒன்றில் படையினர் கொண்டு சென்று

**நூறு கோடி?**

கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட 'ரணவிரு' பீரங்கிப் போர்ப் படகின் பெறுமதி 100 மில்லியன். அதாவது 10 கோடி ரூபாய்கள்.

முகாம் தாக்குதலால் நூறுகோடி ரூபாய்வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.

'சியரட்ட' பத்திரிகையின் தகவலின் படி நீண்டதூர ஆட்டிலறிப் பீரங்கிகள் இரண்டும் புலிகளால் வசப்படுத்தப் பட்டது. 24 கிலோ மீட்டர் சுடுதூரம் கொண்ட பீரங்கி அதுவாகும். இராணுவ வாகனங்கள் நான்கும் புலிகளால் கொண்டு செல்லப்பட்டவற்றில் அடங்கும்.

122 எம்.எம் என்று அழைக்கப்படும் நீண்ட தூர பீரங்கிக்கான ஒரு ஷெல்லின் பெறுமதி மட்டும் கிட்டத்தட்ட பதினெட்டாயிரம் ரூபாய்களாகும். ஆயிரம் ஷெல் கிடைத்தால் அதன் பெறுமதியே 1 கோடியே 80 இலட்சமாகிவிடும். ஆட்டிலறி பீரங்கி இரண்டு இருந்தமையால் குறைந்தது ஆயிரம் ஷெல்கள் இருந்திருக்கலாம் என்ற ஊகங்கள் கிளம்பாமலில்லை.

**மூன்றாவதும்-முதலாவதும்**

வடக்கு-கிழக்கு போர் முனையில் கடந்த பதின்மூன்று வருட காலத்தில் 'ஓயாத அலைகள்' அழித்தொழிப்பு யுத்தம் மூலமாக புலிகளுக்கு கிடைத்துள்ளது பாரிய வெற்றியாகும்.

போர் நடவடிக்கை என்று எடுத்துக் கொண்டால், 1991 இல் ஆனையிறவு ஆகாய, கடல், தரைவெளிச் சண்டை பாரியது. (31 நாள் நடைபெற்றது)

அதற்கடுத்ததாக பூநகரி நாகதேவன் துறை கூட்டுப் படை முகாம்மீது நடத்தப்பட்ட தவளைப் பாய்சல் முக்கியமானது.

ஏனெனில், மேற்கண்ட இரண்டு நடவடிக்கைகளின் இலக்குகள் முல்லை முகாமைவிட பாரியவை. முகாம்களுக்குள் இருந்த படையினரின் எண்ணிக்கையும் அதிகம்.

ஆனால், புலிகளால் பெறப்பட்ட பலன்கள் என்று எடுத்துக்கொண்டால் முல்லை முகாம் மீதான தாக்குதல்தான் முதலிடம் வகிக்கிறது.

அதாவது முல்லை முகாம் தாக்குதல் வடக்கு-கிழக்கு யுத்த வரலாற்றில் மூன்றாவது பெரிய போர் முனை. முதலாவது பாரிய வெற்றி.

யுத்தத்தில் பிரதான கட்டங்கள் மூன்று.

1. தற்காப்பு யுத்தம்
2. தாக்குதல் யுத்தம்.
3. அழித்தொழிப்பு யுத்தம்.

முல்லைத் தீவில் நடைபெற்றதுதான் புலிகள் இதுவரை நடத்தியதில் முதலாவது பாரிய அழித்தொழிப்பு யுத்தமாகும்.



**எங்கே காணவில்லையே?**

கிட்டு தோன்றினார் என்று முகப்பில் இருக்கிறதே. எங்கு தோன்றினார் என்று தேடுகிறீர்களா? இந்த வாரம் 'அரசியல் தொடர்' இடம்பெறவில்லை.

முல்லைக் கள நிலவரம் தொடர்பாக வாசகர்களுக்கு தெரிவிக்க வேண்டிய கட்டாயம் காரணமாக, அரசியல் தொடர் பக்கத்தை இம்முறை மட்டும் ஒதுக்கிக்கொடுக்க வேண்டியதாகிவிட்டது.

அடுத்தவாரம் பல முக்கிய தகவல்களோடு 'அரசியல் தொடர்' தரப்படும். வாசகர்கள் பொறுத்துக்கொள்வீர்களாக. -ஆ.ர்.



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது- இராஜதந்திரி

# நிறம் மாறாத கறுப்பு ஜூலை

கறுப்பு ஜூலை!

1983ம் ஆண்டு ஜூலை மாதம் தலைநகர் கொழும்பில் வைக்கப்பட்ட இனவாதத் தீயின் கொடுமை ஏதோ ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகின்றது.

தெஹிவளை ரயில் நிலையத்தில் இடம்பெற்ற பயங்கரக்குண்டு வெடிப்பு கறுப்பு ஜூலையின் நிறம் எவ்விதத்திலும் மாறவில்லை என்பதையே எடுத்துக்காட்டியிருந்தது.

அலுவலகம் முடிந்து வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்த அப்பாவி மக்களில் பலர் இரு ரயில் பெட்டிகளுக்குள் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்ததில் துடிதுடித்து உயிரிழந்தனர்.



வேலை முடிந்த களைப்பில் தமது இல்லங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்த எதுவுமறியாத அப்பாவி மக்களுக்கு நேர்ந்த இந்த அநர்த்தம் ஆழ்ந்த மனவேதனையைத் தருவதாகவே இருக்கின்றது.

இலங்கையில் இன்று வாழ்க்கைச் சுமை அதிகரித்திருக்கக் காணப்படுகின்றது. எந்தவொரு பொருளும் பல மடங்கு விலைகளில் இருக்கின்றது.

இந்நிலையில் ஒரு குடும்பத் தலைவனால் தனியாக உழைத்து தனது குடும்பத்தைக் காப்பாற்ற முடியாதிருக்கின்றது. இதனால் கணவன், மனைவி இருவருமே அலுவலகம் செல்கின்றனர்.



கணவன், மனைவி ஆகியோர் மட்டுமல்ல குடும்பமொன்றில் இருக்கும் வளர்ந்த பிள்ளைகள்கூட பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி வாழ்க்கைச் சுமை காரணமாக ஏதாவது ஒரு தொழிலில் தம்மை ஈடுபடுத்தி விடுகின்றனர்.

எனவே இன்று அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்கு ஒரு முழுக் குடும்பமுமே சம்பாதிக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில், தெஹிவளைக் குண்டு வெடிப்பில் பலதரப்பட்ட வயதினருமான ஆண்களும், பெண்களும் கை, கால்கள் சிதறிக் கொல்லப்பட்டிருந்தமை நெஞ்சு பொறுக்காத ஒரு சம்பவமாகவே விளங்கியிருந்தது.

கடந்த ஜனவரி மாதம் கொழும்பு மத்திய வங்கிக் கட்டிடம் குண்டு வெடிப்பில் தகர்ந்திருந்தது. அதில்கூட பலர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

1983ம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழர்களைக் குறிவைத்தே கலகங்களும், வன்முறைகளும் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வெடித்திருந்தன.

அப்பாவித் தமிழ் மக்களது உயிர், உடமைகளை காடையர் கூட்டம் பந்தாடியது. காவி தரித்த பிக்குமார்கள்கூட சில இடங்களில் வன்முறையாளர்களை நெறிப்படுத்தி கலகங்களைத் தூண்டிவிட்டனர்.

நன்கு திட்டமிட்டமுறையில், 83 ஜூலையில் தமிழர்களுக்கெதிரான இனக்கலவரம் வெடித்திருந்தது.

தமிழர்களின் வீடுகளை இனங்காண்பதற்காக வாக்காளர் பட்டியல்கூட காடையர் கூட்டத்தினரால் பயன்படுத்தப்பட்டது.

மோட்டார் கார்களில் சென்ற தமிழர்கள் கார்களுக்குள்ளேயே போடப்பட்டு எரிக்கப்பட்டனர்.

83 ஜூலையில் நடைபெற்ற சில சம்வங்கள் மனத்திரையில் தோன்றாமலில்லை.

அப்பாவி யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் சிங்கப்பூரில் சிலகாலம் வேலை பார்த்துவிட்டு கொழும்பு திரும்பி, யாழ்ப்பாணம் செல்வதற்காக கோட்டை ரயில் நிலையம் நோக்கி ஆட்டோ ரிக்ஷாவில் சென்றார்.

அந்த அப்பாவித் தமிழ் மகனுக்கு சிங்களம் என்பது அறவே பேசவராது. விபூதிப்பூச்சுடனேயே அவர் எப்போதும் இருப்பார்.

கோட்டை ரயில் நிலையம் நோக்கி அவர் சென்று கொண்டிருந்தபோது காடையர் கூட்டமொன்று அவரை இடைமறித்தது; "நீ ஒரு தமிழன் என்று உனது முகத்திலேயே தெரிகிறது" எனக்கூறி அந்த அப்பாவித் தமிழ் மகனை ஆட்டோவிலிருந்தும் வெளியே இழுத்து அக்கும்பல் வெளுத்து வாங்கியது.

இறுதியாக "ஐயோ சிவனே, நான் பிள்ளைகுட்டிக்காரன்" என்று அந்த அப்பாவி தனது இறுதி மூச்சை விட்டார்.

தமிழனாகப் பிறந்த ஒரே காரணத்திற்காக மற்றொரு நபர் முழுநிர்வாணமாக்கப்பட்டு காடையர் கூட்டமொன்றினால் கொழும்பில் வைத்து கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டார்.

இச்சம்பவங்கள் போன்று பல்வேறு இடங்களிலும் தமிழர்கள் மோசமான சித்திரவதைகள், அவலங்களுக்குள்ளானார்கள்.

கொழும்பிலுள்ள பிரபல வங்கியொன்றில் தமிழ் இளைஞர் ஒருவர் பணிபுரிந்து வந்தார்.

83 ஜூலை அநர்த்தத்தை சகிக்கமுடியாதவராக அத்தமிழ் இளைஞர் யாழ்ப்பாணத்துக்கு விரைந்தார்.

தமிழர்கள் பட்ட துன்பங்களை அந்த இளைஞர் நேரில் கண்டிருந்தார்.

யாழ்ப்பாணம் வந்த அவ்விளைஞர் மீண்டும் கொழும்பு திரும்பும் எண்ணத்தைக் கைவிட்டு ஒரு தீவிர வாதியாக ஆயுதமேந்தினார்.

அந்த இளைஞர் வேறுயாருமல்ல; எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் முக்கிய ' தளபதிகளில் ஒருவராக இருந்த ராதா என்றழைக்கப்பட்ட ஹரிச்சந்திராவே அவர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவத்தலைவராக அவர் இருந்தார். சாரணீயத்திலும், அக்கல்லூரியின் இராணுவ கடேற் பிரிவிலும் அவர் சிறந்து விளங்கினார்.

ஒரு தீவிரவாதியாக மாறவேண்டுமென்றோ, அல்லது ஆயுதமேந்த வேண்டுமென்றோ அவர் பாடசாலை நாட்களில் அல்லது, கொழும்பில் வேலை பார்த்தபோதுகூட எண்ணியிருக்கவில்லை.

83 ஜூலையின் கர்ண கடூரமான தன்மையே அந்த இளைஞனை ஒரு தீவிரவாதியாக்கிவிட்டிருந்தது.

எனவே ஜூலை மாதத்தின் இனவாதத்தீயே ஏராளமான தமிழ் இளைஞர்கள் ஆயுதபாணிகளாக மாறும் நிலையைத் தோற்றுவித்திருந்தது.

1983ம் ஆண்டு ஜூலை மாதம் 23ந்திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்திக்கருகாமையில் டிரக் வண்டியொன்றில் சென்று கொண்டிருந்த இராணுவ அணியொன்றின்மீது எல்.ரி.ரி.ஈ.யினர் கண்ணிவெடித் தாக்குதலை நடத்தினர்.

இதில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அன்றிலிருந்தே வடக்கு-கிழக்கு பிரச்சினை படிப்படியாக விரிவடைந்து, இன்று ஒரு மோசமான உள்நாட்டு யுத்தமாக அது வடிவம் பெற்றுள்ளது.

## தீர்வைக் கொண்டுவராத இராணுவ அணுகுமுறைகள்

எல்.ரி.ரி.ஈ.யினரை முறியடிக்க வேண்டுமென்ற நோக்கில் ஆட்சியாளர்கள் இராணுவ பலத்தை பெரிதும் கட்டிஎழுப்பியுள்ளார்கள். அத்துடன் கடந்த 13 வருட காலமாகவே எல்.ரி.ரி.ஈ.யினர் மீதான தாக்குதல்கள், இழப்பு விபரங்களை வெளியிடும் போதெல்லாம் கணிசமானவற்றை பாதுகாப்புப்படை வட்டாரங்கள் குறிப்பிட்டு வருகின்றன.

இருந்தபோதிலும் 83 ஜூலை மாதம் 13 படையினரே கொல்லப்பட்டார்கள். ஆனால் 13 வருடங்களின் பின்னர் இவ்வருட ஜூலைமாதத்தில் 500க்குமதிகமான படையினர் முல்லைத்தீவில் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதன் மூலம் கடந்த 13 வருடகால யுத்தம் படிப்படியாக மூர்க்கமடைந்து வந்துள்ளதேதவிர எவ்வகையிலும் அது தணிந்து விடவில்லை என்பதே தெளிவாகியுள்ளது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகளையடுத்து கொழும்பில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த வைபவம் ஒன்றில் தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றியிருந்தார்.

அப்போது அவர் "எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேசவேண்டிய அவசியம் இனி இல்லை. அரசு தீர்வு யோசனைகளை அமுலாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது." என்று தெரிவித்திருந்தார்.

அமைச்சர் மங்கள சமரவீரவின் இந்த உரை, இராணுவ அணுகுமுறைகளில் ஆட்சியாளர்கள் காட்டி வரும் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தது. அத்தடன் வடக்கு-கிழக்குப் பிரச்சினையின் ஆழ-அகலத்தை அவர்கள் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. அல்லது அது பற்றிப் புரிந்து கொண்ட போதிலும் தமது இறுமாப்பையே அவர்கள் முதன்மைப்படுத்துகின்றனர் என்பதையே அமைச்சர் மங்கள சமரவீரவின் உரையிலிருந்து உணரமுடிந்தது.

ஆனால், முல்லைத்தாக்குதல், ஆட்சியாளர்களது தப்புக்கணக்குகளுக்கு விழுந்த ஒரு சாட்டையாகவே இருக்கின்றது.

தவறான கணிப்புகள், தவறான அணுகுமுறைகள், பிரசாரங்கள் காரணமாகவே வடக்கு-கிழக்கு யுத்தம் இன்று வரை தொடருகின்றதென்பதனை முல்லைத்தாக்குதல் புலப்படுத்தியுள்ளது.

ஆட்சியதிகாரங்களில் இருப்போரின் தவறான அனுமானங்கள் வெறுமனே அவர்களுக்குப் பின்னடைவை மட்டும் ஏற்படுத்தவில்லை.

பொது மக்களையும் தவறான கணிப்புகள், கண்ணோட்டங்களுடனேயே அனைத்தையும் நோக்கச் செய்கின்றன.

இராணுவத்துக்கான ஆட்திரட்டல் என்பது வெறுமனே ஒரு ஆட்பலிக்கான முஸ்தீபு என்ற எண்ணமே நாட்டு மக்களிடையே காணப்படுகின்றது.

இராணுவ அணுகுமுறைகளால் தீர்வொன்றைக் கொண்டுவர முடியாதென்பது என்றோ தெளிவாகிவிட்டது.

1983ம் ஆண்டு ஜூலையிலிருந்து இந்த ஆண்டு ஜூலை வரை 13 ஜூலை மாதங்கள் கடந்துபோயுள்ளன.

ஆங்கிலேயரையும், சீனர்களையும் பொறுத்தவரை இந்த 13வது இலக்கமென்பது மிகவும் துரதிர்ஷ்டமானதாகும்.

எனவே பொதுவாக 13வது என்று வரும் அனைத்தையும் துரதிர்ஷ்டமென்று கூறுவதுமுண்டு.

83 ஜூலையின் பின்னர் இந்த ஆண்டின் 13வது வருட ஜூலையிலும் முல்லைத்தாக்குதல், தெஹிவளைக் குண்டு வெடிப்பென்றெல்லாம் பெரும் அநர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன.

இவற்றை நோக்கும்போது இலங்கையில் கறுப்பு ஜூலை என்பது தொடர்ந்து கருமையடைந்து வருகின்றதேதவிர, எவ்விதத்திலும் அதன் நிறம் மாறவில்லை என்பதே கண்கூடு!

## "அரசுத் தலைவர்கள் எவரைப் பார்த்தாலும் 'பயங்கரவாதம்' பற்றியே பேசுகிறார்கள்"

தாகம் கொண்ட நரி ஒன்று குளத்தங் கரையில் இறங்கி நீர் அருந்திக் கொண்டிருந்தது. பசியால் தவித்துக்கொண்டிருந்த முதலை நரியின் கால்களில் ஒன்றைக் கவ்விப்பிடித்து நீருக்குள் இழுக்க ஆரம்பித்தது. வசமாகச் சிக்கிவிட்ட நரி வழமையான தனது மூளையைப் பாவித்து "ஐயோ பாவம் எனது கால் என்று நினைத்துக்கொண்டு ஆலமரத்தின் வேரையல்லவா பிடித்து இழுக்கிறது இந்த முதலை!" என்று பரிகசித்தது. இந்தப் பேச்சை நம்பிய முதலை நரியின் காலை விடுத்து பக்கத்தில் நீரில் நீட்டிக்கொண்டிருந்த ஆலமரத்தின் வேரைப் பற்றிக் கொண்டது. அன்று முதலையிடம் தப்பிச்சென்ற நரி அதன்பிறகு அந்தப் பக்கமே தலைகாட்டுவதில்லையாம்!

தமிழர் பிரச்சனையத் தீர்த்துவைத்து, இந்த நாட்டை மீண்டும் சௌபாக்கியமுள்ள நாடாக மாற்றுவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்ளும் இலங்கை அரசின் இன்றைய போக்கையும், நடவடிக்கைகளையும் பார்க்கையில், மேலே நாம் குறிப்பிட்ட கதையைப் போன்று நிலமை மாறிவிடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அரசுத் தலைவர்கள் எவரைப் பார்த்தாலும் 'வடபகுதி பயங்கரவாதம்' பற்றித்தான் பேசுகிறார்கள். ஜனாதிபதி அவர்கள் சர்வதேசப் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அமெரிக்காவின் ஆதரவை நாடி கடிதம் எழுதுகிறார். தென் கொரிய ஜனாதிபதியுடன் ஆலோசனை நடத்துகிறார்.

உலகப் பயங்கரவாதத்தை ஒழிக்க ஜனநாயக நாடுகள் எல்லாம் ஒன்றுபடவேண்டும் என்று பிரதம மந்திரி ஆலோசனை வழங்குகிறார். வடபகுதி பயங்கரவாதிகளை ஒழித்தே தீருவோம். அதைவிட வேறு ஜோலியே இல்லை என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் சூளுரைக்கிறார்.

வடபகுதியில் இன்று நிலவும் நிலமைக்கு மூலகாரணம் என்ன? இந்த அளவுக்கு அதனை வளரவிட்டதற்கு யார் பொறுப்பு? இனிமேலும் இது நீடிக்காமல் தடுக்க வழியென்ன? என்பவைகளை சாங்கோபாங்கமாக ஆராய்ந்து தமிழ் மக்களின் நியாயபூர்வமான பிரச்சனைகளை விரைந்து தீர்க்க முயற்சியாமல், 'வடபகுதி பயங்கரவாதம், சர்வதேசப் பயங்கரவாதம்' என்ற வகையில் தொடர்ந்தும் குட்டையைக் குழப்புவதாயின், முதலை நரியின் காலை விடுத்து, மரத்தின் வேரைப் பிடித்துக் கொள்ள, நரி தப்பிச்சென்ற கதையாகவே மாறிவிடும்.

தமிழ்ப் பகுதிகளில் இயங்கிவரும் தீவிரவாத இளைஞர் இயக்கங்களுக்கு சில வருடங்களுக்கு முன்னர் இருந்ததைவிட இப்பொழுது மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளது என்பதை அரசு உணரவேண்டும். இதற்குக் காரணம் என்ன?

'பயங்கரவாதத்தை' அழிப்பதற்கென மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை இப்பகுதி மக்கள் நேரில் கண்ணால் காண்கிறார்கள்; காதால் கேட்கிறார்கள்; சில சமயம் அவர்களே பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். அது மட்டுமல்ல, இப்படியான அட்டூழியங்களுக்குள்ளாகும் இளைஞர்கள் இப்பிரதேச மக்களின் 'இரத்தத்தின் இரத்தம்' என்ற உணர்வும் மேலோங்கி நிற்கின்றதல்லவா?

எனவே அவர்களை அழித்தொழிப்பது என்று அரசு கிளம்புவதனால் பொதுமக்களின் ஆதரவையே இழந்து வருகின்றது.

இவ்வாறு நாம் சுட்டிக்காட்டுவது தமிழர் என்ற காரணத்தினால் என்று மட்டும் கருதுவது தவறாகும். யதார்த்த நிலமையை உணர்ந்து அரசு செயல்படவேண்டும். நிரந்தரமாக இப்பிரதேசங்களில் அமைதி தோற்றுவிக்கப்பட வேண்டுமென்பதில் நாம் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதே முக்கிய காரணம் என்க.

*யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான ஈழநாடு பத்திரிகை நடுநிலை நின்று நல்ல கருத்து சொன்னது. (தற்போதைய 'ஈழநாடு'கள் அதில் சேராது) 1984ல் ஈழநாடு பத்திரிகையில் அதன் ஆசிரியர் ந.சபாரத்தினம் எழுதிய ஆசிரியர் தலையங்கமே மேலே மறுபிரசுரமாகியுள்ளது. காலம் மாறலாம்; உண்மை ஒரு நாளும் மாறாது.*


படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி — பூலான்தேவி — 3

தருவது — ரசிகன்

**இதுவரை**

பூலான் தேவிக்கு ஒரு பெரியப்பா இருக்கிறார். பெயர் பிஹாரிலால். பூலான் தேவியின் தந்தையை ஏமாற்றி அவரது காணிகளை அபகரித்துவிட்டார். பூலானுக்கு அப்போது பத்துவயது. ஒரு நாள் பூலானும், அவள் அக்கா ருக்குமணியும் தமது காணிக்கு செல்கிறார்கள்.

பெரியப்பாவின் மகனும் காவலர்களும் அவர்களை விரட்டுகிறார்கள்.

**இனி.**

என் அக்கா ருக்குமணியின் கையைப் பிடித்திருந்தவனை பலமாக கடித்தேன் அல்லவா?

'அய்யோ' என்று அலறியபடி அவன் கையை உதறிக்கொண்டு கூவ, என் பெரியப்பாவின் மகன் மையாதீன் என்னை நோக்கி பிசாசு மாதிரி பாய்ந்து வந்தான்.

நான் ஓடினேன். கடலைப்பயிர்கள் மத்தியில் மறைந்துகொண்டேன். அவன் மூச்சு இரைத்தபடி ஓடிவந்துகொண்டிருந்தான்.

நான் மறைந்திருந்ததை அவன் கவனிக்கவில்லை. அவன் என்னைத் தாண்டும்போது அவன் கால்களுக் கிடையே என் கால்களை நீட்டினேன்.

அப்படியே நிலைகுலைந்து செம்மண் சேறு நிறைந்த களியில் வீழ்ந்தான் பாருங்கள், எனக்கு.. எனக்குச் சிரிப்பை அடக்கமுடியவில்லை.

வெள்ளையும் சொள்ளையுமாக உடை அணிந்திருந்தான் அல்லவா?. இப்போது காவியுடைமாதிரித் தெரிந்தது. யாருக்குத் தான் சிரிப்பு வராது? நான் கைகொட்டிச் சிரித்தேன்.

அவன் எழுந்து தன்னை ஒரு தரம் பார்த்துக் கொண்டான். அவன் முகம் குரூரமாக மாறிக்கொண்டிருந்தது.

"நாயே இங்கேயா இருக்கிறாய்?" என்று கத்திக்கொண்டு என்னை நோக்கி பாய்ந்தான். நான் கடலைப் பயிர்களோடு ஒட்டிக்கொண்டு, ஒரு கோழிக்குஞ்சு மாதிரி நின்றேன்.

தனது கைகளால் என் தலைமுடியை பற்றி என்னைத் தூக்கினான். "அம்மா..' என்று கத்தினேன். அப்படியே மேலே தூக்கி அடுத்த நொடியே என்னை தரையை நோக்கி வீசியடித்தான்.

உடம்பெல்லாம் வலித்து, காலால் எட்டி உதைத்துவிட்டு, என் வயிற்றில் ஏறி மிதித்தான். அவன் முகம் எனக்கு மங்கலாகத் தெரிந்தது. தலை சுற்றியது.

"காணியா கேட்கிறாய் காணி? நாயே செத்துத்தொலை!" என்று சொல்லிக் கொண்டே குனிந்து என் தலைமுடியை கொத்தாகப்பிடித்து மீண்டும் தூக்கினான். மீண்டும் தரையை நோக்கி எறியப்பட்டுக் கொண்டிருக்க, அந்த வலி தெரியாமல் மயங்கிப்போனேன்.

நான் மயங்கிவிழுந்தபின்னரும் அந்த பிசாசு என் தலையில் காலால் உதைத்துக்கொண்டிருந்ததாக என் அக்கா பின்னர் சொல்லித் தெரிந்துகொண்டேன்.

மெல்ல மெல்ல எனக்கு நினைவு திரும்பிக்கொண்டிருந்தது. யாரோ விசும்பி விசும்பி அழுவது கேட்டது. எனக்கு உடம்பெங்கும் நரக வேதனையாக வலித்தது. தலை பாரமாக இருந்தது.

கண்களைத் திறந்து பார்த்தேன். அம்மா அழுது கொண்டிருந்தாள். அக்கா ருக்குமணி தேம்பித்தேம்பி அழுது கொண்டிருந்தாள். அம்மா... அம்மாவின் நெற்றியிலிருந்து அது... அது என்ன... இரத்தம். இரத்தமேதான். எங்கிருந்து அத்தனை பலம் வந்ததோ தெரியவில்லை வலியெல்லாவற்றையும் மறந்துவிட்டு, படுக்கையில் இருந்து எழுந்து "அம்மா" என்று கத்தியபடி ஓடினேன். அம்மா என்னை அணைத்துக்கொண்டாள். கதகதப்பாக இருந்தது.

"எல்லாம் உன்னால் தான்" என்றாள் அக்கா. எனக்கு எதுவுமே புரியவில்லை.

என் அப்பாவும், அம்மாவும் எங்கள் பெரியப்பாவின் காணிகளில் கடலை திருடி வரும்படி எங்களை அனுப்பி வைத்தார்களாம். பச்சைப் பொய்தானே? ஆனால் அந்தக் கிராம அதிகாரி நம்பி விட்டான். நம்புவதுபோல நடித்தான் என்றும் சொல்லலாம்.

பெரியப்பாவின் பிள்ளை முறையீடு செய்யும்போதே கிராம அதிகாரிக்கு தேவையானதைக் கொடுத்திருப்பான் அல்லவா? வாங்கிய கூலிக்கு வஞ்சகம் பண்ணாமல் நடந்தால்தானே கிராம அதிகாரி கொழுக்கலாம்!

என் அப்பாவையும், அம்மாவையும் ஒரு மரத்தில் கட்டிவைத்து அடி அடியென்று அடித்திருக்கிறார்கள். அம்மாவின் தலையில் அடி விழுந்ததில் நெற்றி உடைந்துவிட்டது.

எங்கள் கிராமத்தவர்கள் பலர் அந்தக் கொடுமை நடந்தபோது மௌனமான சாட்சிகளாக இருந்தார்கள்.

சொல்வதெல்லாம் பொய், நடப்பதெல்லாம் வடிகட்டின அநியாயம் என்று தெரிந்தும் யாரும் ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசவில்லை.

பயம். பொல்லாத பயம். பணம் உள்ளவனிடம் பயம். கையில் அதிகாரம் உள்ள நாய்களிடம் பயம். பணமும், அதிகாரமும் தங்களையும் கடித்துக்குதறி விடுமோ என்ற பயம்.

நத்தைகளைப் பார்த்திருப்பீர்கள் தானே? தங்கள் ஓட்டுக்குள் சுருண்டு கொள்ளுமல்லவா? கிராம மனிதர்களும் அப்படித்தான்- பயத்துக்குள் தங்களை சுருட்டி வைத்திருந்தார்கள்.

அந்த கிராம அதிகாரி ஒரு ஈனப் பிறவி. பெரிய தலை. சின்னக் கண்கள். தலைக்குச் சம்பந்தமில்லாததுபோல குச்சி உடம்பு. பெண் பிள்ளைகளைக் கண்டால் 'ஈ' என்று இளிப்பான்.

எங்கள் வீட்டில் ஒரு ஆட்டுக்குட்டி இருந்தது. ஒருநாள் கட்டை அவிழ்த்துக் கொண்டு ஓடிவிட்டது.

நான் துரத்திக்கொண்டு ஓடினேன். கிராம அதிகாரியின் வீட்டு வளவுக்குள் ஓடிவிட்டது. நான் அதன் பின்னாலேயே ஓடினேன்.

ஆட்டைப்பிடித்துக்கொண்டு திரும்பி வந்தபோது கிராம அதிகாரி வீட்டு ஜன்னல் வழியாக தற்செயலாக என் பார்வை சென்றது.

அந்த கிராம அதிகாரி ஒரு பெண்ணைக் கட்டி பிடித்துக் கொண்டிருந்தான்.

எனக்கு வேடிக்கையாக இருந்தது. கட்டிப்புரண்டு சண்டை போடுகிறார்களோ என்று நினைத்தேன். யார் ஜெயிக்கிறார்கள் பார்ப்போமே என்று ஜன்னல் அருகே சென்று பார்த்தேன்.

கிராம அதிகாரி அந்தப் பெண்ணின் உடம்பெல்லாம் தடவிக்கொண்டிருந்தான். இது என்ன மாதிரியான சண்டை? அவள் திருப்பி அடிக்காமல் சிரித்துக்கொண்டு, உடம்பை நெளித்துக் கொண்டு, சில சமயம் கண்களை மூடி ஏதோ முணுமுணுத்துக் கொண்டு நிற்கிறாளே!

கிராம அதிகாரி அந்தப் பெண்ணின் முந்தானையை விலக்கினான். அவளுக்கு வெட்கமே இல்லையாக்கும். அந்த கிராம அதிகாரி தன் கைகளால்.. சேச்சே.. நான் அந்த இடத்தைவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிவந்துவிட்டேன். அது சண்டையில்லை. ஏதோ தப்பான காரியம் என்று உள்மனது சொன்னது. நல்ல வேளை நான் பார்த்ததை அவர்கள் காணவில்லை. கண்டிருந்தால் எனக்கு திருட்டுப்பட்டம் கட்டி தோலை உரித்திருப்பான்.

அன்றுமுதல் அவனைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. கல்லால் எறிந்து மண்டையை உடைக்கவேண்டும் போல ஆசை வரும்.

என் அம்மாவும், அப்பாவும் அந்த கொள்ளிவாய்ப் பிசாசால் அடித்து வதைக்கப் பட்டபிறகு என் மனதில் ஒரு வெறியே வந்துவிட்டது.

அவனுக்கு திருப்பிக்கொடுக்க வேண்டும். அவனை என் அப்பாவின் காலடியில், அம்மாவின் காலடியில் விழுந்து, கதறி மன்னிப்பு கேட்க வைக்க வேண்டும். மன்னிப்பு கேட்கக் கேட்க அவன் முகத்தில் காலால் எட்டி எட்டி உதைத்துக்கொண்டே 'அ..ய்..யோ!' என்று அவன் ஓலமிடுவதை காது குளிரக் கேட்கவேண்டும்.

அன்று இரவு தூக்கம் வரவில்லை. என் அருகே அக்கா ருக்குமணி படுத்திருந்தாள். மெல்லிய குறட்டையோடு ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். எப்படித்தான் இவளால் தூங்க முடிகிறதோ?

நான் கண்களை மூடிக்கொண்டேன். உடம்பு வலி ஒரு பக்கம் முள் முள்ளாக குத்திக்கொண்டிருந்தது.

என் கண்கள் மூடியிருக்க, எனக்குள் அந்தக் காட்சி தெரிந்தது.

வானத்தில் இருந்து, வெள்ளை வெளேரென்ற ஆடையோடு ஒரு தேவதை



இறங்கிவந்தாள். அவள் கூந்தல் காற்றில் அலைபாய்ந்து கொண்டிருந்தது. அவள் கண்கள் இரத்தம் போல சிவந்திருந்தன.

எங்கள் கிராமத்திற்குள் திடீரென்று சில புதிய ஆட்கள் வந்துபோவார்கள். அவர்கள் கைகளில் ஏதோ பெரிதாக வைத்திருப்பார்கள். அதுதான் துப்பாக்கி. அவர்கள் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். என்றெல்லாம் அறிந்து வைத்திருந்தேன்.

என் கனவில் வந்த தேவதையும் கையில் ஒரு துப்பாக்கி வைத்திருந்தாள். அவள் சிவந்த விழிகள் நாலாபுறமும் யாரையோ தேடிக்கொண்டிருந்தன. திடீரென்று அவள் விழிகள் மின்னுகின்றன.

கிராம அதிகாரி ஒரு பெண்ணை துரத்திக்கொண்டு ஓடுகிறான். அந்தப் பெண் மன்றாடுகிறாள். கிராம அதிகாரி அவள் சேலையை உருவிக்கொள்கிறான். மார்புக்கு குறுக்காக கைகளை மறைத்தபடி அந்தப் பெண் கூனிக் குறுகி நிற்கிறாள்.

கிராம அதிகாரி அவளைத் தள்ளி தரையில் வீழ்த்திவிட்டு, அவள் உடல்மேல் பரவுகிறான். அவள் வாயை தன் வாயால் கௌவிப் பற்களால் கடித்துக்கொண்டிருக்கிறான்.

தேவதை இப்போது உரத்துச் சிரிக்கிறாள். திடுக்கிட்டுப்போன கிராம அதிகாரி தலையை மட்டும் திருப்பிப் பார்க்கிறான்.

தேவதையின் துப்பாக்கி வெடிக்கிறது.

'டுமில்!'

கிராம அதிகாரியின் நெற்றியில் இருந்து இரத்தம் குபுக்கென்று பாய, மரத்தில் இருந்து முறிந்துவிழும் தடிபோல தரையில் விழுகிறான்.

நான் கைகொட்டிச் சிரித்தேன். சிரித்தேன். சிரித்துக் கொண்டே இருந்தேன்.

உலுக்கப்பட்டேன். கண்விழித்துப் பார்த்தால் அக்கா ருக்குமணியும், அம்மாவும் என்னை சுற்றி நின்றார்கள். அம்மா என் உடலை தொட்டுப்பார்த்தாள். காய்ச்சலில் பிதற்றுகிறேனோ என்று நினைத்திருப்பாள். பாவம்

"என்னடி சிரிப்பு?"

"ஒன்றுமில்லையம்மா!"

"ம்.. பேசாமல் தூங்கு!"

"சரியம்மா!"

நான் தூங்கவில்லை.

மாறவேண்டும். நானும் ஒரு தேவதை



பூலான்

யாக மாறவேண்டும். விரட்ட வேண்டும். எங்களைக் கடிக்கும் நாய்களை ஓட ஓட விரட்ட வேண்டும். அந்த நினைப்பிலேயே தூங்கிப் போனேன்.

என் வாழ்க்கையில் சந்திக்கப்போகும் முதலாவது நரகம் எனக்காக தயாராகிக் கொண்டிருந்தது.

என் பதினொராவது வயதில் எனக்கு மாப்பிள்ளை தேடினார் அப்பா. என் அக்கா ருக்குமணிக்கு கல்யாணம் செய்து வைத்துவிட்டார்கள். அதன் பின்னர் என்னைக் கொடுக்க ஒரு இடம் தேடினார் அப்பா.

ஒரு நாள் என்னை அழைத்து தலை சீவிவிட்டு, சேலைகட்டி, முக்காடு போட்டு விட்டாள் அம்மா. என்னைப் பார்க்க எனக்கே வேடிக்கையாக இருந்தது.

"அய்.." துள்ளிப்பார்த்தேன். "உஷ். இனிமேல் இப்படியெல்லாம் துள்ளாதே. அடக்கமாயிரு என்ன."

"ஏனம்மா?"

"உனக்கு மாப்பிள்ளை பார்த்துவிட்டார் அப்பா."

"மாப்பிள்ளை என்றால் என்னம்மா?"

"உன் அக்காவை ஒருவர் வந்து கல்யாணம் பண்ணி கூட்டிப்போனாரே. அவர் மாதிரித்தான்."

"அவர் மாதிரியே இருப்பாராம்மா? ஒரு கண்கோணலாக தெரியுமே அப்படியே தானா?"

"இது வேறு மாதிரி இருப்பார். மாலையில் நீயே நேரில் பாரேன்!"

"அம்மா!"

"என்னடி?"

"ஏன் கல்யாணம் பண்ணிக்கொள்கிறார்கள்?" என்றேன். அம்மா சிரிப்பை அடக்கிக்கொள்வது மாதிரி தெரிந்தது.

"ஆங்.. ம்.. குடும்பம் நடத்த!"

"குடும்பம் நடத்துவது என்றால்?"

"பிள்ளைகள் பெறலாம். அவர்களோடு விளையாடலாம்"

"பிள்ளை பெறலாமா? எப்படியம்மா? சொல்லேன்?"

என் தலையில் குட்டிவிட்டு அம்மா எழுந்து போய்விட்டாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

மாலை வந்தது.

இரண்டு பேர் வந்தார்கள்.

என் வாழ்க்கை நரகம் நோக்கி முதலடியை எடுத்துவைத்துவிட்டது என்பதை அப்போது நான் அறியவில்லை.

(தொடர்ந்து வரும்)

# அதிவேக ரயிலும் பூலான்தேவியும்



'பூலான்தேவி இன்னமும் அப்படியே தான் இருக்கிறார்; மாறவில்லை;' என்று சொல்லத்தக்க சம்பவம் ஒன்று சமீபத்தில் நடைபெற்றிருக்கிறது.

பூலான்தேவி எம்.பி.யும் அவரது ஆதரவாளர்களும் டில்லியில் ரயிலில் ஏறினார்கள். அது அதிவேக எக்ஸ்பிரஸ் ரயில்.

இடையில் ஒரு நிலையத்தில் ரயில் நின்றபோது பூலான்தேவியும், அவரது ஆதரவாளர்களும் கீழே குதித்து எஞ்ஜின் பெட்டியில் ஏறிக்கொண்டனர்.

எஞ்ஜின் சாரதியிடம் பூலான்தேவி கேட்டார் "துண்ட்லாவில் ரயில் நிற்குமா?"

"இல்லை மேடம். இது எக்ஸ்பிரஸ். அங்கெல்லாம் நிறுத்தமுடியாதே!" என்று எஞ்ஜின் சாரதி சொல்ல, "அப்படியா பரவாயில்லை, நான் சொல்கிறேன் நீங்கள் நிறுத்துங்கள்" என்று கண்டிப்பான உத்தரவு போட்டார் பூலான்தேவி.

பூலான்தேவி என்றாலே பயம். ஆதரவாளர்கள் வேறுகூட இருக்கிறார்கள். சாரதி பயந்துபோய், பூலான்தேவி சொன்ன இடத்தில் ரயிலை நிறுத்த, பூலான்தேவியும் ஆதரவாளர்களும் இறங்கிச் சென்று விட்டனர்.

இந்த விஷயம் எப்படியோ எதிர்க்கட்சிகளுக்கு தெரியவந்தமையால் சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

என்ன காரணம் சொல்லலாம் என்று ரயில்வே அமைச்சகம் கையைப் பிசைந்து கொண்டிருந்தபோது ஒரு காரணம் கிடைத்தது. பூலான்தேவி பயணம் செய்த தினத்தில் சாரதியாக இருந்தவர் சில நாட்களில் ஓய்வு பெற இருந்தார். அதை வைத்து கதையையே மாற்றி விட்டார்கள்.

"சாரதிக்கு பிரியாவிடை தர விரும்பிய சக ஊழியர்கள்தான் ரயிலை மறித்தார்கள். பூலான் தேவி ஒன்றுமே செய்யவில்லை," என்று சொல்லிவிட்டது ரயில்வே அமைச்சு.

இந்திய மத்திய ரயில்வே துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான், பூலான்தேவிக்கு நெருக்கமானவர் என்பதால் வண்டவாளம் தண்டவாளம் ஏறாமல் பார்த்துக் கொண்டார்.

ரயில்வே அமைச்சகம் சொல்வதை யாரும் நம்பவில்லை. அதனால் என்ன?

# நிதானமாக — பதட்டம் இல்லாமல் ஒரு பயங்கரக் கொலை

'பீலஸ்' என்றொரு ஆங்கிலப் படத்தில் கொலைசெய்துவிட்டு, உடம்பை துண்டு துண்டாக வெட்டி ஒளித்துவைத்திருப்பார் ஒரு பேராசிரியர். தன்னிடம் கல்விகற்கும் மாணவிகளை கொலை செய்து துண்டு போடுவதுதான் பேராசிரியரின் பொழுது போக்கு.



ஓமனா

படம்தானே என்று நினைத்துவிடாதீர்கள். அந்தப் படக்கதையையும் தோற்கடிக்கும் நிஜக்கதையொன்று தமிழ்நாட்டில் நடந்திருக்கிறது.

படக்கதையில் கொலை செய்தவர் பேராசிரியர். இந்த நிஜக்கதையில் கொலை செய்திருப்பவர் ஒரு டாக்டர். பெண் டாக்டர். அவர் ஒரு கண் டாக்டர். பெயர் ஓமனா.

கடந்த ஜூலை 12ம் திகதி தனது பயங்கரக் கொலை விளையாட்டை அரங்கேற்றியிருக்கிறார், ஓமனா.

முதலில் டாக்டர் ஓமனா பற்றி சிறு அறிமுகம்; இந்தியாவில் உள்ள கேரள மாநிலத்தைச் சேர்ந்தவள் டாக்டர் ஓமனா.

திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். ஓமனாவுக்கு பல ஆண் நண்பர்கள். அதனால் குடும்பத்தில் சச்சரவு மூண்டது. கணவர் பிள்ளைகளோடு தனியே சென்றுவிட்டார்.

தனியாக மருத்துவத் தொழில் பார்த்துக் கொண்டிருந்த ஓமனா சொந்தமாக ஒரு வீடு கட்ட ஆசைப்பட்டார். அந்த வீட்டு விடயம் தொடர்பாக முரளிதரன் என்பவரோடு பழக்கம் ஏற்பட்டு, அதுவே பின்னர் காதலானது.

முரளிதரனுக்கும் மனைவி, இரண்டு பிள்ளைகள். முரளிதரனை தனது கட்டுப்பாட்டில் மட்டுமே வைத்திருக்க நினைத்தார் ஓமனா. ஆனால் முரளிதரனோ ஓமனாவையும் காதலித்தார். அதே சமயம் தனது குடும்பத்தையும் இழக்க விரும்பவில்லை.

முரளிதரனின் வீட்டில் ஏற்பட்ட நெருக்கடியால், ஓமனாவை சந்திப்பதை நிறுத்தி விட்டார் முரளிதரன்.

ஓமனாவால் முரளிதரனை மறக்கமுடியவில்லை. தன்னை மறந்துவிட்டு முரளிதரன் சந்தோசமாக இருப்பதும் பிடிக்கவில்லை.

கிட்டத்தட்ட ஒரு மனநோயாளியாகவே மாறிவிட்டார் ஓமனா. இடையே ஒருதடவை, முரளிதரனை மறப்பதற்காக மலேசியா போனார் ஓமனா.

அங்குபோயும் மனநோய் வளர்ந்ததே தவிர, மறக்க முடியவில்லை. மலேசியாவில் வைத்துத்தான் ஓமனாவுக்குள் அந்த முடிவு ஏற்பட்டது.

முரளிதரனைக் கொல்லவேண்டும். காதலிப்பதாக கூறி தன்னை ஏமாற்றிவிட்டு, முரளிதரன் சந்தோசமாக வாழ விடுவதில்லை என்ற முடிவோடு ஓமனா திரும்பி வந்தார்.

மலேசியாவில் வைத்தே இரண்டு கூர்மையான கத்திகளையும் வாங்கி கையோடு கொண்டுவந்துவிட்டார்.

எப்படியோ முரளிதரனைச் சந்தித்து அவர் மனதை சபலப்படுத்தி, ஊட்டிக்கு வரவழைத்தார் ஓமனா.

ஊட்டியில் உள்ள ஒரு ஹோட்டலில் முரளிதரனும், ஓமனாவும் தங்கியிருந்தார்கள்.

காதல் லீலைக்கு உற்சாகம் தரும் ஊசிமருந்து என்று நம்பவைத்து, மயக்க மருந்தை முரளிதரனுக்கு ஊசியால் ஏற்றிவிட்டார்.

மயக்கமான முரளிதரனை தனது கத்திகளால் மிக மிக நிதானமாக- சின்னச் சின்னத் துண்டுகளாக வெட்டி பொலித்தீன் பைகளில் போட்டுக் கட்டினார். நாற்றம் வராதிருக்க சென்ட் அடித்துக் கொண்டார்.

எல்லாவற்றையும் தனது சூட்கேசுக்குள் போட்டு எடுத்துக் கொண்டு, வேறு பெயரில் எடுத்திருந்த ஹோட்டல் ரூமை காலிசெய்துவிட்டு புறப்பட்டார் ஓமனா.

மாருதி வேன் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு புறப்பட்ட ஓமனாவுக்கு காலம் கைகொடுக்கவில்லை.



பார்சல் செய்யப்பட்ட பாகங்களும், வெட்டப்பயன்பட்ட கத்திகளும்

வேன் இடைவழியில் பெற்றோல் இல்லாமல் நின்றுவிட்டது. அந்த நேரம் பார்த்து நாற்றம் கிளம்பியிருக்கிறது. சாரதிக்கு சந்தேகம் வர ஆரம்பித்து விட்டது.

என்னதான் நிதானமாக இருந்தாலும், வேன் இடைவழியில் நின்றவுடன் ஓமனாவை பதட்டம் தொற்றிக் கொண்டது.

வேன் சாரதி பெற்றோல் போடச் செல்வது போலச் சென்று பொலிசுக்கு தகவல் கொடுத்துவிட்டார்.

அதற்கிடையே சாரதியின் போக்கில் சந்தேகப்பட்ட ஓமனா வேனைவிட்டு நைசாக இறங்கி நழுவிவிட்டார்.

பொலிஸ் வந்து வேனுக்குள் இருந்த சூட்கேஸைப் பிரித்து சோதனையிட்டது.

சின்னச் சின்ன பொலித்தீன் பைகளில் உடல் உறுப்புக்கள் பார்சல் செய்யப்பட்டிருந்தன.

அதிர்ச்சியடைந்த பொலிஸார் சுதாகரித்துக்கொண்டு வேன் நின்ற பகுதியை சல்லடை போட்டுத் தேடினார்கள். தேடுதலுக்கு பலன் கிடைத்தது.

ஒரு புதரின் பின்னால் ஒளிந்திருந்த ஓமனா மாட்டிக்கொண்டாள்.

இப்போது பொலிஸ் காவலில், ஒரு படு பயங்கரமான கொலை செய்த சுவடோ, பதட்டமோ இல்லாமல் வெகு இயல்பாக இருக்கிறாள் ஓமனா.



படிப்பகம்

# பந்தயத்தில் வந்த நிலா



படத்தைப் பார்த்ததும் விழிகள் விரிகிறதல்லவா? அழகுப் பெண்மணி அணிந்திருப்பது வித்தியாசமான தொப்பி.

ஜெர்மன் போன்ற நாடுகளில் குதிரைப் பந்தயம் என்றால் போதும் கட்டுக்கடங்காத கூட்டம் கூடிவிடும். பெண்களுக்கும் குதிரைப் பந்தயம் என்றால் கொள்ளை ஆசை. படத்தில் இருப்பவர் ஒரு வெறிபிடித்த ரசிகை. குதிரைப் பந்தயம் என்றால் உயிர். ஜெர்மனில் ஹாம்பர்க் டெர்பி குதிரைப் பந்தயத்தை காண்பதற்காக இப்படி வித்தியாசமான தொப்பியோடு வந்திருந்தார்.

பந்தயம் காண வந்தவர்களுக்கு எந்தக் குதிரையை ரசிப்பது என்று ஒரே தடுமாற்றம். இவரது தலையில் உள்ள குதிரையும் அழகாகத்தானே இருக்கிறது.




# ஒலிம்பிக்கில் ஒரு வலம்

ஒலிம்பிக் போட்டிகளை பல கோடிக்கணக்கான மக்கள் நேரிலும், தொலைக்காட்சிகளிலும் கண்டு களிக்கிறார்கள். போட்டிகளில் வென்று பலரது கவனத்தை கவருகிறவர்களும் இருக்கிறார்கள். இசகு பிசகாக ஏதாவது காரியம் செய்து கவனத்தை கவவகிறவர்களும் இருக்கிறார்கள். படத்தில் இருப்பவர் இரண்டாவது ரகம். தலை முடியை ஒலிம்பிக் சின்னம் போல வெட்டிக்கொண்டு மைதானத்தில் வலம் வந்தார். பலத்த ஆரவாரம் கிடைத்தது.

இவரது பெயர் லிவாண்டி. ஹங்கேரி நாட்டு தடகளவீரர். போட்டியில் வெற்றிபெறுகிறாரோ இல்லையோ, ஒலிம்பிக் ரசிகர்களை கவர்ந்துவிட்டார்.

# புஷ்டியான குட்டி




சுவிட்சர்லாந்தில் உள்ளது சூரிச். அங்குள்ள வன விலங்கு சரணாலயத்தில் ஒரு உலக அதிசயம் நிகழ்ந் துள்ளது.

ஜூலை மாதம் 3ம் திகதி அங்குள்ள காண்டாமிருகம் ஒன்று குட்டி ஈன்றது. குட்டியை பார்த்தவர்கள் முதலில் பயந்து, பின்னர் வியந்து போனார்கள்.

காண்டாமிருகக்குட்டியின் எடை 30 கிலோ. தாயின் வயிற்றில் 466 நாட்கள் இருந்து புஷ்டியாக பூமிக்கு வந்துள்ள அந்தக் குட்டிக்கு 'ரினோ' என்று பெயரிட்டுள்ளனர். படத்தில் அந்தக் குட்டியும், அதன் மேல் அமர்ந்திருக்கும் பறவைகள் இரண்டும் தெரிகின்றன.

# திரைகடல் ஓடும் சூரியப் படகு



சூரிய சக்தி மூலம் இயங்கும் கார்கள் இருக்கின்றன. சூரிய சக்தியால் விமானம் செலுத்தியும் பார்க்கப் பட்டுள்ளது என்பதெல்லாம் தெரிந்த செய்திகள்.

படத்தில் இருப்பது தான் முதன் முதலில் சூரிய சக்தி மூலம் இயங்கவைக்கப்பட்ட படகு. இந்தப் படகை வடிவமைத்தவர் கெனிசிஹோரி. ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்.

22 ஆயிரம் டப்பாக்களை வைத்து அலுமினியத்தால் சூரிய சக்தி பட்டரிகள் அமைக்கப் பட்டுள்ளன. இந்தப் படகின் எடை 370 கிலோ.

முதல் தடவை இந்தப் படகு பசுபிக் கடலைக் கடந்து சாதனை நிகழ்த்தியது. சமீபத்தில் இகுவடோரில் இருந்து டோக்கியோவரை இந்த சூரிய சக்தி படகில் பயணம் செய்து சாதனை படைத்துள்ளார் கெனிசிஹோரி. (படகின் அருகில் நிற்பவர்) இரண்டும் உலக சாதனை.

# தகவல் பெட்டி

## பணிவிடை செய்யும் திருமதி மனிதமலை

சாய்ந்திருக்கும் மிஸ்டர் மனித மலையை முரசு வாசகர்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

கண்டதையெல்லாம் வஞ்சகம் இல்லாமல் உண்டு, அதனால் மகிழ்ச்சி கண்டு, ஆகவே அதனால் குண்டு உடம்பானவர் இவர்.

மூக்குப் முட்ட பிடித்த புண்ணியத்தால் 455 கிலோவைத் தாண்டிவிட்ட (கிட்டத்தட்ட 950 இறாத்தல்) அண்ணர் மூச்சுவிட மாட்டாமல் அவதிப்பட்டார். இறுதியில் வீட்டுச் சுவரை இடித்து, இராட்சத படுக்கையில் கிடத்தி இவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதுவரை முரசில் செய்தி வெளியிட்டிருந்தோம். (முரசு 155 இல்)

தற்போது மருத்துவமனையில் மனித மலை சிகிச்சை பெற்றுவரும் காட்சிதான் படத்தில் உள்ளது.

அருகே இருந்து கரிசனையாகக் கவனிப்பவர் அவரது அன்பு மனைவி. அவரும் தனது கணவருக்கு ஈடுகொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டதுபோலத் தெரிகிறதா. கவலைப்படாதீர்கள், இப்போதுதான் 190 கிலோவை எட்டிப் பிடித்திருக்கிறார்.

வாய்க்கு ருசியாக சமைத்துப் போடுவது மட்டுமல்லாமல், மனித மலை உண்டதில் ஒரு பகுதியை திருமதி மனித மலையும் ஒரு பிடி பிடித்திருப்பார் போலிருக்கிறது. அதுதான் புஸ் புஸ் என்று இருக்கிறார். நல்ல வேளை, இவரும் நன்றாகப் பெருத்திருந்தால் வீட்டையே இடித்துத்தான் இருவயையும் வெளியே கொண்டுவந்திருக்க வேண்டும்.



www.padippakam.com

## மணிரத்னத்தின் புதிய படம்

இயக்குநர் மணிரத்னம் படங்களை இயக்குவதோடு, ஏனைய இயக்குநர்களை வைத்து படத் தயாரிப்பிலும் ஈடுபட்டு வருகிறார்.

200 நாள் கண்ட 'ஆசை' படத்தையும் மணிரத்னம் தயாரித்திருந்தார். அதை இயக்கியவர் வஸந்த்.

மீண்டும் மணிரத்னம்-வஸந்த் கூட்டணி ஒரு படத்தை தரப்போகிறது. படத்தின் பெயர்: 'நேருக்கு நேர்'. ஆசை பட நாயகன் அஜித்குமாரும், விஜயும் கதா நாயகர்களாக நடிக்க, மும்பாய் அழகிகள் இருவர் அறிமுகமாகின்றனர்.

ஒருவர் பெயர், சிம்ரன், இன்னொருவர் பெயர்: மது. (பெயரிலேயே போதையா)

இசை: தேவா. பாடல்கள், வைரமுத்து. ஒளிப்பதிவு கே.வி. ஆனந்த்.

இளைஞர்களையும், இளைஞிகளையும் கவரும் படமாக இயக்கப் போகிறாராம் வஸந்த்.

## பாண்டியராஜனின் விடுகதை

'நல்ல மனக்காரன்' படத்தில் ஒரு காட்சி. பண்ணையாரின் மகனாகவும், படித்த பணக்காரப் பெண்ணாகவும் திமிரோடு நடக்கும் ஒரு பெண்ணிடம் சவால் விடுகிறார் பாண்டியராஜன்.

"படிச்சவனுக்கு தெரியாத விஷயம் எல்லாம் படிக்காதவனுக்கு தெரியும். நான் ஒரு விடுகதை போடுகிறேன். நீ படிச்சவதானே பதில் சொல்" என்கிறார் பாண்டியராஜன்.

ஆக்கின புது நெல்லு சோறு, அவியல், பொரியல் இலையில் இருக்கு கண்ணம்மா. சாப்பிட வரும் முன்னே இலையை எடுத்துட்டு சாப்பிடுவோம். அது என்னம்மா? சொல்லம்மா ? என்று கேட்கிறார் பாண்டியராஜன். அவளோ பதில் தெரியாமல் தவிக்கிறாள். (நீங்களும்தானா?) பாண்டியராஜன் தனது அசட்டு முழியை உருட்டிக் கொண்டு பதில் சொல்வார்;

"அது கறிவேப்பிலை!"

பாண்டியராஜனின் ஜோடியாக ஜெயராகினி நடிக்கிறார். விரைவில் திரைக்கு வருகிறது.

## சில்க் விரதம்

சனிக்கிழமை தோறும் உண்ணாவிரதம் இருக்கிறார் சில்க் சுமிதா. ஏதாவது வேண்டுதலா? அதெல்லாம் இல்லை. உடலை கட்டுக்கோப்பாக வைத்திருக்கத்தான் விரதம்.

சில கேள்விகளும் சில்க் சொன்ன பதில்களும்.

கே:- பிடித்த பாடல்?
சில்க்:- "போனால் போகட்டும் போடா"
கே:- யாரையாவது காதலித்தது உண்டா?
சில்க்:- அது இரகசியம். மனதிற்குள் இருப்பதை வெளிப்படுத்துவது சரியா?
கே:- கவர்ச்சியின் இரகசியம்?
சில்க்:- நல்ல மனசு. அதனால் நல்ல கவர்ச்சி.
கே:- உங்கள் உடலில் கவர்ச்சியான பகுதி?
சில்க்:- ரசிகர்களிடம் கேட்பது நல்லது.
கே:- நிறைவேறாத ஆசை?
சில்க்:- திரைப் படிக்க முடியாதது.

## மின்சாரக் கனவு தொடரும்

பிரபுதேவா, அரவிந்தசாமி, கஜோல், நாசர் ஆகியோரின் நடிப்பில் வளர்ந்துவரும் படம் 'மின்சாரக் கனவு'

தமிழ் திரையுலகில் வேலை நிறுத்தம் நடைபெற்றதால் கஜோல் மும்பாய்க்கு பறந்துபோய் விட்டார். மீண்டும் படப்பிடிப்புக்கள் ஆரம்பித்ததும் கஜோலை பிடிக்கமுடியவில்லை. அவர் இந்தியில் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

அதனால் கஜோலுக்காக காத்திருக்கிறார்கள். அதற்குள் வதந்திகள் பரவிவிட்டன. படம் நிறுத்தப்பட்டு விட்டது. கதையை மாற்றப்போகிறார்கள் என்று ஏகப்பட்ட வதந்தி. "எல்லாமே பொய். கஜோல் வந்ததும் மின்சாரக் கனவு படப்பிடிப்பு தொடரும் என்கிறார் தயாரிப்பாளர் ஏ.வி.எம். சரவணன்."



ராம்கி-குஷ்பு
படம்: எனக்கொரு மகன் பிறப்பான்



அருண்குமார்-மந்த்ரா
படம்: பிரியம்

## திலகவதி சி.பி.ஐ

தமிழ்நாட்டில் உள்ள பெண் பொலிஸ் அதிகாரி திலகவதி. அவர் ஒரு எழுத்தாளர். 'அவசரம்' படத்திற்கும் கதை எழுதிவருகிறார். பொலிஸில் டி.ஐ.ஜி.யாக பதவி வகிக்கிறார்.

விஜயசாந்தி நடிக்க தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய நான்கு மொழிகளில் தயாராகும் படமொன்றுக்கு 'திலகவதி சி.பி.ஐ' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

ரகுவரன் வில்லனாக நடிக்கிறார். அருண்பாண்டியன், சித்தாரா இருவரும் காதல் ஜோடிகளாக நடிக்கின்றனர். இயக்கம் அய்யப்பா சர்மா.

இந்தியாவின் பிரபல பெண் பொலிஸ் அதிகாரி கிரண்பேடி போல விஜயசாந்தி முன்னர் நடித்தபடம் வைஜெயந்தி ஐ.பி.எஸ். கிரண்பேடியின் கதை தற்போது தமிழக சஞ்சிகை ஒன்றில் தொடராக வெளிவருகிறது.

## மறுத்தது ஏன்

'பிரியம்' படத்தில் தனது பிரியம்போல் எல்லாம் மந்த்ராவை நடிக்கவைத்துக் கொண்டிருக்கிறார் இயக்குநர்.

'பிரியம்' படத்தில் நடித்து முடிப்பதற்கு இடையிலேயே கிசு கிசுவில் மாட்டிக்கொண்டார் மந்த்ரா.

'செல்வா' படத்தில் முதலில் மந்த்ராதான் நடிப்பதாக இருந்தது. "நடிக்க வேண்டாம்" என்று அன்புக் கட்டளை போட்டுவிட்டார் அருண்குமார். அதனால் 'செல்வா' படவாய்ப்பு பறிபோய்விட்டது.

'பிரியம்' படத்தில் நடித்து முடிக்கும்வரை தனது கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும் என்று செல்ல மிரட்டல் போட்டுள்ளார் ஹீரோ அருண்குமார்.

## புருஷன்–பொண்...

ரஞ்சிதா இருக்கிறாரே ரஞ்...
முன்பெல்லாம் முன்னணி ஹீ...
மட்டுமே நடிப்பேன். குட்டி ஹீ...
தொட்டு நடிக்கமாட்டேன் எ...
காட்டிக்கொண்டிருந்தவர்.

முன்னணி ஹீரோக்கள் சி...
கைக்குள் அடக்கமாகியிருந்த ...
பந்தா காட்டினார். இப்போது...
வுக்கு நேரம் சரியில்லை. ...
ஹீரோக்கள் முகத்தை திரு...
டார்கள்.

வேறு வழியில்லாமல் ...
யெல்லாம் முட்டை கட்டி ...
"ஹீரோ யாராக இருந்தாலு...
என்று இறங்கிவிட்டார்.

பாண்டியராஜனுடனும் ஒ...
ஜோடி சேர்ந்திருக்கிறார் ...
படத்தின் பெயர்: 'புருஷன் பெ...

ஒரு வருடத்திற்கு முன்...
ராஜனுடன் ஜோடியாக நடிக்...
செய்யச் சென்ற தயாரிப்பாள...
காத குறையாக விரட்டியவ...
மறந்திருப்பாரோ?

## பொல்லாத நிபந்தனை

சட்டைப் பொக்கற்றில் முட்டைகளைப் போட்டுக் கொண்டு வந்தால் என்னை கட்டியணைக்கலாம். ஆனால் ஒரு நிபந்தனை. முட்டைகள் உடையவே கூடாது என்று நிபந்தனை போட்டார் மகேஸ்வரி.

நிபந்தனையை ஏற்றுக் கொண்டார் அஜித்குமார். முட்டைகளும் உடையாமல், சந்தர்ப்பத்தையும் தவறவிடாமல் மகேஸ்வரியை கட்டியணைந்து அசத்தினார்.

இக்காட்சியை கண் திரையக் காணவேண்டுமா? 'நேசம்' படம் வரும்வரை பொறுத்திருக்கவும்.

கே.சுபாஸ் இயக்க, தேவாவின் இசையில் 'நேசம்' வளர்கிறது.

## அறிமுகம்—புதுமுகம்

அருகே இருப்பவர்தான் 'ரிவியா'. பார்த்தாலே கலைச் சேவைக்கு துடிப்பவர் போலத் தெரிகிறதல்லவா. இவரது கலைச் சேவை துடிப்பைக் கண்டு பிடித்து தமிழில் நடிக்க வைத்திருக்கிறார்கள். 'செல்வா' படத்தில் விஜய்யின் ஜோடியாக திறமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

'செல்வா' படம் ஹிட்டாகட்டும் ரிவியா ரசிகர்களுக்காக மேலும் தியாகங்களை செய்வார். ரிவியாவிடம் காண்பது சிரிப்பா அல்லது சிரிப்'பூ'வா?



ரிவியா
படம்: செல்வா



ஸ்ரீதேவி

## தேவியின் நிபந்தனை

ஸ்ரீதேவிக்கு திருமணம் என்று தொன்று தொட்டே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. திருமணம் மட்டும் நடந்த பாடில்லை.

ஸ்ரீதேவி போடும் நிபந்தனைகள்தான் திருமண முயற்சி தொடர் கதையாகக் காரணமாம்.

அப்படியென்ன நிபந்தனைகள் போடுகிறார்?

1. என் சுதந்திரத்தில் தலையிடக்கூடாது. 2. நடிப்பதா வேண்டாமா என்பதை நான்தான் தீர்மானிக்க வேண்டும்.
3. நண்பர்களோடு தொடர்ந்து நட்பாக இருக்க தடைபோடக் கூடாது.
4. நடிப்புத் தொழிலில் சம்பாதிக்கும் பணம் என்னிடம்தான் இருக்க வேண்டும். அதில் தொடவே கூடாது.

நிபந்தனைகளைக் கேட்டவர்கள் 'ஆளைவிட்டால் போதும்' என்று ஓட்டம் பிடிக்கிறார்கள்.

## அதிகாரியாக மம்முட்டி

ஆர்.கே செல்வமணியின் புதிய படமான 'அரசியல்' படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது.

வருமானவரித்துறை அதிகாரியாக நடிக்கிறார் மம்முட்டி. இந்தி கவர்ச்சிக் குவியல் ஷில்பா ஷிரோத்கர் மம்முட்டியின் ஜோடியாக நடித்துவருகிறார்.

மணிவண்ணன், சரண்ராஜ், சார்லி, தியாகு, விவேக், ஜோதிமீனா ஆகியோரும் நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை, இயக்கம் ஆர்.கே. செல்வமணி. இசை, வித்யாசாகர்.

## "கார்த்திக்... காதல் செய்கி...

'உள்ளத்தை அள்ளித்தா' படத்தில் ...
ஜோடியாக நடித்தவர் ரம்பா. படம் சூப்...
படத்தில் நடிக்கும்போதே வழக்கம்போல க...
முதுகுக்குப் பின்னாலும் கார்த்திக் ரம்பாவை...
கினார். அந்த நேரத்தில் தமிழ்படவுலகில் ரம்...
பெரிய இடம் கிடைத்திருக்கவில்லை.

அதனால் கார்த்திக்குக்காக தனது நெஞ்சில் ஒ...
ஒதுக்கினார் ரம்பா. 'உள்ளத்தை அள்ளித்தா' படம் ஹிட்...
ரம்பாவின் மார்க்கெட் விறு விறுவென்று உயர்ந்தது. 'மே...
படத்தில் கார்த்திக்குடன் நடிக்க ரம்பாவை அணுகினார்...
பிஸி என்று சொல்லி மறுத்துவிட்டார் ரம்பா. வாய்ப்பு ந...
போனது.

"கார்த்திக் படத்தில் நடிக்க மறுத்தது ஏன்?" என்ற கே...
ரம்பா சொல்லும் விளக்கம்.

"திகதிகள் ஒத்துவரவில்லை. அதுதான் மறுத்துவிட்டே...
புரியாமல் சிலர் வதந்தி கிளப்புகிறார்கள். எனக்கும் கார்த்...
வழக்கத்துக்கு மாறான எந்த நெருக்கமும் இருந்ததில்...
கார்த்திக்கை நான் காதலிப்பது உண்மை. அதாவது...

## குஷ்புவின் பொழுதுபோக்கு

ஓய்வு கிடைத்தால் தன் அண்ணன் மகனுடன் விளையாடி பொழுதைப் போக்குவார் குஷ்பு. இப்போது பொழுதுபோக்க நேரமில்லை.

படப்பிடிப்பு இல்லாத நாட்களில் சுந்தருடன் அமர்ந்து அவரது படக்கதை விவாதத்தில் பங்குகொள்கிறார் குஷ்பு.

குஷ்பு சொல்லும் யோசனைகள் சுந்தரையே ஆச்சரியப்படவைக்கிறதாம்.

இப்படியே போனால் குஷ்புவும் ஒரு நாள் இயக்குநராகிவிடுவார்.


படிப்பகம்

www.padippakam.com

## ...லை உயர்ந்த பரிசு

...பாய் கவர்ச்சிப்புயல் ஊர்மிளாவுக்கு படவாய்ப்புக்கள்
...றன. அப்படியிருந்தும் தன்னை தட்டிக்கொடுத்து
...க்கிவிட்ட இயக்குநர் ராம்கோபால் வர்மாவை அவர்
...ில்லை.
...ய் நன்றி கொன்றவர்க்கு உய்வில்லை என்பதால்,
...ோபால் வர்மா எப்போது அழைத்தாலும் சந்திக்கப்
...ார் ஊர்மிளா.
...ர்மிளாவின் நன்றி மறவாமையால் மெய் மகிழ்ந்த
...ோபால் வர்மா ஒரு பெரிய பரிசு கொடுத்திருக்கிறார்.
...ஹில்ஸ்' என்ற பெய...
...ந பங்களா வாங்கிக்
...ந்திருக்கிறார்.
...ம்கோபாலின் மனைவி
...வுக்கு விஷயம் தெரிந்து
...மாகிவிட்டது. பிரிந்து
...ிட்டார் ரத்னா.

## மாதுரியின் பயம்

மாதுரி டிக்ஷித்தின் நடனம் என்றால் அவரது ரசிகர்களுக்கு கொண்டாட்டம்தான் என்பது தெரிந்ததே. அதற்கு காரணம் யாதெனில், தனது உடலமைப்பும், கடும் பயிற்சியும், மற்றும் முயற்சியுமே என்கிறார் மாதுரி டிக்ஷித்.

"'செக்ஸ்' எண்ணத்தை ஏற்படுத்தும் நடன அசைவுகளில் ஆபாசமாக இருப்பவற்றை நான் செய்வதில்லை. நடன இயக்குநர் சொன்னாலும் மறுத்து விடுவேன். என்கிறார் மாதுரி டிக்ஷித்.

விஷயமறிந்தவர்கள் வேறுவிதமாகவும் சொல்கிறார்கள். 'ராஜ்குமார்' போன்ற படங்களில் மாதுரியின் கவர்ச்சி இருந்தும் தோல்விதான். தனது கவர்ச்சிக்கு மவுசு இல்லையோ என்று பயந்துதான் நடிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார் என்கிறார்கள். உண்மையா மாதுரி.

மாதுரி பற்றி மற்றொரு தகவல். ஒரு காலத்தில் சஞ்சய்தத்தும் மாதுரியும் காதலின் சகல எல்லைகளையும் கடந்து ஐக்கியமாகி இருந்தது யாவரும் அறிந்ததே. பின்னர் அந்தக் காதல் தடாலென்று உடைந்துபோனதும் யாவருக்கும் தெரிந்ததே. சமீபத்தில் சஞ்சய்தத்தும், மாதுரியும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டார்கள். அறிமுகமே இல்லாதவர்கள் போல முகத்தை திருப்பிக் கொண்டு நடையைக் கட்டினார்களாம்.

## மீனாவுக்கு டாட்டா

'பொண்ணு வெளையிற பூமி' படத்தில் ராஜ்கிரண் ஜோடியாக மீனா நடிப்பதாக இருந்தது. மீனாவை அறிமுகம் செய்தவரே ராஜ்கிரண் தான்.

திரைப்பட உலக வேலை நிறுத்தத்தின் பின்னர் மீனாவுக்கும், ராஜ்கிரணுக்கும் இடையே ஊடல். தனக்காக படப்பிடிப்பு திகதிகளை தள்ளிப்போடுமாறு கேட்டாராம் மீனா. ராஜ்கிரணுக்கு வந்ததே கோபம். மீனாவை ஒரே தூக்காக தூக்கிவிட்டார்.

இப்போது ராஜ்கிரணின் ஜோடிகளாக குஷ்பு, வினிதா நடிக்கின்றனர். படப்பிடிப்பும் ஆரம்பமாகிவிட்டது.

குருவும், சிஷ்யையும் பேசிக்கொள்வதில்லையாம் ஹலோ மீனா, ஏறிவந்த ஏணியை எட்டி உதைக்கலாமா?



**முகப்பில்**
கார்த்திக்–ரம்பா
படம் –
'உள்ளத்தை அள்ளித்தா'




...ட்டி
...ா. அவர்
...களோடு
...க்களுடன்
... பந்தா
... அவரது
...ிச்சலில்
...ரஞ்சிதா
...ன்னணி
...க்கொண்
...ந்தாவை
...துவிட்டு
...ஓ.கே."
...படத்தில்
...ஞ்சிதா.
...டாட்டி'.
...பாண்டிய
...ஒப்பந்தம்
... உதைக்
...ரஞ்சிதா




## நடிகை கொடுத்த தகவல்

நகைச்சுவை நடிகர் கவுண்டமணியின் வீட்டில் வருமானவரிச் சோதனை நடந்த செய்தி யாவரும் அறிந்ததே.

அந்த வருமானவரிச் சோதனைக்கு தூண்டி விட்டவர், அல்லது தகவல் கொடுத்தவர் ஒரு நடிகை. கோடம்பாக்கம் வட்டாரத்தில் பலமாக அடிபடும் செய்தி அதுதான்.

அந்த செய்தியை ஒரு கதையாகவும் வெளியிட்டுள்ளது தமிழக சஞ்சிகை ஒன்று.

வடிவேலுடன் ஜோடியாக ஜோதிமீனா நடித்ததில் இருந்தே இருவருக்கும் இடையே தகராறு பெரிதாகியதாம்.

கவுண்டமணியின் சொல்லை மீறி வடிவேலுவுடன் நடித்தது மட்டுமல்ல, வடிவேலுவை தனது வீட்டுக்கு அழைத்தும் நெருக்கத்தை துரிதப்படுத்தினாராம் ஜோதிமீனா.

கவுண்டமணி ஜோதிமீனா வீட்டுக்கு செல்லும் போது, அதற்கு முன்பே சென்றுவிட்ட வடிவேலுவின் கார் வீட்டு முகப்பில் காணப்பட்டதாம். நேராக தனது வீட்டுக்குச் சென்ற கவுண்டமணி ஜோதிமீனாவை தொலைபேசியில் அழைத்து வறுத்தெடுத்து விட்டார்.

'என் சொல்லை மீறி நடந்தால் நடப்பதே வேறு' என்று ஒரு போடு போட்டிருக்கிறார் கவுண்டமணி. ஜோதிமீனா பனங்காட்டு நரி. சலசலப்புக்கு அஞ்சுவாரா? வருமானவரித் துறையினருக்கு போன் செய்து தகவல் கொடுத்தாராம்.

கவுண்டமணிக்கும் விஷயம் தெரியும். விழுங்கவும் முடியாமல், வெளியே துப்பவும் முடியாமல் தவிக்கிறார் மனுசன்.

## இந்தியன் எக்ஸ்பிரஸ்

'அரவிந்தன்', 'நேதாஜி' படங்களின் படப்பிடிப்பில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளார் சரத்குமார். புதிய படங்கள் மூன்றிலும் ஒப்பந்தமாகியுள்ளார்.

ஆர்.கே. செல்வமணி இயக்கத்தில் ஒரு படம். ஜோடியாக நடிப்பவர் ரோஜா. படத்திற்கு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. மற்றும் இரண்டு படங்களுக்கு பெயர் சூட்டப்படவில்லை.

1997ம் ஆண்டு இந்திப் படம் ஒன்றிலும் நடிக்கப்போகிறார் சரத்குமார். தமிழிலும், இந்தியிலும் ஒரே சமயத்தில் உருவாகும் அப்படத்தை இயக்கப்போவது சி.சுந்தர்.

## முரளியின் விளக்கம்

'பூவே உனக்காக' படத்தில் ஒரு பாடல் காட்சியில் மட்டும் நடித்திருந்தார் முரளி. ஒரு கதாநாயகனான முரளி ஏன் அப்படி நடித்தார்? மார்க்கெட் வீழ்ச்சியடைந்துவிட்டதா?

விளக்கம் சொல்கிறார் முரளி.

"'பூவே உனக்காக' பட இயக்குநர் விக்ரமன் எனது நல்ல நண்பன். அதனால்தான் ஒரு பாடல் காட்சியில் நடிக்க சம்மதித்தேன்" என்கிறார் முரளி.

'பூவே உனக்காக' படத்தில் 'மச்சினி வர்ற நேரம்' என்ற பாடலில் முரளி நடிகர் முரளியாகவே நடித்திருந்தார்.




...க
...ன்"
...த்திக
...ஹிட்.
...வின்
...ருங்
...வுக்கு
...இடம்
...தும்
...குடி'
... படு
...வுக்கு
...விக்கு
... அது
...க்கும்
...வரது

குறும்புத்தனமான நடிப்பை; கம்பீரத்தை காதலிக்கிறேன். இதை வேண்டுமானால் பத்திரிகையில் போட்டுக் கொள்ளுங்கள்" என்று பொரிந்து தள்ளியிருக்கிறார் ரம்பா.

## 'மல்லிகைக்கு மருதாணி'

பெயரே வித்தியாசம். 'மல்லிகைக்கு மருதாணி.' இந்தப் படத்திற்கு இசையமைக்கப் போகிறார் இளையராஜா.

கதாநாயகன் விக்னேஷ். அவருக்கு ஜோடி புது முகம். பொருத்தமான புது முகத்தை தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

கவுண்டமணி, செந்தில், ஜெய்கணேஷ், கவிதா, வெண்ணிற ஆடை மூர்த்தி ஆகியோரும் நடிக்கின்றனர். இயக்கம், பஷீர்.


படிப்பகம்

# விருந்திலும் உதவலாம்!

கனடாவில் பலவருடங்களாக இருக்கிற எனது நெருங்கிய தோழி இங்கே வந்தபோது விருந்திற்கு அழைத்திருந்தேன். பகல் 12 மணிக்கு சாப்பிட்டுப் பழக்கமில்லாததால், "பிற்பகல் இரண்டு மூன்று மணிக்கு லைட்டாக ஏதாவது சிற்றுண்டி சாப்பிட வருகிறோம்" என்று சொல்லியிருந்தார்கள். சுடச்சுட கரட் அல்வாவும், வெஜிட்டபிள் போண்டா-சட்னி கொடுக்கலாம் என்று முடிவு செய்து கரட் துருவிக் கொண்டிருந்தேன். வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

எட்டிப்பார்த்தால் விருந்துக்கு அழைத்தவர்கள் தான். பரபரப்பாகத் தலையை வாரி முடிந்து கொண்டே (சாதாரண உடையுடன், அசடுவழிய) வரவேற்றேன். கணவனும், மனைவியுமாக வந்தவர்களை மூன்று மணி வரை உட்காரச்சொல்லிப் பேசமுடியவில்லையே என்ற பரபரப்போடு சமையலறைக்கு ஒரு காலும், ஹோலுக்கு ஒரு காலுமாக அவஸ்தைப்படும் போது...

எனது தோழி சமையலறைக்குள் வந்து "என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டாள். நான் சொன்னேன். கரட் பாதி துருவப்பட்டிருந்தது. உருளைக்கிழங்கு அடுப்பில் அவிந்து கொண்டிருந்தது. சட்னிக்குத் தேங்காய் துருவ வேண்டும். அவ்வளவுதான். தோழி கீழே



உட்கார்ந்தாள். மளமளவென்று கரட்டைத் துருவினாள். "என்ன இது? நீ போய் இரு..." என்று நான் உபசார வார்த்தை சொன்னதை அவள் கேட்கவில்லை.

"இது என்ன பெரிய விஷயம்? கனடாவில் எல்லாம் நாங்கள் விருந்துக்கு யாரையாவது அழைத்திருந்தால் முன் கூட்டியே வந்து உதவி செய்வார்கள் தெரியுமா?

விருந்து முடிந்தபிறகும் தட்டைக் கழுவுவது. இடத்தைச் சுத்தம் செய்வது என்று எல்லா வேலைகளையும் எல்லாரும் சேர்ந்து செய்வோம். சுமை ஒரு தோள் மேலேயே விழாமல் இருக்கும் இல்லையா?"

தோழி சொன்னது எவ்வளவு உண்மை பார்த்தீர்களா? எங்களை யாராவது விருந்திற்கு அழைத்தால் என்ன செய்வோம்? சரியாகச் சாப்பாட்டு நேரத்திற்குப் போவோம். மூக்குப் பிடிக்க சாப்பிட்டு, கை கழுவி வெற்றிலை போட்டுக் கொண்டு "வரட்டுமா?" என்போம்.

இனிமேல் நாமும் இந்த கனடா சகோதரியின் வழியைப் பின்பற்றி விருந்துக்குப் போகும்போது உதவலாம் அல்லவா?

# குடும்பத் தலைவிகளே!

## உடம்பையும் கவனியுங்கள்!!!

வீட்டில் இருப்பவர்களுக்கு ஏதாவது உடல்நலக் கோளாறுகள் வரலாம். வந்தால் குடும்பத்தலைவி அவர்களை விழுந்து விழுந்து கவனிப்பாள். கவனிக்கத்தான் வேண்டும். வேளா வேளைக்கு மருந்து கொடுக்க வேண்டும். பரிந்து பரிந்து எல்லாம் செய்யவேண்டும். ஆனால் அவளுக்கு ஏதாவது உடம்புக்கு இயலாமல் போனால் வீட்டில் எவ்வளவு குளறுபடிகள்! நேரத்திற்குச் சமையல் ஆகாது. போட்டது போட்டபடி கிடக்கும். வீட்டிலுள்ள எல்லாருடைய தினப்படி வேலையும் சரியாக நடக்காது.

அதற்கு என்ன செய்வது என்று கேட்கிறீர்களா? குடும்பத் தலைவி என்ன செய்வாள் தெரியுமா? தனக்கு உடம்பு சரியில்லை என்று வெளியில் சொல்வதே இல்லை. தலைவலி, காய்ச்சல் என்றால் கூட பொறுத்துக் கொண்டு எழுந்து வழக்கம் போல எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வாள்.



கை, கால் வலிக்கிறதே, நெஞ்சு வலிக்கிற மாதிரி இருக்கிறதே என்று எப்போதாவது நினைத்துக் கொள்வாள். அடுத்த வேலையின் நினைப்பு வந்ததும், எழுந்து செய்யப் போய் விடுவாள்.

வயது ஏற ஏற உடம்பு தளர்ந்து போய், கொஞ்சம் ஓய்வு தரக் கூடாதா? என்று கெஞ்சும். அந்த நிலைமையில் கூட பெண்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள முடிவதில்லை.

ஆரோக்கியமாக இருந்தால் சரி. உடம்புக்கு இயலாமல் போனால், என்னென்னவோ கஷ்டங்கள் இருக்கிறது. அப்போது கூடப் பொறுத்துக் கொள்ள வேண்டுமா? "அம்மா, குடும்பத்தலைவி! ஓரிரு நாட்கள் உடம்பு சரியில்லை என்று படுத்தாலே வீடு வீடாக இருப்பதில்லை. இப்படி வியாதிகள் என்று படுத்துக்கொண்டால் வீடு என்னாவது?"

இதை யோசிக்க வேண்டாமா? பிரச்சனை சிறியதாக இருக்கும்போதே அதைக் கிள்ளி எறிய வேண்டாமா? பெரிதாக வளர விடலாமா? உங்களுக்கு நாற்பது, நாற்பத்தைந்து வயதாகி விட்டதா? தினசரி வேலைகளுக்கு நடுவில் கொஞ்ச நேரத்தை ஒதுக்கி ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.

'மாடி ஏறி இறங்கினால் மூச்சு முட்டுது,' என்றால் டாக்டரிடம்போய் பிரஷர் பார்த்துக் கொள்ளுங்கள்.

'கையில் சின்னதாக ஒரு வெட்டுக்காயம். அது என்னவோ ஆறவே இல்லையே' என்று அப்படியே விட்டுவிடாமல் இரத்தத்தில் சீனி இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

'கொஞ்சம் பார்வை. மங்குவது போல இருக்கே. எல்லாம் வயதாகிப் போனால் வரும் கோளாறு' என்று மனதிற்குள் நினைத்துக் கொள்வதோடு நில்லாமல் கண் டாக்டரைப் பார்த்து வேண்டியதைச் செய்யுங்கள்.

ப்சி இல்லையா, ரொம்பத் தாகமா இருக்கா, தொடர்ந்து இருமலா, உடம்பு இளைத்துக் கொண்டே வருகிறதா... வேலை செய்ய முடியாமல் களைப்பு ஏற்படுகிறதா.. இப்படிச் சின்னச் சின்ன அறிகுறிகள் தோன்றும். அதை உடனுக்குடன் கவனித்தால் சரியாகிவிடும். இல்லை என்றால் கடுகு, மலையாகிவிடும். குடும்பத் தலைவியை நம்பி இருக்கிற மற்றக் குடும்ப அங்கத்தினர்களின் வருங்காலமும் தடுமாறித் திசை மாறிப் போய்விடும்.

இதை எல்லாம் நினைவில் வைத்துக் கொண்டு, ஒவ்வொரு குடும்பத் த்லைவியும், குடும்பத்துக்கு ஆதாரமாக இருக்கிற தன்னையும் அவ்வப்போது கவனித்துக் கொள்ள வேண்டும்!

# தாய்மார்களே~ உங்களுக்கு!

'குழந்தை பிறந்த நான்கு மாதங்களிலேயே பால் வற்றி விட்டதே!' என்று பல தாய்மார்கள் கவலைப்படுகிறார்கள்.

தாய்க்குப் பால் சுரப்பது என்பது இயற்கை கொடுக்கும் வெகுமதி. அதைச் சரியானபடி பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பிரசவித்த தாய் கவலைப்படுவதோ, உணர்ச்சி வசப்படுவதோ பால் சுரப்பதைக் குறைக்கும். போஷாக்கான உணவு வேண்டும். பால் கொடுக்கும் தாய் பசும்பால்



குடிக்க வேண்டும். சாப்பாட்டில் முருங்கைக் கீரையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். சாப்பாடு மிகவும் சூடாக இருக்கக் கூடாது. நிறைய மோர் சாப்பிட வேண்டும்.

குழந்தை பிறந்து நான்கு மாதம் வரை மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை பால் கொடுத்து வந்தால், பால் சுரக்கும். குழந்தைக்கு வயிறு நிறையும்வரை பால் கொடுக்க வேண்டும். சரியாகக் குடிக்கிறதா என்று கவனிக்க வேண்டும். 'வேலை இருக்கிறதே பத்து நிமிஷம் உட்கார்ந்து பால் கொடுக்க வேண்டுமே' என்று சில தாய்மார்கள் சோம்பல் படுவார்கள். இப்படிப் பால் குடிக்கும் நேரத்தைக் குறுக்கியோ, கொடுக்காமலோ இருந்தால் பால் கொஞ்சம் கொஞ்சமாக வற்றி விடும்.

அதனால் நேரத்திற்கு, குழந்தை வயிறு நிறையப் பால் கொடுங்கள். காரம் இல்லாத, அதிக சூடு சேர்க்காத-போஷாக்கான உணவு, பூண்டு, முருங்கை இலை, பசும்பால், மோர் போன்றவற்றைச் சாப்பிட்டு வந்தால் பால் ஆறுமாதம் வரையிலும் கிடைக்கும். எள், வெல்லம், கேழ்வரகு மூன்றையும் சேர்த்துப் பொடி செய்து சாப்பிட்டாலும் பால் சுரக்கும். முக்கியமான ஒரு விஷயம்; குழந்தை பிறந்தது முதலே வேளா வேளைக்குப் பால் கொடுப்பதுதான்.

## சமைப்போம் சுவைப்போம்

### பனானா கோகனட் கேக்

தொகுத்துத் தருவது சுகந்தினி

**தேவையான பொருட்கள்**

வாழைப்பழம் - 2
தேங்காய்த்துருவல் - 1 கப்
மாவு - 1/2 கப்
சீனி - 1 கப்
முந்திரிப்பருப்பு - 10
மாஜரின் - 1/2 கப்
பால்- 1 கப்

**செய்முறை:**

ஒரு ட்ரேயில் மாஜரினைத் தடவவும். வாழைப் பழத்தைத் தோலுரித்து மிக்ஸியில் நன்றாக அரைக்கவும். அதனுடன் வறுத்த மாவு, சீனி சேர்த்துக் கலக்கவும். கடைசியாகத் தேங்காய்த் துருவலையும் சேர்த்துப் பாலையும் விட்டுக் கலக்கவும். இந்தக் கலவையை ட்ரேயில் கொட்டி முந்திரிப்பருப்பை சீவிப் போட்டு ஓவனில் சுமார் 20 அல்லது 25 நிமிடம் வைக்கவும். முட்டை சேர்ப்பவர்களானால் ஒரு முட்டையையும் அடித்துச் சேர்த்துக் கொள்ளலாம்.

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலைப் பரிசுப் போட்டியில் வெற்றிபெற்ற அதிர்ஷ்ட சாலிகளில் ஒருவர் இவர்: நழிரா நிசார்தீன். யூ. எம்.யூ.வீதி, கல்பிட்டி.

# நகம் வேண்டுமா நகம்?



நக அழகில் ஆர்வமுள்ளவர்களுக்கு ஒரு புதிய தகவல்.

நகத்திற்கு பொலிஷ் போட்டுப் போட்டு அலுத்து விட்டதா? அத்துடன் நகங்களும் அடிக்கடி உடைந்து போகின்றனவா? இனிக் கவலையை விடுங்கள். 'டிப்' என்று சொல்லக் கூடிய செயற்கை நகங்களை ஒட்டிக் கொண்டு அவற்றின்மீது விதம் விதமாகப் பெயிண்ட் அடித்துக் கொள்வதுதான் வட இந்திய நகரங்களில் சமீபத்திய ஃபாஷன். மேலும் நகங்களின் மீது ஒட்டிக்கொள்ளக் கூடிய விதம் விதமான ஸ்டிக்கர்களும் இப்போது அங்கே பிரபலமாகி வருகின்றதாம். படத்தைப் பார்த்து விட்டு நீங்களும் முயற்சி செய்து பாருங்களேன்.

# உடம்பும் ஒரு மெஷின்தான்

உடம்பும் ஒரு மெஷின் போலத்தான். இதன் உறுப்புக்கள் எல்லாம் நல்ல விதமாக இயங்க வேண்டும். இரத்த ஓட்டம் சீராக இருக்க வேண்டும். வியர்வை போன்ற கழிவுகள் சுலபமாக வெளியேற வேண்டும். புதிது புதிதாகச் செல்கள் வளரவேண்டும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இருக்க வேண்டும். இவ்வளவும் இருந்தால்தான் உடம்பு என்கின்ற மெஷின் ஒழுங்காக இயங்கும்.

ஒரு நாளைக்கு எட்டு மணிநேரம் உழைக்க வேண்டும். ஒரே இடத்தில் இருக்காமல் நடக்கவேண்டும். குனிந்து நிமிர்ந்து வேலை செய்ய வேண்டும். மூளைக்கு அதிகம் வேலை கொடுப்பவர்கள் அரை மணி நேரமாவது உடலுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான் எல்லா வேலைகளையும் சுறுசுறுப்பாகச் செய்ய முடியும். வேலை செய்து கொண்டு, உழைத்துக் கொண்டு, உடம்பின் எல்லா உறுப்புக்களுக்கும் பயிற்சி தரும் பொழுது ஏற்படுகின்ற 'ரிப்பெயர்- மைனர் ரிப்பெய' ராகத்தான் இருக்கும். இது விருந் தாளி போல எப்போதாவது வரும் போகும். ஆனால் பயிற்சியே கொடுக்காமல், நான்கு வேளையும் வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டுத் தூங் கிக் காலத்தை கழிப்பவர்களுக்கு வியாதிகள் கூடவே இருக்கும். இலகுவில் போகாது.



ஆகையால், நாம் முக்கியமாக நினைவில் வைத்திருக்கவேண்டிய நல்ல விஷயம், சும்மா இருக்காமல் எதையாவது செய்து கொண்டிருக்க வேண்டும். சும்மா இருக்க வேண்டாம் என்ற சிந்தனை, தானாகவே நல்லதையே செய்து கொண்டிருக்கத் தூண்டும்.

# சின்னச் சின்ன யோசனைகள்

✪ உடம்பு தேய்த்துக் குளிக்கும் சவர்க்காரத் துண்டுகள் சிறிய துண்டுகளாக மிஞ்சிப் போனால் அவற்றை அப்படியே தூக்கி எறிந்துவிட வேண்டாம். ஒரு பிளாஸ்டிக் மக்கில் போட்டுக் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி வையுங்கள். சோப் கரைந்ததும் அந்தத் தண்ணீரால் மொஸைக் தரையைக் துடைத்தால் தரை அழுக்கு நீங்கி பளிச் சென்று ஆகும். 'கம கம' வென்று வாசனையாகவும் இருக்கும்.

✪ தலைமுடி செழித்து வளரவும், 'கருகரு' வென்று இருக்கவும் நாமே வீட்டில் தைலம் தயாரிக்கலாம். கஷ்டம் ஒன்றுமில்லை. அரைப் போத்தல் சுத்தமான தேங்காய் எண்ணெய் வாங்கிக் கொள்ளுங்கள். ஒரு பிடி மருதோன்றி இலையும் கொஞ்சம் கருவேப்பிலையும் சேர்த்து அரைத்து தேங்காய் எண்ணெயுடன் கலந்து சுட வைக்க வேண்டும். எண்ணெய் நிறம் சற்றுப் பச்சையாக ஆனதும் சத்தம் அடங்கி விடும். வாணலியை இறக்கி, எண்ணெயை வடிகட்டி ஒரு போத்தலில் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த எண்ணெயைத் தினமும் கூந்தலின் அடிப்பாகம் வரை அழுத்தித் தெய்த்து வந்தால் முடி 'கரு கரு'வென்று நன்றாக வளரும்.

✪ வெகு நாட்கள் பாதாம் பருப்பை உபயோகிக்காமல் வைத்திருந்தால் பருப்பு மாவாக உதிர்ந்து விடும் என்பதனால் சீக்கிரம் பயன்படுத்தி விடுவார்கள். பாதாம் பருப்பு மாவாக உதிர்ந்து போகாமல் இருக்க ஒரு சுலபமான வழி இருக்கிறது. இரண்டு கரண்டி சினியை எடுத்து பாதாம் பருப்பு வைத்துள்ள டப்பாவில் போட்டால் பாதாம் பருப்பு எத்தனை நாளானாலும் கெட்டுப்போகாது.



✪ தலையில் சில சில இடங்களில் சொட்டை விழுந்தவர்கள் பெரிய வெங்காயத்தைப் பாதியாக அரிந்து சொட்டையான இடத்தில் தேய்த்து வந்தால் முடி வளரும்.

✪ காய்ந்த வேப்பிலையைப் பட்டுப்புடவைகள் வைத்திருக்கும் பீரோவில் வைத்தால் பூச்சிகள் வராது.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AB

பெயர்:............................
முகவரி:............................
............................
கையொப்பம்:............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 10-08-1996
அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## காத்தான்குடி வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**பாத்திமா பரீட்.**
இல.01, ஊர் வீதி, காத்தான்குடி-04.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

www.padippakam.com

## பூங்காற்று திரும்புமா?

என்–
இந்த வரிகளில் இருக்கும்
சோகம்...
தெரிகிறதா உனக்கு..?
*
நீ நினைத்திருந்தால்
வாழ்க்கையின் சோலைகளில்
என்னை வைத்திருக்கலாம்...!
ஆனால்...
நீ என்னை விட்டுச் சென்றதோ
தகிக்கும் பாலையில்தானே...!
**
காக்கை கொத்திய
பப்பாசிப் பழமாய்
என் இதயம்
ஓட்டையாகிப் போனது!
**
என் இதயத்தில்
பலாப் பிசினாய் ஒட்டியிருக்கும்
உன் நினைவை
எப்படிப் பிரித்து வைப்பேன்..?
**
அடி.. செம்பகக் கண்ணியே!
விடியும் வரை
என் மனதை அரிக்கும்
கறையான் நீ!
**
என் வீட்டு மாமரத்து குயில் கூட
இன்று..
முகாரிதானே பாடுகிறது..?
கண்ணாடியில் தெரியும்
(என்?) விம்பம் கூட
என்னை வெறித்துச் சிரிக்கிறது!
**
நிலாமுற்ற நினைவுகளில்
நான் செத்துச் செத்து(ச்)
செதுக்கப்படுகின்றேன்..!
**
நீ நலமாக இருக்கிறாயா?
என்னிடமிருந்து பிரிந்து போன
காதல் பறவை
எந்த மரங்களில்
தங்கித் திரிகிறது...?
**
நான் உஷ்ணப்பட்டுப்போகும்
அந்த வேளைகளில்...
மருதாணியாட்டம் சிவக்கும்
உன் கன்னம்
இன்னும் ஈரலித்திருக்கிறதா?
**
இந்த வரிகளில் இருக்கும்
சோகம்
தெரிகிறதா உனக்கு..?
**
நீ விரும்பினால்..
மஞ்சோனா மரத்தின் கீழ்
ஒரு புன்னகையை
உதிர்த்து விட்டுப் போ..
நான் காத்துக் கிடக்கிறேன்...!

**சிபி–பொத்துவில்–02.**

## உயிர்ப்பு!

ஊத்துண்டு கிடக்கிறாய்
உயிருக்குள்:
என்ன அதிசயமோ
இன்னும் நான் உயிரோடிருக்கிறேன்:
உன்னை வந்து பார்க்காமல்!
**
நான் கேட்க கேட்க
நீ சுருட்டி வைத்த இதயத்தை,
இப்போதாவது சாமத்தில் எழும்பி,
தடவிப்பார்!
ஒரு வேளை பூஞ்சணம் பிடித்திருக்கும்
என் நினைவுகள் அதற்குள்.
**
யுகாந்திரங்கள் தள்ளியிருக்கிறேன்
அன்பே!
நெஞ்சினுள் உறைந்த,
உன் நினைவுகளை சுமந்து!
நீ–மட்டும்
மனசுக்குள்
உருண்டு கொண்டுதானிருப்பாய்:
இந்த பிரபஞ்சமாய்!
**
என் குஞ்சுப் புறாவே!
கொஞ்சமாவது சிரிக்கமாட்டாயா:
நான் மீண்டும் உயிர்க்க?
**

**கன்ஸியா**

## நிரந்தர முகாம்

எங்கள்
தேசத்தில்
மனிதப்
படுகொலைகள்
நிரந்தரமாய்
முகாமடித்துக்
கொண்டன...!
**
தினமும்
ஒரு சோகச்
செய்தி–
வைகறைக்கு
வாழ்த்துச்
சொல்லும்...!
**
இம்மண்ணை
துப்பாக்கி
ஆளவந்தபோது:
தூக்குக் கயிற்றை
தன்கழுத்தில்
மாட்டிக்கொண்டது
மனிதநேயம்...!
**
ஈவிரக்கமற்றோர்
விழிகளில்
தென்படாது,
புற்றுக்குள்
மறைந்துகொள்ளும்
பாம்புகளாய்....
மனித நேயங்கள்...!

**ஒட்டமாவடி இஸ்மாயில்.**

## அலுத்துப் போய் விட்டது.......!

ஒவ்வொருநாளும்
உன் நினைவோடு படுப்பதும்
உன்
நினைவோடு எழும்புவதும்
அலுத்துப் போய் விட்டது...!
*
இரவு பகலாக
என் மனக் கதவுகளை
பூட்டி வைத்தாலும்,
சொந்தக் காரனைப் போல்
உன் நினைவுகள்
என்னை
சூழ்ந்து கொள்வதும்
அலுத்துப் போய்விட்டது...!
*
சுவாசிப்பதற்கு
காற்று வேண்டுமே... என்று
வெளியே சென்றால்,
உன்
நினைவுகள்
மூச்சை அடைக்கிறதும்
அலுத்துப் போய் விட்டது...!
*
வேட்டுச் சத்தம் கேட்டு
அலுத்துப் போன
அந்த
வெண் புறாக்களைப் போலவே..
அலுத்துப் போய்விட்டது
அவளின் நினைவுகள்...!

**யெம்.யெஸ்.நியாஸ், பொத்துவில்–3.**

## தேன் கிண்ணம்

## காதலித்துத் தோற்றுப்பார்!

கண்ணீர்
கதவு திறக்கும்!
புன்னகையில்
பூட்டு விழும்!
காதலித்துத் தோற்றுப் பார்!
▫▫
சிப்புக்கும்
உனக்குமிடையேயுள்ள
சிநேகம்
தூரமாகும்!
நிலைக்கண்ணாடி
உனைக் காணாது
கலங்கும்!
காதலித்துத் தோற்றுப் பார்!
▫▫
வெள்ளைக் காகிதத்தில்
கறுப்புக் கவிதை
முளைக்கும்!
சவர பிளேட்டிருக்கும்
சவரம் பண்ண
மாட்டாய்!
காதலித்துத் தோற்றுப்பார்!
▫▫
நீ
அதிகமாய்
நேசித்ததெல்லாம்
அடியோடு வெறுக்கும்!
▫▫
நீ வேண்டாது
வெறுத்ததெல்லாம்
உன் வீட்டுக்குள்
இருக்கும்!
காதலித்துத் தோற்றுப்பார்!
▫▫
சபையில் நீ
மௌனியாய் இருப்பாய்!
உனக்குள் நீ
ஞானியாய் இருப்பாய்!
▫▫
முற்றுப் புள்ளியாய்
சிரிப்பாய்!
கேள்விக்குறியாய்
அழுவாய்!
காதலித்துத் தோற்றுப்பார்!
▫▫
படிக்கின்றாயா?
பாடங்கள் வெறுக்கும்
வகுப்பறை
உனக்கு மட்டும்
சிறைக்கூடமாய்த்
தெரியும்!
காதலித்துத் தோற்றுப்பார்!
▫▫
என்றாலும் நீ
காதலி–
காதலித்துத் தோற்றுப்போ!
▫▫
நான் சொல்கிறேன்;
நீ–
நரைக்க....நரைக்கக்
காதலி!
காதலித்துத் தோற்றுப்பார்!
▫▫
ஒன்று–
கவிஞனாவாய்;
அல்லது–
ஞானியாவாய்!
இரண்டிலொன்று நிச்சயம்!
காதலித்துத் தோற்றுப்பார்!

**கே.எம்.மர்சூக்,**
**அல்லை நகர்–05. தோப்பூர்.**



மத்தியில் நிற்பவர் யாரென்று அறிமுகம் தேவையில்லை. நடிகர் திலகத்தின் இருபுறமும் நிற்பவர்கள் யார் என்று தெரிகிறதா? இடதுபுறம் நிற்பவர் தம்பி வி.சி. சண்முகம். வலது புறத்தில் அண்ணன் வி.சி. தங்கவேலு. இருவரும் இப்போது உயிருடன் இல்லை.

## அந்த நாள் ஞாபகம்



தமிழ்த் திரையுலகின் முடிசூடா மன்னர்கள் சிவாஜி–எம்.ஜி.ஆர். இணைந்து நடித்தது ஒரேயொரு படத்தில். 'கூண்டுக்கிளி'. மறக்கமுடியாத அந்தப் படத்தில் ஒரு காட்சிதான் இது.



திரையில் ஒரு படத்தின் பின்னர் சேரமுடியாவிட்டாலும், அரசியலிலும், தனிப்பட்டரீதியிலும் இருவரும் பலமுறை ஒன்றாகக் காணப்பட்டார்கள். இமயம் இரண்டும் புன்னகைத்துக் கொள்கின்றன.

## ஒரு புள்ளி!

நிலா அழுதது!
**
வானம் தன்னைப்
புறக்கணிப்பதாகப்
புலம்பியது.
**
ஒவ்வொரு
நட்சத்திரத்தையும்
சந்தேகப்பட்டது.
**
வால் வெள்ளிகளைத்
திட்டித் தீர்த்தது.
**
இத்தனை
நட்சத்திரங்களைத்
தன்னகத்தே
கொண்டிருக்கும்
வானத்தை
நம்ப முடியாதென்று
அறிக்கை விட்டது.
**
வானம் சிரித்தது!
**
நிலவிற்கு–வானம்
ஒரு கடல்!
**
வானத்திற்கு–நிலவு
ஒரு புள்ளி!
**
இருப்பினும்,
வானம் சொல்லியது.....
என்னை நீ
வெறுத்தாலும்
என்னுள்தான்–நீ
இருந்தாக வேண்டும்!
இரு!
எனக்கு
ஆட்சேபனையில்லை!!

**எம்.ஈ.ரோஷ்.**

## உதிரம் பூசிய முத்து விதானம்

உன் நெருப்பு வரிகள்
என் இதயத்துள்
இன்னும் எரிந்து
கொண்டிருக்கும்
விளக்கு.
•••
எந்தச் சேணத்தினால்
உன் அன்பினைக்
கட்டிப் போட்டு
ஆட்கொள்வது?
•••
அந்தப் பௌர்ணமி
நிலவும்
பனந்தோப்பும்
அந்த ஒற்றை
மலர்விதானமும்
இன்னும்
மறக்க முடியவில்லை.
•••
சேதிகளின்
ஆக்கிரமிப்பில்
உன் சொந்தம்
கருகிப் போனது
அபசகுனமே!
•••
அதற்காகவேனும்
அழவேண்டும்
என்ற நியதியை
மாற்றிவிட
எத்தனித்து
தோல்வியுற்றேன்!
•••
மனம் நெரித்து
விழுங்கிய
என் இதயத்தோடு
ஒரு கசங்கல்
ஊர்வலம் போனேன்.
•••
சிதைந்தது என்
வாழ்க்கையின்
இரங்கள் மட்டுமல்ல;
உட் பகுதியும்தான்!
விரக்திச் சுமைகளை
அள்ளி இறைத்துக்
கொண்டேன்!
•••
இனிமேல்
என் வாழ்க்கை
உன்னோடல்ல;
உண்மை ஊர்ஜிதமாகி
விட்டபோதும்
வளர்ப்புப் பிராணியின்
பாசமாய்
என்னிதயம்
உன் காலைச்சுற்றியே
வட்டமடிக்கிறது.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 04.08.96 முதல் 10.08.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு– தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்– பெரியோர் உதவி, பணவரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்– இனசன நன்மை, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| புதன்– தொழில் மந்தம், வீண் தொல்லை. | காலை 7 மணி |
| வியாழன்– உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி– பெரியோர் உதவி, கௌரவம். | மு.ப. 9 மணி |
| சனி– தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்– திங்கள், அதிஷ்ட இலக்கம்–1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு– தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்– வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்– தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| புதன்– அந்நியர் உதவி, பணவிரயம். | பி.ப. 3 மணி |
| வியாழன்–பெரியோர் சகவாசம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி– தொழில் மந்தம், கடன் படல். | பகல் 12 மணி |
| சனி– பயனுள்ள செயல், பணவரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்–செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு– பெரியோர் உதவி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்– முயற்சி பலிதம், அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| செவ்வாய்– வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| புதன்– வீண்குறை கேட்டல், மனக்கவலை. | காலை 7 மணி |
| வியாழன்– துயர் நீங்கும், பணவரவு. | காலை 6 மணி |
| வெள்ளி– மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| சனி– தொழில் விருத்தி, காரியசித்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்–வெள்ளி, அதிஷ்ட இலக்கம்–6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு– தொழில் மந்தம், காரியத்தடை. | பி.ப. 2 மணி |
| திங்கள்– முயற்சி பலிதம், அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| செவ்வாய்– புதிய முயற்சி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்– இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்– உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி– பிரயாண மிகுதி, மனக் கவலை. | பகல் 12 மணி |
| சனி– செலவுமிகுதி, கடன் படல். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்–புதன், அதிஷ்ட இலக்கம்–3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு– தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்– உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்– வீண் கவலை, பண வரவு. | காலை 6 மணி |
| புதன்– செய்தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்– புதிய முயற்சி, உயர்ந்த வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி– அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 3 மணி |
| சனி– தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்–சனி, அதிஷ்ட இலக்கம்–2

### நவக்கிரக சஞ்சாரம்

கர்க்கடகம் – சூரியன்.
சிம்மம் – புதன்.
கன்னி – இராகு.
தனு – வியாழன்.
மீனம் – சனி, கேது.
மிதுனம் – வெள்ளி, செவ்வாய்.

★ சந்திரன்– மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு– தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்– மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| செவ்வாய்– அந்நியர் உதவி, பணவரவு. | காலை 7 மணி |
| புதன்– உயர்ந்த நிலை, முயற்சி மேன்மை. | பி.ப. 1 மணி |
| வியாழன்– மனக் கவலை, பொருள் விரயம். | காலை 7 மணி |
| வெள்ளி– தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. 2 மணி |
| சனி– உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்– வியாழன், அதிஷ்ட இலக்கம்–4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு– தொழில் விருத்தி, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்– பயனுள்ள செயல், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்– வீண்குறை கேட்டல், மனக் கவலை. | காலை 6 மணி |
| புதன் – துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வியாழன்– மன மகிழ்ச்சி, உறவினர் உதவி. | காலை 7 மணி |
| வெள்ளி– புதிய முயற்சி, பண வரவு. | பகல் 12 மணி |
| சனி– தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்–வெள்ளி, அதிஷ்ட இலக்கம்–7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு– தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்– அந்நியர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்– பயனுள்ள செயல், பொருள் இழப்பு. | காலை 6 மணி |
| புதன்– துயர் நீங்கும், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வியாழன்– மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வெள்ளி– வீண் குறை கேட்டல், பெரியோர் பகை. | பி.ப. 2 மணி |
| சனி– தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு– தொழில் மந்தம், பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| திங்கள்– இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்– வீண் முயற்சி, பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| புதன்– துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்–பணக் கஷ்டம் தீரும், வீண்குறை கேட்டல். | காலை 7 மணி |
| வெள்ளி– பெரியோர் உதவி, மனக் கவலை. | பகல் 12 மணி |
| சனி– அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்–வியாழன், அதிஷ்ட இலக்கம்–4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு– தொழில் மந்தம், முயற்சி தடை. | காலை 7 மணி |
| திங்கள்– பயனுள்ள செயல், வீண்குறை கேட்டல். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்– புதிய முயற்சி, பொருள் வரவு. | மு.ப. 9 மணி |
| புதன்– அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்– பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி– செல்வாக்கு மிகுதி, பண வரவு. | பி.ப. 2 மணி |
| சனி– தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்–செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு– தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | பி.ப. 2 மணி |
| திங்கள்– அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்– பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. 9 மணி |
| புதன்– வெளியிடப் பயணம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்– தொழில் விருத்தி, பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| வெள்ளி– மனக் கவலை, அந்நியர் சகவாசம். | பி.ப. 2 மணி |
| சனி– மனக்குறை நீங்கும்; புதிய முயற்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்–வெள்ளி, அதிஷ்ட இலக்கம்–6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு– துயர் நீங்கும், முயற்சி மேன்மை. | பி.ப. 2 மணி |
| திங்கள்– பிரயாண மிகுதி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்– பயனற்ற செயல், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்– மனக் கவலை, உறவினர் பகை. | காலை 7 மணி |
| வியாழன்– பெரியோர் உதவி, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி– தொழில் கஷ்டம், பணச் சிக்கல். | காலை 7 மணி |
| சனி– பொருள் இழப்பு, மனக் கவலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்–புதன், அதிஷ்ட இலக்கம்–5

www.padippakam.com





# மழை பெய்யட்டும்!

வெட்டும் மின்னல் வெட்டட்டும்
வெற்றி முழக்கமாய் கேட்கட்டும்
கொட்டும் மழையோ கொட்டட்டும்
கொடிய வரட்சி ஓடட்டும்!
★
கட்டாந் தரைகள் ஊறட்டும்
கடுமை வெய்யில் மாறட்டும்
பட்ட மரங்கள் தளிர்க்கட்டும்
பசுமை எங்கும் செழிக்கட்டும்!
★
காய்ந்த பயிர்கள் வளரட்டும்
கங்கை ஆறுகள் நிறையட்டும்
சாய்ந்த செடிகள் நிமிரட்டும்
சாலை நீரால் நனையட்டும்!
★
நீரில்லா பஞ்சம் போகட்டும்
நீடித்த மின்சாரம் கிடைக்கட்டும்
மாரி மழையும் பெய்யட்டும்
மாந்தர் சிரித்து மகிழட்டும்!
★
ரஸ்னா, கிண்ணியா-02.

சோம்பல் மிகக் கெடுதி பாப்பா!-தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே
-பாப்பா!
தேம்பி யழும் குழந்தை நொண்டி - நீ
திடங்கொண்டு போராடு பாப்பா!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# மனிதனாக மாறிய கழுதை

ஒரு முட்டாளிடம் ஒரு கழுதை இருந்தது. ஒருநாள் அந்தக் கழுதையை விற்பதற்காக அவன் சந்தைக்குப் புறப் பட்டான். கழுதையைக் கயிற்றில் கட்டி, கயிற்று நுனியைப் பிடித்தபடி அவன் தெருவில் சென்றான்.

இரண்டு திருடர்கள் இதைக் கண்டார் கள். இருவரும் அவனைப் பின் தொடர்ந்து சென்றார்கள். கொஞ்சத்தூரம் சென்றதும் திருடர்களில் ஒருவன் கழுதைக்குப் பக்கத் தில் மெதுவாகச் சென்று, கழுதையை அவிழ்த்து விட்டு, அந்தக் கயிற்றைத் தன் கழுத்தில் கட்டிக்கொண்டான்.

பின்னால் வந்த திருடன் அவிழ்த்து விடப்பட்ட கழுதையை வேறு பக்கமாகக் கூட்டிக் கொண்டு சென்றான்.

சிறிது தூரம் சென்ற பின் கழுதைக் காரன் எதேச்சையாகத் திரும்பிப் பார்த் தான். அங்கு கழுதைக்குப் பதிலாக மனிதன் ஒருவன் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டு,

"ஐயோ என் கழுதை எங்கே? நீ யார்?" என்று கேட்டான்.

"நான் வேறு யாருமில்லை; உங்களு டைய கழுதையே தான்," என்றான் அந்தத் திருடன்.

"என் கழுதை.. எப்படி.... நீ..?" என்று குழம்பினான் கழுதைக்காரன்.

"பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் மனிதனாகத்தான் இருந்தேன். நான் நிறைய குடிப்பேன். ஒருநாள் குடிவெறியில் என் தாயாரை அடித்து விட்டேன். அவள் கோபமடைந்து, 'நீ கழுதையாகக் கடவாய்!' என்று சாபம் போட்டு விட்டாள்.

உடனே நான் கழுதையாகி உங்களிடம் இத்தனை நாட்களாக வேலை பார்த்தேன். இப்போது என் தாயார் என் மேல் இரக்கப் பட்டு மீண்டும் என்னை மனிதனாக்கி விட் டாள் என்று நினைக்கிறேன். இவ்வளவு நாட்களாக என்னை நீங்கள் ஆதரித்ததற்கு நன்றி!" என்றான் திருடன்.

"நீ உன் வீட்டுக்குப் போய் இனியாவது உன் தாயாரிடம் நல்ல மாதிரியாக நடந்து கொள்!" என்ற அந்த முட்டாள் கழுதைக் காரன், கழுத்தில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டான்.



சில நாட்களின் பின்னர் வேறொரு விடயமாக சந்தைக்குப் போனான் அந்தக் கழுதைக்காரன்.

அங்கு முன்பு அவன் வைத்திருந்த கழுதையை மற்றத்திருடன் விற்பதற்காகக் கொண்டு வந்து வைத்திருந்தான்.

கழுதைக்காரனைக் கண்டதும் எஜமானன் விசுவாசத்தில் கழுதை சப்த மிட்டது.

இதைப் பார்த்த கழுதைக்காரன் கழுதைக்குக் கிட்டச் சென்றான்.

"அட புத்தி கெட்ட பயலே! திரும்ப வும் உன் தாயாரைக் கொடுமைப்படுத்தி விட்டு இப்படிக் கழுதையாக வந்து நிற்கிறாயே. உன்னைத் திருத்தவே முடியாது. இனி உன்னை நான் வாங்கவே மாட்டேன்,"

என்று கூறிக்கொண்டே வேறு பக்கமாகத் திரும்பிச் சென்று விட்டான் அந்த முட்டாள் கழுதைக்காரன். ●

# வாரம் ஒரு நாடு

## நௌரு

**தலைநகர்** - யாரென் நௌரு
**பரப்பு** - 21.3 சதுர கிலோ மீட்டர்
**மக்கள் தொகை** - 9400
**மொழி** - ஆங்கிலம், நௌரியன்
**எழுத்தறிவு** - 99%
**சமயம்** - கிறிஸ்தவம்
**நாணயம்** - அவுஸ்திரேலிய டொலர்
**தனி நபர் வருமானம்** - 20,000 டொலர்.

**அமைவிடம்:**

நௌரு மத்திய பசிபிக்கிலுள்ள முட்டை வடிவமுடைய சிறிய பரப்பேயுள்ள ஒரு பவளத்தீவு. சுற்றிலும் கடலில் மூழ்கிய பாறையுள்ளது. கடல் வற்றும் போது இது வெளிப்படும்.

**வரலாறு:**

பிரிட்டன், அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. 1968ல் சுதந்திரம் பெற்றது. பொது நலவாயத்துடன் சிறப்புத் தொடர்புள்ள குடியரசு. 18 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றம் கொண்டது.

**பொருளாதாரம்:**

பொஸ்பேட் பெருமளவில் கிடைக்கிறது. விவசாயம் குறிப்பிடத்தக்க அளவில் இல்லை.



முக்கிய வருவாய் பொஸ்பேட் ஏற்று மதியில் இருந்தே கிடைக்கிறது. கல்வி இலவசம். நாட்டில் வருமான வரி இல்லை.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 10.08.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 152
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 150

பரிசுக்குரியவர்:
நஷ்ரின் பானு,
அரசினர் த.ம.வித்தியாலயம், ஹப்புத்தளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**


| | |
|---|---|
| செல்வன் ஈ.சஞ்ஜீவன்,<br>பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு-04. | வி. பாலச்சந்திரன்,<br>டெஸ்போர்ட் த.வி., நானுஓயா. |
| எஸ். முரளிதாஸ்,<br>இராமகிருஷ்ணமிஷன், அக்கரைப்பற்று-07. | எச்.எம்.சம்சுல் ஹினாயா,<br>பெண் பாடசாலை வீதி, ஏறாவூர்-03. |
| ஏ. றொமேஸ்பாபு,<br>புனித பத்திரிசியார் கல்லூரி, தலவாக்கலை. | செல்வி ந. சிந்துரா,<br>இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-06. |
| எவ். பஷீரா,<br>திம்பிரிகஸ்யாய பிளேஸ், கொழும்பு-05. | எஸ். ஹரி பிரசாத்,<br>திருகோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |
| செல்வி வி. கவிதா,<br>சென் கேபிரியல் பாலிக்கா மகாவித்தியாலயம், ஹட்டன். | எம். மேரி றொஸாலியா,<br>புனித சிசிலியா மகா வித்தியாலயம், மட்டக்களப்பு. |

# அறிவோம் மனதில் பதிவோம்



★ இந்திய-சீன எல்லையில் உள்ள 'பன்காங்சோ' ஏரி 140 கிலோமீட்டர் நீளமுள் ளது. உலகிலேயே மிக உயரமான இடத்தி லுள்ள மிக நீளமான உப்பு நீர் ஏரி இதுதான். இந்த ஏரி 38 கிலோ மீட்டர் தூரம் இந்தியாவின் எல்லைக்குள் உள்ளது.

★ சிலந்திகள் தங்களது கூடுகளைச் சாப்பிட்டே தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுகின்றன. அந்த வலைகள் காற்றில் உள்ள ஈரப்பசையைத் தன்னகத்தே ஈர்த்து வைத்துக்கொள்ளும். தினமும் கொஞ்சம் கொஞ்சமாக வலையைச் சாப்பிட் டுக்கொண்டே புது வலையைப் பின்னும்.



★ மேற்கு அவுஸ்திரேலியாவில் 'சிறைமரம்' என்ற ஒரு மரம் உள்ளது. இதன் சுற்றளவு 16 மீட்டர். இதனைக் குடைந்து, அறை போல செய்து அதனுள் முன்காலத் தில் கைதிகள் பலர் தங்க வைக்கப்பட்ட தால் இந்த மரத்திற்கு சிறைமரம் என்ற பெயர் ஏற்பட்டது.



# விடுகதைகளும் விடைகளும்

1. பட்டுப்பை நிறைய பவுன் காசு.
   அது என்ன?
2. காலையில் சிரிப்பான் ஒருவன்,
   மாலையில் சிரிப்பான் மற்றொருவன்.
   அவர்கள் யார்?
3. அடிக்காத பிள்ளை அலறித் துடிக்குது.
   அது என்ன?
4. அடே புடே என்பான்
   வீட்டை விட்டுப் போக மாட்டான்.
   அவன் யார்?
5. நித்தம் வெட்டும்– இரத்தம் இல்லை.
   அது என்ன?

**விடைகள்**

[illegible]

தொகுப்பு: செல்வி.எல்.மலர்விழி, நீர்கொழும்பு.

# சொல் அமுதம்

| மிருகங்கள் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|
| புலி | - ஒ | பிணா |
| நரி | - ஓரி | பாட்டி |
| மாடு | - எருது | பசு |
| ஆடு | - கடா | மறி |
| நாய் | - கடுவன் | பெட்டை |
| பூனை | - கடுவன் | பெட்டை |
| எருமை | - ஏறு | ஆண் |
| குதிரை | - மா | பெட்டை |
| மான் | - கலை | பிணை |
| யானை | - களிறு | பிடி |

எஸ்.நாகராஜன், காரைதீவு.

# ட்ரோஜன் போர்

★ **ட்ரோஜன் போர் என்றால் என்ன?**
ஹோமர் என்ற கிரேக்க அறிஞர் எழுதிய 'இல்லியட்' என்ற இதிகாசக் கதையில் இந்தப் போர் பற்றி எழுதப்பட்டுள்ளது. ட்ரோய் என்ற நகரத்தைக் கைப்பற்ற கிரேக்கர்கள் மேற்கொண்ட போர் தான் ட்ரோஜன் போர்.

★ **இந்தப் போர் எதற்காக நடந்தது?**
ஸ்பார்ட்டா மன்னனின் மனைவி ஹெலன் பேரழகி. அவளை ட்ரோய் மன்னனின் மகன் பேரிஸ் கவர்ந்து சென்று விட்டான். ஹெலனை மீட்பதற் காகவே இந்தப் போர் நடந்தது.

★ **இந்தச் சண்டை எவ்வளவு காலம் நடந்து?**
பத்து ஆண்டுகள் நடந்தது.

★ **இதில் யார் வெற்றி பெற்றனர்? எப்படி?**
கிரேக்கர்களே வென்றனர். ஒரு பெரிய மரக்குதிரையைச் செய்து அதற்குள் நிறைய வீரர்கள் அடைக்கப்பட்டனர். அந்தக் குதிரையைக் கடவுளுக்குக் காணிக்கை எனக் கூறி ட்ரோய் நகர வீரர்களை ஏமாற்றினர். பல காவல் களைக் கடந்து மரக் குதிரை ட்ரோய் நகருக்குள் நுழைந்து விட்டது. இரவானதும் மரக் குதிரையில் இருந்து வெளியே வந்த வீரர்கள் ட்ரோய் நகரக் கோட்டைக் கதவுகளைத் திறந்து விட்டனர். கிரேக்கப் படை நகருக்குள் நுழைந்து ட்ரோய் நகரையே அழித்தது.



★ **ஹெலனின் கதி என்னவாயிற்று?**
ஹெலன் மீட்கப்பட்டு ஸ்பார்ட்டா மன்னன் மெனலஸிடம் ஒப்படைக் கப்பட்டாள். ஹெலனைக் கடத்திய பேரிஸ் போரில் உயிர் துறந்தான்.

# ஓரே ஒரு நிமிடத்தில்–உலகில்

- 34 திருமணங்கள் நடைபெறுகின்றன.
- 3 தம்பதிகள் விவாகரத்துச் செய்கின்றனர்.
- 114 குழந்தைகள் பிறக்கின்றன.
- 100 பேர் மரணமடைகின்றனர்.
- 68 கார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- 14,000 கன அடி மழை பெய்கிறது.
- 35,000 தொன் தண்ணீர் கடலில் கலக்கிறது
- 6,00,000 சிகரெட் புகைக்கப்படுகிறது.
- 6,38,000 கலன் மது குடிக்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# தூ!

## அசத்தல் 4

**தமிழக கிரைம் கதை மன்னன்**
**பட்டுக்கோட்டை பிரபாகர்**



"இன்ஸ்பெக்டரோ, சப்-இன்ஸ்பெக்டரோ வரட்டும். நான் பேசிக்கிறேன். நான் ஓடிட மாட்டேன். கையை விடு. அட! விடுய்யான்னா. மேல கையை வெச்சே... திட்டிடுவேன். உடுப்புக்குக் கொஞ்சம் மருவாதி தரலாம்னு பார்க்கறேன்."

"வாயை மூடும்மா."

"இத பாரு, பத்து ரூபாய்ல படியலை, அம்பது ரூபா கேட்டாரு. தர மாட்டேன்னு சொல்லிட்டேன். அதனால தான் கேஸ் போடுவேன்னு சொல்லி இழுத்துட்டு வந்துட்டாருன்னு சொல்வேன். வரட்டும். வரட்டும்."

"என்னம்மா இது! நான் எப்ப உன் கிட்டே அம்பது ரூபா கேட்டேன்?"

"இதோ வந்துட்டாரு. வாங்கய்யா. கும்புடறேன்யா."

"மதன், இப்படி உக்காருங்க ஒரு நிமிஷம். கங்காதரன், என்னய்யா இது?"

"ப்ராத்தலுங்க. ரோட்ல நின்னுகிட்டு கூப்புடுதுங்க."

"ஏம்மா. அப்படியா?"

"அட என்ன சாரு, கான்ஸ்டபிள் பேச்சை நம்பிக்கிட்டு.. நாடா வெளக்கு வச்சி குச்சி மிட்டாய் வித்துக்கிட்டிருக்கேன். மாச கடைசி, கேசு போடணும், வாம்மான்னு கூட்டிட்டு வந்துட்டாரு."

"என்னய்யா இது?"

"சத்தியமா இவ ப்ராத்தல் சார்."

"பத்து ரூபா தர்றேன் விட்டுடுன்னேன் சார். அதுக்கு அம்பது ரூபா தர்றியான்னு கேட்டாரு சார். அம்பது ரூபா இல்லைன்னா இன்னொரு காரியம் செய்யின்னு... ரொம்ப அசிங்கமா சொன்னாரு சார்."

"கங்காதரன்!"

"நம்புறிங்களா சார் நீங்க?"

"இந்தம்மாவை வெளியே அனுப்புய்யா. நல்லா கொண்டாந்திங்க கேசு. பானை தண்ணி எடுய்யா. இன்ஸ்பெக்டர் வந்தாரா?"

"இல்லிங்க."

"மதன் உங்க கிட்டேர்ந்து சில தகவல்கள் வேணுமே."

"என்ன தகவல்கள் சார்?"

"சாயங்காலம் எங்கே போனிங்க?"

"அஷ்டலக்ஷ்மிகோயிலுக்கு."

"அதுக்குப் பக்கத்திலே கொஞ்சம் தள்ளி கடற்கரையிலேதான் பர்ஸ் கிடந்ததா ஒப்படைச்சவங்க சொன்னாங்களே..."

"ஆமாம் சார். அங்கேயும் போயிருந்தேன்."

"தனியாவா?"

"இல்லை. என்னுடைய காதலியோட போயிருந்தேன்."

"பேரென்ன?"

"யார் பேர்?"

"உங்க காதலி பேரு."

"அது எதுக்கு சார் உங்களுக்கு? எங்கே கையெழுத்து போடணும்?"

"ஏன் அவசரப் படறிங்க? பர்சோட ஒரு லேடீஸ் கர்சீபும் கிடந்ததா ஒப்படைச்சாங்க. ஒரு வேளை அது உங்க காதலியோடதா இருக்கலாமான்னுதான் கேட்டேன்."

"எங்கே, காமிங்க."

"ஓரத்திலே எம்னு இனிஷியல் போட்டிருக்கு பாருங்க."

"இது இல்லை சார். அவ பேர் கீதா."

"முழுபேர் என்ன?"

"முழுபேரே கீதாதான். நான் போகணும் சார்."

"மதன், நீங்க விளையாட்டானவரா, சீரியஸானவரான்னே புரியலை. உங்க பாண்டல என்ன கறைன்னு சொன்னிங்க?"

"என்னமோ கறை!"

"என்னமோ கறை இல்லை சார் அது ரத்தக்கறை!"

"ரத்தம்?"

"இங்கிலீஷ்ல ப்ளட். தெலுங்குல நெத்துரு."

"மலையாளத்திலே?"

"மிஸ்டர், விளையாடறிங்களா? சொல்லுங்க இந்த ரத்தக்கறை எப்படி வந்திச்சி?"

"எனக்குத் தெரியாது சார்."

"ரைட்டு. உங்க காதலி இப்போ எங்கே?"

"அவ வீட்ல இருப்பா."

"போன் இருக்கா?"

"இருக்கு."

"நம்பர் சொல்லுங்க."

"எதுக்கு சார்?"

"இப்ப இந்த உலகத்திலே இருக்காங்களா, இல்லை பரலோகத்திலே இருக்காங்களான்னு தெரிஞ்சுக்கிறதுக்குதான்."

"சார், எனக்கு எதுவுமே புரியலை."

"மதன், இதுவரைக்கும் நான் மரியாதை கொடுத்து பேசிட்டு இருக்கேன். கீதாவோட போன் நம்பர் சொல்லுங்க."

"சார், எங்க காதல் அவங்கப்பாவுக்குத் தெரியாது. நீங்க போன் செஞ்சா எதாச்சும் குழப்பமாய்டும்."

"அதெல்லாம் ஆகாம பார்த்துக்கறேன். சொல்லுங்க."

"841526"

"ரொம்ப வேர்த்திருக்கே மதன். துடைச்சுக்கங்க. தண்ணிதரட்டுமா குடிக்க? ஈஸ் இட் 841526?"

"எஸ்."

"மிஸ் கீதா இருக்காங்களா?"

"நான் அவ ஃபாதர் பேசறேன். அவ தூங்கறா. இந்த நேரத்திலே கூப்பிடறிங்க. நீங்க யாரு?"

"நான் சசிதரன். சப்-இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ். ஒரு சின்ன என்கொயரி. கொஞ்சம் எழுப்ப முடியுமா?"

"என் பொண்ணுக்கிட்டே போலீஸ் என்கொயரியா? வாட் நான்சென்ஸ். ராங் நம்பர் சார்."

"இல்லை. ரைட் நம்பர் தான். நீங்க பேசச் சொல்லுங்க. போன்லயே முடிச்சுக்கிறது உங்களுக்கு சௌகரியம். இல்லைன்னா நேர்ல வரச் சொன்னாலும் வர்றேன்."

"என்ன கேக்கணும் அவளை?"

"சார், அவங்களைதான் கேக்கணும்."

"ஒன் மினிட். ஏய், கீதா, கீதா! வா இங்கே. போலீஸ் கூப்புடுது போன்ல. என்ன இதெல்லாம்?"

"தெரியலையே டாடி?"

"பேசு. இந்தா."

"ஹலோ..."

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ் மேடம். இன்னிக்கு சாயங்காலம் நீங்க எங்கே போனீங்க? எங்க இருந்தீங்கன்னு சொல்ல முடியுமா?"

"எதுக்கு கேக்கறிங்க?"

"எதிர் கேள்வி கேக்காம பதில் சொல்லுங்க."

"காலேஜ் விட்டதும் என் ஃபிரண்டு வத்சலா வீட்டுக்குப் போய்ட்டு வீட்டுக்கு வந்துட்டேன்."

"உண்மையா இது?"

"உண்மை தான்."

"அஷ்டலக்ஷ்மி கோவில்ல உங்க கூட இருந்ததா இங்கே மதன்னு ஒருத்தர் சொல்றார். ஒரு கொலை கேஸிலே சஸ்பெக்ட் பண்றோம் அவரை."

"என்னது, கொலையா?"

"ஆமாம். மதன்னு யாரையாச்சும் நீங்க காதலிக்கிறீங்களா?"

"என்ன கீதா, என்ன கேக்கிறார்? என்ன சொல்றே? கொலைங்றே... நான் பேசட்டுமா?"

"சொல்லுங்க மேடம், மதன்னு யாரை யாச்சும் தெரியுமா?"

"அப்படி யாரையும் தெரியாதுங்க."

ரைட், தேங்ஸ். வச்சிடுங்க. என்ன மிஸ்டர் ரீல் மாஸ்டர், சந்தர்ப்பத்துக்கு உதவும்னு அட்ரஸ், பேரு, போன் நம்பர் எல்லாம் நிறைய வச்சிருக்கீங்க போலிருக்கு. ஃபிரெண்டு வீட்டுக்குப் போய்ட்டு வந்தேன் றாங்க. மதன்னு யாரையும் தெரியாதுன்னு றாங்க."

"இல்லை அப்படி சொல்லியிருக்க மாட்டா. நீங்களா சொல்றீங்க..."

"இங்க பாருங்க. நீங்களா எல்லாத்தையும் ஒத்துக்கிட்டா நிறைய நேரம், நிறைய வலி, நிறைய வார்த்தை-இதையெல்லாம் மிச்சம் பண்ணலாம்."

"எதை ஒத்துக்கத் சொல்றீங்க?"

"கொலையை!"

"என்ன கொலை?"

"ரைட். உங்களை இடைவேளை விட்டுட்டு விசாரிக்கிறேன். இந்த பேப்பர்ல கை வைங்க."

"ஏன்,"

"ரேகைக்கு."

"தாராளமா வைக்கிறேன்."

"வெரிகுட். வச்சாச்சா? கங்காதரன், சாரை லாக்கப்புக்கு அழைச்சிட்டுப் போ."

"சார், என்ன இது, என்னை கைது செஞ்சிருக்கீங்களா?"

"இன்னும் இல்லை. அதுக்கு முன்னாடி நிறைய வேலை இருக்கு. முரண்டு பண்ணாம லாக்கப்ல இருங்க. இட்லியும், காப்பியும் வாங்கித் தரச் சொல்றேன். சாப்பிட்டுட்டு தூங்குங்க. காலைல பேசிக்கலாம்."

"சார், இது அநியாயம். என் மேல வீணா பழி சுமத்தறீங்க."

"காலைல பேசலாம் மதன். தூக்கம் வருது. வீட்டுக்குப் போகணும்."

"சட்டப்படி செய்ங்க சார். இப்படி அப்பாவியை லாக்கப்ல வைக்காதீங்க."

"ஏய்! எனக்கு சட்டம் நீ சொல்லித் தர வேணாம் போடா. நானும் மரியாதை குறைக்க வேணாமேன்னு பார்க்கறேன், துள்றியே, என்ன?"

"என் ஃபிரெண்டு லாட்ஜுக்கு போன் செய்யலாமா சார்?"

"எல்லாம் காலைல தான். பிடிவாதம் வேணாம். உள்ளே போப்பா. நீ இல்லைன்னு ஆய்டுச்சின்னா விட்டுடுவோம். கொஞ்சம் ஒத்துழைக்கணும் என்ன? ஹலோ யாரு? ஸ்ரீதர் சாரா? நான் சசிதரன் பேசறேன். இன்ஸ்பெக்டர் இங்கே வரலை. நேரா குவாட்டர்ஸ் போய்ட்டார். நானே உங்களுக்கு போன் பண்ண இருந்தேன். நீங்க பண்ணிட்டீங்க. ஒரு ப்ளட் ஸ்டெய்ண்ட் பாண்டும், ஒரு பிரிண்ட் பேப்பரும் கொடுத்து அனுப்பறேன். கைதி ரேகையோட கம்பேர் பண்ணி பார்த்து சொல்லிட்டா தேவலாம்."

"எப்போ, ராத்திரியேவா?"

"ஆமாம். ஆள் இப்போ கஸ்டடில தான். இன்னும் என்ட்ரி போடலை. கொஞ்சம் படிச்சவன். ரொம்ப டீடெய்ன் பண்ண முடியாது. பார்த்து சொல்லிட்டா நாளைக்கே மாஜிஸ்ட்ரேட் கிட்டே வாரண்ட் வாங்கிடுவேன். நடுவிலே ஞாயிற்றுக்கிழமை வேற வருது. அப்புறம் ட்ரபிள் ஆய்டும்."

"சரி, பார்த்து சொல்லிடறேன்."

"ரொம்ப தேங்கஸ் ஸ்ரீதர். கங்காதரன், இந்தா ரெண்டு ரூபா இருக்கு. அந்தாளு ஏதாச்சும் கேட்டா வாங்கிக் கொடு. வந்துடறேன் போய்ட்டு."

"எஸ் சார்."

ஏக்ஸ்க்யூஸ் மீ, நான் டைரக்டரைப் பார்க்கணும்."

"அதிகாலைல புறப்பட்டுப் போய்ட்டார் சார். லஞ்ச்சுக்குத்தான் வருவார். என்ன சார் விஷயம்?"

"ஒரு சின்ன விசாரணை. நீங்க யாரு?"

"அவரோட பி.ஏ."

"இந்த விசிட்டிங் கார்டைப் பாருங்க. உங்க டைரக்டரோடதுதானா?"

"ஆமாம் சார்."

"காலைல பேப்பர் பார்த்தீங்களா?"

"பார்த்தேன்."

"கடற்கரையோரத்தில் கன்னி கொலை! படிச்சிங்களா?"

"படிச்சேன் சார்."

"அந்த கொலை ஸ்பாட்ல ஒரு லேடீஸ் கைப்பை கிடைச்சுது. அதுக்குள்ளே இந்த விசிட்டிங் கார்டு கிடந்துச்சி."

"சார், தினம் சுண்டல் மாதிரி இந்த கார்டை நிறைய பேருக்குக் கொடுக்கறோம் நாங்க."

"இறந்து போன பெண்ணோட போட்டோஸ் கொண்டாந்திருக்கேன். கொஞ்சம் பாருங்களேன். இங்கே இந்தப் பொண்ணு வந்தாளா...? நீங்க கார்ட்டு கொடுத்திங்களான்னு பாருங்களேன்."

"கொண்டாங்க. இந்த போட்டோல உடம்பு தான் இருக்கு. இதுல முகம் தெரியலை. இதுல... சார்! இந்தப் பொண்ணு பேரு மரியகீதா.. நேத்து மத்தியானம் வந்திருந்தா..."

"வெரிகுட்... வெரிகுட்... சொல்லுங்க."

"புது படத்துக்கு புது முகம் பார்த்துக்கிட்டிருக்கோம். தினம் பத்து பேர் வர்றாங்க. நேத்து மத்தியானம் பொண்ணு வந்துச்சி. டைரக்டர் அவுட் டோர் போய்ட்டாரு, ரெண்டு நாள் கழிச்சு வாம்மான்னு சொன்னேன். நாடகத்திலே எல்லாம் நடிச்சிருக்கேன், அவசியம் சான்ஸ் கொடுக்க எற்பாடு பண்ணுங்கன்னு கெஞ்சினிச்சி. அவங்கக்கா வீட்ல தங்கியிருக்கிறதா சொன்னிச்சி. அட்ரஸ் கூட எழுதிக் கொடுத்துட்டுப் போச்சி சார். அடப் பாவமே! இப்படி ரணகளமா செத்திருக்கே."

"அந்த அட்ரஸ் எடுத்துக் கொடுங்க. ப்ளிஸ்..."

"இந்தாங்க. ட்ரிப்ளிகேன்."

"ரொம்ப தேங்சுங்க. இப்ப நீங்க சொன்ன தகவல்களையே ஒரு ஸ்டேட்மெண்ட் மாதிரி எழுதிக்கொடுத்துடுங்க."

"கோர்ட்டுக்கெல்லாம் கூப்புடுவிங்களா சார்?"

"அவசியம் இருக்காதுன்னு நினைக்கிறேன்."

(தொடர்ந்து வரும்)

**இதுவரை**

மதன்-கீதா இருவரும் காதலர்கள்
கடற்கரையில் மாலை நேரத்தில் சந்திக்கின்றனர்.
இருட்டாகிவிட்டதால் இருவரும் புறப்படுகின்றனர்.
மதனின் பர்ஸ் தொலைந்துவிடுகிறது.
கடற்கரையில் ஒரு பெண் உடல் கிடக்கிறது.
அந்தப்பெண்ணின் பெயரும் கீதா. மரிய கீதா.
பொலிஸார் விசாரணைக்கு வருகின்றனர்.
மதனின் பர்ஸ் கிடைக்கிறது.
மதனை தேடி வருகின்றனர்.
மதனின் காற்சட்டையில் இரத்த கறை இருக்கிறது.
மதன் கைது செய்யப்படுகிறான்.......

**இனி**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். பாஸ்கர்.
வயது: 24
முகவரி: இல. 01 முன்றாவது மாடி, மத்திய கொழும்பு நவீன சந்தை, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா.



பெயர்: பி. சத்தியபிரபா.
வயது: 18
முகவரி: கல்பீஹின்ன, பன்விலை, கண்டி.
பொழுது போக்கு: பாடல்கள் கேட்டல்.



பெயர்: ரி. குமாரசாமி.
வயது: 30
முகவரி: P.O.BOX- 12278, SHAMIYA- 71653, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எம். ராசீக்.
வயது: 19
முகவரி: டீ.சி. வீதி, பெரிய கிண்ணியா-4.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். நவ்பர்.
வயது: 19
முகவரி: 38, மத்திய சந்தை, நுவரெலியா.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: எம். ஹசன்.
வயது: 23
முகவரி: P.O.BOX-730 CODE NO- 32008, HAWALLY, KUWAIT.
பொழுதுபோக்கு: கிரிக்கெட்.

பெயர்: எம். நஸார்.
வயது: 22
முகவரி: இளவன் குளம், புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். ரிழ்வான்.
வயது: 18
முகவரி: கனமூலை, மதுரங்குளி.
பொழுது போக்கு: பத்திகை, கதைப்புத்தகம்.

பெயர்: கே. உதயகுமார்.
வயது: 29
முகவரி: TURBI STR 5, 680 HOCHDORF, SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: ரி.லியோ பிரின்ஸ்.
வயது: 21
முகவரி: 54/5, ஸ்ரீ தம்மதர வீதி, இரத்மலானை.
பொழுது போக்கு: ரீ.வி, கிரிக்கெட்.

பெயர்: எம்.யோகானந்த்
வயது: 19
முகவரி: 167, குட்செட் வீதி, இரத்தினபுரி.
பொழுது போக்கு: பத்திரிகை, சினிமா.

பெயர்: எம் நாஸர்.
வயது: 19
முகவரி: 325/1, வன்னியார் வீதி, நிந்தவூர்-2.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, சினிமா.


படிப்பகம்

www.padippakam.com

சிலோவ் முச்சடைத்துப் போனான். தாயின் கண்கள் வியப்பினால் அகலவிரிந்தன.

"எனக்காக வக்காலத்துப் பேச நான் வக்கீலை அமர்த்தவும் இல்லை; நான் எதுவும் சொல்லவும் மறுக்கிறேன். இந்த விசாரணையே சட்ட விரோதமானது என நான் மதிக்கிறேன். நீங்களெல்லாம் யார்? எங்களுக்கு நீதி வழங்கும்படி உங்களுக்கு மக்கள் உரிமை வழங்கியிருக்கிறார்களா? இல்லை. அவர்கள் உங்களுக்கு உரிமை தரவில்லை. உங்களது அதிகாரத்தையே நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன்!"

அவன் உட்கார்ந்தான்; தனது கன்றிச் சிவந்த முகத்தை அந்திரேயின் தோளுக்குப் பின்னால் மறைத்துக் கொண்டான்.

அந்தக் கொழுத்த நீதிபதி பிரதம நீதிபதியை நோக்கித் தலையை அசைத்து, காதில் ஏதோ இரகசியமாகச் சொன்னார். வெளுத்த முகம் கொண்ட நீதிபதி தம் கண்களைத் திறந்து, கைதிகளைக் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு, முன்னாலுள்ள காகிதத்தில் ஏதோ குறித்துக் கொண்டார். ஜில்லா அதிகாரி தலையை அசைத்தார்; தமது காலை நீட்டி, தொந்தியைத் தொடை மீது சாய்த்து, அதைக் கையால் மூடிக் கொண்டார். தமது தலையைத் திருப்பாமலே, அந்தக் கிழ நீதிபதி தமது உடம்பு முழுவதையுமே திருப்பி, அந்த வெளுத்த முக நீதிபதியைப் பார்த்து அவரிடம் ஏதோ இரகசியமாகப் பேசினார். அந்த உப நீதிபதி அவர் கூறியதை வணங்கிய தலையோடு காதில் வாங்கிக்கொண்டார். பிரபுவம்சத் தலைவர் அரசாங்க வக்கீலிடம் என்னவோ சொன்னார்; அந்த நகர மேயரும் தம் கன்னத்தைத் தடவிக் கொடுத்தவாறே கேட்டார். மீண்டும் அந்தப் பிரதம நீதிபதி மங்கிய குரலில் பேசத் தொடங்கினார்.

"அவன் அவர்களை வெட்டிப் பேசினான் பார்த்தாயா?" என்று தாயை நோக்கி வியப்போடு கூறினான் சிலோவ். "அவன்தான் இவர்கள் எல்லோரிலும் கெட்டிக்காரன்!"

அவன் சொன்னதைப் புரிந்து கொள்ளாமலே புன்னகை புரிந்தாள் தாய். அங்கு நடக்கும் சகல காரியங்களும், அவர்களையெல்லாம் கூண்டோடு நசுக்கித் தள்ளும் மகா பயங்கரத்துக்கான, வேண்டாத வீண் அறிகுறிகளே என்று அவள் கருதினாள். ஆனால் பாவெலும் அந்திரேயும் பேசிய பேச்சுக்கள் நீதிமன்றத்தில்

# மக்சீம் கார்க்கி

பேசுவது போல் இல்லாமல், தொழிலாளர் குடியிருப்பில், தமது சிறிய வீட்டிற்குள் பேசிய பேச்சுப்போல் பயமற்றும் பலத்தோடும் ஒலித்தன. பியோதரின் உணர்ச்சிவசமான உத்வேகப் பேச்சைக் கேட்டு அவள் பரபரப்படைந்தாள். அந்த விசாரணையில் ஏதோ ஒரு துணிந்த காரியசாதனை நடைபெறுவதுபோல் தோன்றியது. தனக்குப் பின்னாலுள்ள ஜனங்களைப் பார்த்தபோது, அவ்வித உணர்ச்சி தனக்கு மட்டுமே ஏற்படவில்லை, அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் கண்டு கொண்டாள் தாய்.

"உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று அந்தக் கிழ நீதிபதி கேட்டார்.

அந்த வழுக்கைத் தலை அரசாங்க வக்கீல் எழுந்து நின்றார்; ஒரு கையை மேஜைமீது ஊன்றியவாறே படபடவென்று புள்ளிவிவரங்களை அடுக்கிப் பேசத் தொடங்கிவிட்டார். அவரது பேச்சில் எவ்விதப் பயங்கரமும் இல்லை.

அதே சமயத்தில் ஏதோ ஒரு வறண்ட குத்தலான பயபீதி உணர்ச்சி தாயின் உள்ளத்திலே புகுந்து உறுத்தியது. கையை உயர்த்திக் காட்டாமல், வஞ்சம் கூறிக் கத்தாமல், ஆனால், அதே சமயத்தில் கண்ணுக்குத் தெரியாமல், புலனுக்கும் வசப்படாமல், குமுறி வளர்ந்து வரும் ஒரு வெம்பகை உணர்ச்சி அந்த நீதிமன்ற சூழ்நிலையிலே தொனித்துக் கொண்டிருப்பதை அவள் உணர்ந்தறிந்தாள். அந்தக் கொடும் பகை நீதிபதிகளின் முன்னிலையிலேயே வட்டமிட்டு அவர்களுக்கு வெளியில் நடைபெறும் காரியங்கள் எதுவும் அவர்கள் மனத்துக்குள் புகுந்து விடாதபடி, அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்து சூழ்ந்து கப்பி மூடிக்கொண்டிருப்பது போல் தோன்றியது. அவள் அந்த நீதிபதிகளைப் பார்த்தாள்; அவர்களது பார்வையிலிருந்து அவளால் எதுவும் அறிந்து கொள்ள முடியவில்லை. அவள் எதிர்பார்த்ததுபோல், அவர்கள் பாவெலின் மீதோ பியோதர்மீதோ கோபம் கொள்ளவில்லை, அவர்களை அவமானப்படுத்திப் பேசவில்லை. தாங்கள் கேட்ட கேள்விகளுக்கே அவர்கள் எந்த முக்கியத்துவமும் அளித்ததாகவும் தெரியவில்லை. அவர்களது குரல் விருப்பற்ற குரலாக ஒலித்தது; தமது கேள்விகளுக்குக் கிடைத்த பதில்களையும் அவர்கள் வேண்டா வெறுப்பாகத்தான் கேட்டுத் தீர்த்தார்கள். அவர்கள் எதைப்பற்றியும் கவலை கொள்ளாதவர்கள் போலவும் எல்லா விஷயத்தையும் ஏற்கெனவே தெரிந்து வைத்திருந்தவர்கள் போலவுமே காணப்பட்டார்கள்.

இப்போது அவர்கள் முன்னால் ஒரு பொலிஸ்காரன் வந்தான், ஆழ்ந்த குரலில் சொன்னான்:

"பாவெல் விலாசவ் தான் இவர்களில் பிரதம கிளர்ச்சிக்காரன் என்று சொல்லப்படுகிறது..."

"நஹோத்காவைப் பற்றி என்ன?" என்று அந்த கொழுத்த நீதிபதி சோம்பலுடன் கேட்டார்.

"அவனும்...."

ஒரு வக்கீல் எழுந்திருந்தார்.

"நான் ஒரு வார்த்தை சொல்லலாமா?" என்று கேட்டார்.

"ஏதாவது மறுத்துக் கூறவேண்டுமா?" என்று பிரதம நீதிபதி கேட்டார்.

அத்தனை நீதிபதிகளும் ஏதோ நோய் வாய்ப்பட்டுக் துன்புறுவது போல் தாய்க்குத் தோன்றியது. அவர்களது பேச்சிலும் நடத்தையிலும் ஏதோ ஒரு சீக்கான அலுப்புணர்ச்சி பிரதிபலிப்பதுபோல் தோன்றியது; முகங்களும் அந்த அலுப்பையும் ஆயாசத்தையுமே பிரதிபலித்தன. அவர்களது உத்தியோக உடைகள், நீதிமன்றம், அரசியல் பொலிஸ்காரர்கள், வக்கீல்கள், நாற்காலிகளில் உட்கார்ந்து கேள்வி கேட்பது, அதற்கு வரும் பதில்களைக் கேட்டுக் கொண்டிருக்கும்படியான தேவை–எல்லாவற்றையுமே அவர்கள் ஒரு நிர்ப்பந்தவசமான தொல்லையாகத்தான் கருதினார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

தாய்க்கு ஏற்கெனவே அறிமுகமாயிருந்த அந்த மஞ்சள் முஞ்சி அதிகாரி அவர்களுக்கு முன்னால் வந்து நின்றான்; பாவெலைப் பற்றியும் அந்திரேயைப்பற்றியும் தனக்குத் தெரிந்த விஷயங்கள் அனைத்தையும் உரத்த குரலில் நீட்டி நீட்டிப் பேசினான்.

"உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!" என்று தனக்குள் நினைத்துக்கொண்டாள் தாய்.

> **பியோத்தரின் உணர்ச்சிவசமான உத்வேகப் பேச்சைக் கேட்டு அவள் பரபரப்படைந்தாள். அந்த விசாரணையில் ஏதோ ஒரு துணிந்த காரியசாதனை நடைபெறுவதுபோல் தோன்றியது.**

கைதிக் கூண்டுக்குப் பின்னால் இருப்பவர்களை, அவர்களைப்பற்றிய பயமும் இல்லாமல், அவர்கள் மீது அனுதாபமும் இல்லாமல் ஏறிட்டுப் பார்த்தாள் தாய். அவர்கள் மீது அவள் அனுதாபம் கொள்ள முடியாது. அவள் மனதில் அவர்கள் வியப்புணர்ச்சியைத்தான் உண்டாக்கினார்கள்; அவர்களைக் கண்டமாத்திரத்தில் அவளது உள்ளத்தில் ஓர் அன்புணர்ச்சி அலைபாய்ந்து சிலிர்த்துப் பரவியது. அந்த வியப்புணர்ச்சியோ அமைதியாயிருந்தது; அந்த பரவச ஆனந்தம் தெளிவோடிருந்தது. சுவருக்கு எதிராக அவர்கள் உறுதியோடும் இளமை

# 87

யோடும் உட்கார்ந்திருந்தார்கள். சாட்சிகளின் கிளிப்பிள்ளைப் பேச்சையும், நீதிபதிகளையும், சர்க்கார் வக்கீலோடு மற்ற வக்கீல்கள் பேசும் விவாதப் பேச்சுக்களையும், அவர்கள் கவனித்ததாகவே தெரியவில்லை. இடையிடையே அவர்களில் யாராவது ஒருவன் வெறுப்பாகச் சிரித்துக்கொண்டே, தனது தோழர்களைப் பார்த்து ஏதாவது கிண்டலாகச் சொல்வான். அந்தத் தோழர்களின் முகங்களும் அந்தக் கிண்டலைப் பிரதிபலித்துப் புன்னகை புரிந்தன. குற்றவாளிகளின் தரப்பில் பேசிக்கொண்டிருந்த வக்கீல் ஒருவரோடு, பாவெலும் அந்திரேயும் இடையிடையே ஏதேதோ மெதுவாகப் பேசினார்கள். அந்த வக்கீலை முந்தின நாள் இரவு நிகலாயின் வீட்டில் தாய் பார்த்திருந்தாள். மற்றவர்களை விட உணர்ச்சிக்கு ஆளாகி நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்த மாசின் அவர்களது பேச்சைக் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தான். சமயங்களில் சமோய்லவ் இவான் கூஸெவைப் பார்த்து ஏதாவது பேசுவான். அதற்குப் பதிலாக இவான் தன் தோழனை முழங்கையால் இடித்துக் கொண்டே, பொங்கி வரும் சிரிப்பை அடக்க முயலுவான். அந்த

# தாய்

முயற்சியில் அவனது முகம் சிவந்து கன்னங்கள் கன்றிப்போகும்; உடனே அவன் தலையைக் கவிழ்த்துக் கொள்வான். இருமுறை அவன் வாய்விட்டே சிரித்துவிட்டான். அதன் பிறகு அவன் தன் சிரிப்பையெல்லாம் உள்ளடக்கிக் கொண்டு, தன்னைக் கட்டுப்படுத்த முயன்றவாறு உட்கார்ந்திருந்தான். அந்தக் கைதிகள் ஒவ்வொருவரிடமும் இளமை பொங்கி பிரவாகித்தது. நுரைத்துப் பொங்கும் அந்தப் பிரவாகத்தைத் தடுக்க முயலும் சகல முயற்சிகளையும் அந்த இளமை லாகவமாக எதிர்த்து ஒதுக்கியது.

சிஸோவ் தாயின் முழங்கையை லேசாகத் தொட்டான். அவள் திரும்பினாள். மகிழ்ச்சியும், ஓரளவு பதை பதைப்பும் பிரதிபலிக்கும் அவனது முகத்தை அவள் கண்டாள்.

"நமது இளவட்டங்கள் எவ்வளவு தைரியசாலிகளாய் விட்டார்கள் என்று பார்" என்று மெதுவாகக் கூறினான் அவன்: "பெரிய சீமான்கள்!"

நீதிமன்றத்தில் சாட்சிகள் உணர்ச்சியற்ற குரலில் அவசர அவசரமாகவும், நீதிபதிகளோ விருப்பமின்றியும் அக்கறையின்றியும் பேசிக்கொண்டேயிருந்தார்கள். அந்தக் கொழுத்த நீதிபதி தமது தடித்த கரத்தால் வாயை மூடிக்கொண்டு கொட்டாவிவிட்டார். சிவந்த மீசைகொண்ட நீதிபதியின் முகம் மேலும் வெளுப்புற்றுப் போயிற்று. இடையிடையே அவர் தமது நெற்றிப் பொருத்துக்களைக் கை விரலால் அழுத்திப் பிடித்து விட்டவாறே, முகட்டை நோக்கி நிமிர்ந்து சிரமத்தோடு வெறுமனே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். இடையிடையே எப்போதாவது அரசாங்க வக்கீல் பென்சிலை எடுத்து எதையாவது குறித்துக்கொள்வார். அதன் பிறகு, அவர் ஊமைக் குரலில் அந்த பிரபுவம்சத் தலைவரோடு தமது பேச்சைத் தொடங்குவார். அவரோ நரைத்த தாடியை நீவிக்கொடுத்தவாறு தமது அழகான பெரிய கண்களை உருட்டி விழிப்பார்; கழுத்தைக் கம்பீரமாக அசைத்துக் கொண்டே புன்னகை செய்வார். நகர மேயர் கால்மேல் கால்போட்டு முழங்காலின் மீது கை விரல்களால் தாளம் போட்டுக் கொண்டு அந்தத் தாளத்தையே கவனித்துக் கொண்டிருந்தார். முழங்காலின்மீது தொந்தியைச் சரித்துத் தாங்கிக் கொண்டிருந்த அந்த ஜில்லா அதிகாரி அதை இருகையாலும் அன்போடு வாரித்தழுவிக் கொண்டிருந்தார். அவர் ஒருவர்தான் அந்த நச்சுப் பிடித்த சாட்சிகளின் முனகலையெல்லாம் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருப்பது போலத் தோன்றியது. அந்தக் கிழ நீதிபதியோ, காற்றடிக்காத திசையில் ஆடாது அசையாது நிற்கும் காற்றாடியைப்போல், இம்மிகூட அசையாது தமது நாற்காலிக்குள்ளேயே புதைந்து கிடந்தார்.

சுற்றுச்சூழ இருந்த ஜனங்கள் ஆயாசத்தால் அலுத்து மரத்துப்போகும் வரை இவையனைத்தும் நீடித்தன.

"நான் அறிவிக்கிறேன்..." என்று கூறிக்கொண்டே அந்தக் கிழவர் எழுந்து நின்றார். இந்த வார்த்தைகளுக்குப் பின் வந்த வார்த்தைகள் அவரது உதடுகளுக்குள்ளாகவே மடிந்து உள்வாங்கிப் போய் விட்டன.

நீதிமன்றம் முழுவதிலும் பெருமூச்சுக்களும், அமைதியான வியப்புக் கேள்விகளும், இருமலும், காலைத் தேய்க்கும் சப்தமுமே நிறைந்து ஒலித்தன. கைதிகளை வெளியே கொண்டுபோனார்கள். அவர்கள், தமது நண்பர்களையும் உறவினர்களையும் பார்த்துத் தலையை ஆட்டிக் கொண்டே புன்னகை புரிந்தார்கள். இவான் கூஸெவ் யாரையோ துணிந்து வாய்விட்டுக் கூப்பிட்டு விட்டான்:

"இகோர், தைரியத்தை இழக்காதே!"

தாயும் சிஸோவும் நீதிமன்றத்துக்கு வெளியேயுள்ள வராந்தாவுக்கு வந்தார்கள்.

"பக்கத்துக் கடையிலே போய் ஒரு கப் தேநீர் சாப்பிடலாமா?" என்று சிஸோவ் அன்போடு கேட்டான். "இன்னும் நமக்கு ஒன்றரை மணி நேர அவகாசம் இருக்கிறது."

**(தொடர்ந்து வரும்)**



---

நேரம் அதிகாலை 4.08. என்று தான் கையிலிருந்த எலக்ட்ரோனிக் கடிகாரம் சொன்னது.

கண்டி ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி அந்த ரயில்- பனி மூட்டத்தைக் கிழித்துக் கொண்டு புறப்பட்டது.

நானும் அந்த ரயிலின் ஒரு பெட்டிக்குள், ஒரு ஸீட்டின் ஓரத்தில்- குளிருக்குக் குறுகிப் போய் குந்தியிருந்தேன்.

அங்கொருவர், இங்கொருவர் என்று ஓரிருவர் தூங்கி வழிந்து கொண்டிருந்தனர்.

எனது சொந்த ஊர் கண்டி. வேலை பார்ப்பது கொழும்பில்.

வெள்ளி வீடு வந்து; திங்கள் காலை வேலைக்குத் திரும்பும் சராசரி இலங்கை இளைஞன் நான்.

ரயில் ஊளையிட்டவாறு இருளைக் கிழித்து விரைகின்றது. வெளியே எதுவும் தெரியவில்லை. கும்மிருட்டு.

ஒரு சில நிமிடங்களில் ரயில் ஓய்வெடுத்துக் கொண்டது. அது 'சரசவி உயன' ஸ்டேஷன்.

இங்கிருந்து வழமையாக யாரும் இந்த ரயிலுக்கு ஏறுவதும் இல்லை. இறங்குவதும் இல்லை.

'என்றாலும் கண்டறியாத ஒரு தரிப்பு-ஏன்?' என்று என் மனம் அலுத்துக் கொள்ளும்.

என்றாலும் இன்று அப்படி அலுத்துக் கொள்ள முடியவில்லை.

காரணம்: கையில் ஒரு 'பிரீவ் கேசு'டன் ஒரு இருபது வயது 'நிலா- 'ஸ்டைலா'க இடக் கையால் சாரியை சற்றுத் தூக்கி ரயிலேறியது.

அதுவும் நானிருக்கும் பெட்டிக்குள்; எனக்கு எதிர் ஸீட்டில்....

'என்னடா இது? இந்த அகால வேளையில்? இத்தனை அழகாய் ஒரு இளம் பெண்? தன்னந்தனியாய்....'

நான் ஆச்சரியத்திலிருந்து விடுபடவில்லை. அந்த தேவதை என்னைப் பார்த்துப் புன்னகைத்தது.

சிரிக்கும்போது அவள் ரோஜாக் கன்னத்தில் விழுந்த குழியினில் நானும் விழுந்து...

பதிலுக்கு நானும் சிரித்து வைத்தேன்.

அவளது ரோஜா நிற உடம்புக்கு; இள மஞ்சள் நிறத்து மெல்லிய சேலை எடுப்பாகத்தான் இருந்தது.

ரயில் புறப்பட்டது.

வெளியிலிருந்து வீசிய குளிர் காற்றில் அவளது ஈரடிப் பட்டுக் கூந்தல் காற்றில் கலைந்து, அவள் முகத்தில் மோதி...

'ஜெ'...யின் ஓவியப் பெண் உயிர் பெற்றதுபோல்....

கூந்தல் கோடுகளுக்குள் தெரியும் அவளது பிறை நெற்றிக்குள் ஒரு நிலவுப்



# ரயிலில் வந்த ரதி

பொட்டு சிரித்தது.

ஓ! தமிழ்ப் பெண்ணா?

"மிஸ்; எங்க கலம்புவுக்கா பயணம்?"

"இல்ல நான் வெயாங்கொட வரைக்குந் தான்..." அவளது குரல் கூட தேனாக இனித்தது.

"அங்குதான் வேர்க் பண்றீங்க போல?"

> **"இதுதான் என் ஃபோன் நம்பர்..... டைமிருந்தா ஃபோன் பண்ணுங்க."**

**தலவின்னை சிபார்**

"நோ.நோ. நான் பெராதெனிய 'கெம்பஸ்'ல படிக்கிறேன். இன்னக்கி என்ட பேர்த்டே. அதான் ஏர்லி மோனிங் வீட்ல இருக்கணும்னு புறப்பட்டேன்."

ஓ! பல்கலைக்கழகமா? அதுதான் பயமறியாது போலும்.

"மிஸ்; வந்து.... உங்கட பேர நான் தெரிஞ்சிக்கலாமா?"

"ஓ! தாராளமா. மை நேம் ஈஸ் ரதி."

'ஓ ஸ்வீட்' மனசுதான் சொன்னது. நா(ன்) சொல்லவில்லை.

"உண்மையில உங்களுக்குப் பொருத்தமான பேர்தான்."

'ரொம்பத்தான் வழுக்காதே.' மனசு கடிந்து கொண்டது.

அவள் முகம் சிவந்தாள். கீழ் வானம் செந்நிறமாய் மாறிக் கொண்டு வந்தது.

ரயிலும் வெயாங்கொடையை நெருங்கிக் கொண்டிருந்தது.

"ரதி என்ட பிறந்த நாள் வாழ்த்துக்கள் ஹெப்பி பேர்த் டே டு யூ!"

"ஓ.தேங்க் யூ."

சொன்னவள் பெட்டியைத் திறந்தாள்.

"இந்தாங்க மிஸ்ட...." என் பெயர் தெரியாது

இழுத்தாள்.

"சுரேஷ்" நான்தான் சொன்னேன்.

"சுரேஷ் இது என்ட ஃபோன் நம்பர். டைமிருந்தா ஃபோன் பண்ணுங்க."

பழம் நழுவிப் பாலில் விழுகிறதா? இல்லை தேனில் விழுகின்றது.

ரயில் வெயாங்கொடையில் வேகமாய் வந்து நின்றது.

"அப்போ நான் வரட்டுமா? ஸீ யூ." சொல்லி விட்டு ஒயிலாக இறங்கினாள் ரதி.

❤ ❤

அலுவலகம் போய் அமர்ந்த எனக்கு அன்று கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை.

நினைவெல்லாம் ரதி. ரதி. ரதியே! மேசை மேலிருந்த ரிஸீவரை எடுத்தேன். அவள் தந்த இலக்கங்களைச் சுழற்றினேன்.

மறு முனையில் டெலிஃபோன் மணி சிரித்தது. என் காதில் தேன் பாயப் போகின்றது.

"ஹலோ! குட் மோர்னிங்"

ஈயம் வந்து பாய்ந்தது. அது ஓர் ஆண் குரல்.

ஒரு கணம் ஆடிப்போன நான்....

"மிஸ் ரதியோட கொஞ்சம் பேசணும்."

"என்ன ரதியோட பேசணுமா? எதுக்கு?"

மனுஷன் விடாக் கண்டன் பேர்வழி போலும்.

"இன்னக்கி அவவோட பேர்த் டே விஷ் பண்ணலாமுன்னு..."

"அமா தம்பி. இன்னக்கி ஏ மக ரதியோட பேர்த்டே தான். அது எப்படி ஒங்களுக்குத் தெரியும்? நீங்க யாரு?"

"இன்னக்கி மோர்னிங் நாங்க ரெண்டு பேரும் ஒரே டிரெய்னுலதான் வந்தோம். அதான்..."

"அடடே அப்படியா? ஆனா... நீங்க இப்போ அவ கூடப் பேச முடியாது தம்பி."

"ஏன் அவங்க வெளியே எங்காவது போயிருக்காங்களோ?"

"இல்லை தம்பி. ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி என் மக ரதி இந்த உலகத்த விட்டே போயிட்டா."

"என்ன சொல்றீங்க....?"

"ஆமா தம்பி. பேராதெனிய 'கெம்பஸ்'ல வச்சு அவ தற்கொல பண்ணிக்கிட்டா. ஆனா... அவ ஆசயா கொண்டாடுற பேர்த்டே அன்னக்கி வீட்டுக்கு மோர்னிங் டிரெய்னுல வாறதா போன வருஷம் கூட ஒங்களப் போல ஒரு தம்பி போன் பண்ணினாரு. ஹ்ம்...."

பெருமூச்செறிந்தார் அந்தப் பெரிய மனிதர்.

என் தலை சுற்றியது.

மயக்கம் தெளிந்து விழித்தபோது, ரிஸீவர் மேசையின் கீழ் தொங்கி ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# மீண்டும் வெல்வேன்!

மூர்த்தி

பிரதீப்பின் தயக்கமும் பணிவும், பயல் என்னவோ கோரிக்கை மனு கொடுக்கப் போகிறான் என்பதைத் துல்லியமாய் உணர்த்தின. ஆனாலும் அவனாகவே சொல்லட்டுமே என்று நான் கண்டும் காணாமல் இருந்தேன்.

நான் ஆபீஸ் புறப்படுகையில் கேட்டே விட்டான். "அப்பா.. ஒரு சைக்கிள் வேணும்."

உறுத்துப் பார்த்தேன்.

"இந்த மாசம் ரிப்போர்ட் வந்தாச்சா?"

"நாளைக்குத் தான் தருவாங்க."

"அதில் எத்தனையாவது ராங்க் வரும் உனக்கு?"

"தெ...ரி..ய..லை.."

"சரி... போன அரை இறுதிப் பரீட்சையில எத்தனையாவதாக வந்தே!"

"செகண்ட்"

"இந்த வருஷம் எப்பவாவது ஃபெஸ்ட் ராங்க் எடுத்திருக்கியா?"

"....."

"சொல்லுடா" என்றேன்.

"இல்லை" என்றான். கிணற்றுக் குரலில் அடிபட்ட பார்வை பார்த்தான். 'ஏண்டா இவர்கிட்ட சைக்கிள் கேட்டோம்' என்று இருந்திருக்கும் போல.

"போன வருஷம் வரைக்கும் எல்லா பரீட்சையிலேயும், ஃபெஸ்ட் ராங்க் தானே எடுத்தே? இப்ப என்ன வந்தது உனக்கு?"

கீழே டி.வி. ஓடுவது போல் தரையையே வெறித்துக் கொண்டிருந்தான்.

"சொல்லுடா, ஏன் எடுக்கலை?"

**ஆனால், மறுபடியும் பரீட்சை சமயம் கொஞ்சமும் அயர்ச்சி இல்லாமல் பிரதீப் படிப்பது தெரிந்தது. இப்படியொரு விக்ரமாதித்தன் தவமா?**

"இ.. இந்த வருஷம் எங்க கிளாஸ்ல புதுசா ஒரு பையன் சேர்ந்திருக்கான்ப்பா... குமார்ன்னு பேரு. கிளாஸ்லே எப்பவும் அவன்தான் முதலாவதா வர்ரான்."

"நீ அவனை ஜெயிச்சுட்டு சைக்கிள் கேளு... வாங்கித் தரேன்..."

பிரதீப்பின் கண்களில் சந்தோஷ பல்பு.

"நிஜம்மா?" என்றான்.

"நிஜம்மாத்தான்."

அதற்கு அப்புறம் அவன் விளையாடுவதைக் குறைத்துக் கொண்டதைப் பார்க்க முடிந்தது.

என் மனைவி ஹேமா கூடச் சொன்னாள்: "சைக்கிள் வாங்கித்தர்ர வரைக்கும் படிப்பான். வாங்கினப்புறம் ரொம்ப மோசமாகிவிடப் போகிறது" என்று.

"முதல்ல அவன் ஃபெஸ்ட் ராங்க் எடுக்கட்டும். அப்புறம் பேசிக்கலாம்..."



என்றேன்.

பரீட்சை சமயம் புத்தகங்களுடன் அவன் ஒரு கலிங்கயுத்தமே நடத்தினதைக் கவனித்தேன்; கவனிக்காத மாதிரி இருந்தேன்.

பாடசாலை ரிப்போர்ட்டுடன் பையன் எதிரில் தோன்ற, என் முகம் மலர்ச்சிக்குப் போனது.

"என்னடா... முதல் மாணவனா வந்திருக்கிறியா?"

"ப்ச்சு.... இல்லைப்பா...." நாணத்துடன் பூமாதேவியை தரிசித்தான்.

"கணக்குல என்னை விடப் பத்து மார்க் கூடுதலா வாங்கிட்டான்பா குமார். அடுத்த மாசம் எப்படியும்...!"

சிரித்தபடி கையெழுத்திட்டேன்.

அந்த மாசம் பிரதீப் அதிக நேரம் கண் விழித்துப் படிப்பது தெரிந்தது. கொஞ்சம் பாவமாகக் கூட இருந்தது அவன் மீது.

ஆனால் மறுபடியும் பரீட்சை சமயம் கொஞ்சமும் அயர்ச்சி இல்லாமல் பிரதீப் படிப்பது பார்த்து வியந்தேன். இப்படியொரு விக்ரமாதித்தன் தவமா?

ஹேமாவே அந்த மாசமும் ரிப்போர்ட்டை நீட்ட, "எ...என்ன? இந்த மாசமும் இரண்டாவது தானா?" என்றேன்.

"இல்லைங்க... முதலாவதாகவே வந்திருக்கான்!"

ஹேமா சொன்னதும் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

"என்ன சொல்றே? எங்கே கொண்டா பார்ப்போம்?"

நிஜம்தான். முதல் தடவையாக முதல் ராங்க் எடுத்திருந்தான். என் தலையில் தேவர்கள் கூடை கூடையாய் பூ கொட்டின சந்தோஷம் பொங்கிற்று. இரத்தம் வழக்கத்தை விட வேகமாய்த் துள்ளி ஓடியது.

கையெழுத்து போட்டுக் கொடுத்த பிறகு தான் தோன்றியது, 'இதை ஏன் அவனே என்னிடம் சொல்லவில்லை?'

"பிரதீப் எங்கே?."

கிரவுண்டில் விளையாடிக் கொண்டிருந்தவனைத் தேடிப் பிடித்தேன்.

"முதலாவதாக வந்துட்டியே?"

"ப்ச்சு.. ஆமாம்ப்பா..!" என்றான்.

"சரி.. சைக்கிள் வாங்கித் தந்துடறேன்.

"வேணாம்ப்பா...!" சுரத்தே இல்லாமல் சொன்னான்; நெஞ்சுக்குள் வியப்பு குறுகுறுவென ஓடிற்று.

"என்னடா சொல்றே? சைக்கிள் வேண்டாமா?" என்றேன்.

"நான் முதல் ராங்க் எடுத்தேனே தவிர, அதைப் போராடி எடுக்கலைப்பா! அந்தக் குமாருக்கு காய்ச்சல். இந்தத் தடவை அவன் பரீட்சையே எழுதலை. அதனால் தான் எனக்கு முதலிடம் கிடைச்சுது.

அவனும் எழுதி, நான் ஃபெஸ்ட் ராங்க் வாங்கி அவன் செகண்ட் ராங்க் எடுத்தாதாம்ப்பா எனக்குப் பெருமை... அப்பதாம்ப்பா எனக்கு வெற்றி...!" என்றவனை பிரமித்துப் போய்ப் பார்த்தேன்.

"அதனால என்னப்பா.. அடுத்த மாசம் அவன் பரீட்சை எழுதுவானில்ல... அப்ப பார்த்துக்கறேன்." கண்களை மினுக்கிக் கொண்டு சிரித்தான்.

சந்தோஷப் பெருமூச்சுடன், பெருமிதமாய் பிரதீப்பைத் தட்டிக் கொடுத்தேன்.

"கண்ணா... அவன் பரீட்சைக்கு வந்திருந்து நீ ஜெயிக்கிறதை விட, இது தாண்டா எனக்கு ரொம்ப சந்தோஷம் தருது. உன் தோல்விக்கே ஒரு புதுப் பரிமாணம் கிடைச்சிருக்கு இப்ப... இது வெற்றி மிக்க தோல்விடா.. சொல்லப்போனா... இந்தத் தோல்வி வெற்றியை விடச் சிறந்தது... சரி... சரி.... கிளம்பு..."

"எங்கேப்பா?"

"சைக்கிள் வாங்கத்தான்!."

# பரீட்சை

ரூபராணி

"ஆனந்த், நான் வேலையை ரிசைன் பண்ணிட்டேன். வேலைக்குக் குட்பை, கல்யாணத்துக்கப்புறம் என் கணவனைக் கவனிக்கிறதுதான் என்னோட வேலை." குழந்தையைப் போல் குதூகலித்துச் சொன்னாள் புவனா.

புவனா சொன்ன செய்தி ஆனந்துக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். அவனுடைய முகத்தில் ஆத்திரம் அமைதியாக நிழலாடியது; ஆனாலும், அதைக் காட்டிக் கொள்ளாமல்–

"நிஜமாவா?" என்றான் சாதாரணமாக.

"நிஜமேதான்!"

"என்ன வெளயாடறியா?"

"வெளயாட்டில்ல; உண்மையைத்தான் சொல்றேன்!" ஆனந்தின் தலையை அவள் தளிர் விரல்களால் கோதினாள். அவனுக்கும் அவளுக்கும் கலியாணம் ஆக இன்னும் ஒரு மாதம் தான் இருந்தது. இவர்கள் இருவரும்



காலிமுகக்கடற்கரையில் ஒரு ஓரமாக உட்கார்ந்திருந்தார்கள். ஆனந்தும் புவனாவும் வெவ்வேறு கம்பனியில் வேலை பார்ப்பவர்கள். தற்செயலாக இவர்கள் இருவரும் சங்கீத சபா ஒன்றில் சந்தித்து: நட்பாகி, காதலாகி கனிந்து, கலியாணம்வரை வந்து விட்டது தெரிந்த விஷயம். இவர்கள் இருவருக்கும் சொந்த பந்தம் இல்லாதது பெரிய பொருத்தம். இதனால் பதிவுத்திருமணம் செய்து கதிரேசன் கோயிலில் மாலை மாற்றிக் கொள்வதாக இருந்தார்கள்.

ஆனந்தின் மௌனத்தைப் புவனாவால் தாங்க முடியவில்லை.

"என்ன ஆச்சு உங்களுக்கு?" அவன் காதைப் பிடித்து செல்லமாகத் திருகினாள்.

ஆனந்த் எங்கோ வெறித்துப் பார்த்தான். அவன் வாய்மட்டும் "நீ உண்மையாகவே வேலைய விட்டிட்டியா?" என்று மீண்டும் கேட்டது.

புவனா சலங்கை ஒலியாய் கலகல வென்று சிரித்தாள்

"ஆமா விட்டுட்டேன், அதற்கென்ன இப்போ? என்னைப் பெத்தவங்க எனக்குப் பதினெட்டு வயசாய் இருந்தப்போ ரயில்

**"நான் உன்னைக் கலியாணம் பண்ணிக்க விரும்பிய காரணமே நீ நல்ல வேலையில் இருக்கிறாய்; கை நிறைய சம்பாதிக்கிறாய் என்பதால்தான்!"**

விபத்தொன்றில் இறந்து போனாங்க. அப்புறம்... எனக்கு எல்லாமாய் இருந்து காப்பாத்தியது இந்த வேலை ஒண்ணுதான்." புவனா பெருமூச்சு விட்டாள்.

"அப்போ.. ஏன் வேலையை விட்டே?" ஆனந்த் அவசரமாகக் கேட்டான்.

"இப்போதான் பிரபல கம்பனி மனேஜரைக் கலியாணம் பண்ணிக்கப் போறேனே. இத்தனை வருஷமும் உழைச்சு அலுத்தே போச்சு. ஒண்டியாய் இருந்த இயந்திர வாழ்வு சலிச்சுப் போச்சு. ஒரு மாறுதல் வேண்டாமா? உங்களுக்கு வகை வகையாய் சமைச் சிப்போடணும். நீங்க வேலய விட்டு எப்ப வருவீங்கன்னு வழிமேல விழி வச்சிக் காத்திருக்கணும். 'பசங்களா? உங்க அப்பா வரட்டும், வந்ததும், முதுகில ரெண்டு போடச் சொல்றன்,' என்று என் பிள்ளைச் செல்வங்களை விரட்டணும்". புவனா கற்பனையில் மகிழ்ந்துபோனாள்.

ஆனந்தின் ஆவேசம் அவளை நிலை குலைய வைத்தது. "சீ, எவ்வளவு மட்டம் நீ? இரண்டுபேர் சம்பாதிச்சா வாழ்க்கையில் எவ்வளவு சுகங்களை அனுபவிக்கலாம், எத்தனை வசதிகளை ஆக்கிக் கொள்ளலாம்." அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"ஆமா? அந்த சுகம், நான் தேடும் சுகங்களுக்கு ஈடாகுமா? வசதிக்குறைவுகளை வசதிகளாக்கி வாழவேண்டும். அதுதான் சிறப்பு."

"எதிர்வாதம் பண்ணாதே! நான் உன்னைக் கலியாணம் பண்ணிக்க விரும்பிய காரணமே நீ நல்ல வேலையில் இருக்கிறாய்; கை நிறையச்சம்பாதிக்கிறாய் என்பதுதான்.... புரிகிறதா?"

"அப்போ நீங்க என்னைக் காதலிக்கல்ல; என்வேலைய, என் சம்பளத்த காதலிச்சீங்க; அப்படித்தானே?" புவனாவின் கண்களில் நீர் முட்டியது, ஆனந்த் குழப்பங்களோடு மௌனமாகப் போராடினான். அவனுடைய விரல்கள் மணலை அளைந்து கொண்டிருந்தன. கடல் அலைகள் கரையைத் தொட்டுத் தொட்டு விளையாடுவது இப்போது அவனுக்கு வேடிக்கையாகத் தெரியவில்லை. தொண்டையைச் செருமினான். அந்தக் குளிர்காற்றிலும் அவன் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

"புவனா" அமைதியாக அவன் அழைத்தான், அவள் அவனை ஏறெடுத்துப் பார்த்தாள்.

"தயவுசெய்து நீ ரிசைன் பண்ணின வேலையத் திரும்பப் பெற முயற்சி பண்ணு. அல்லது வேறு வேலைக்கு ட்றை பண்ணு, அது வரைக்கும் நமக்குக் கலியாணமே வேண்டாம். சில்லறை ஆசைகளுக்காக ரூபாய்களை விட்டிடாதே!"

'ஆனந்த் ஒரு மொத்த வியாபாரி' என்று இப்போது புவனாவுக்குப் புரிந்து விட்டது.

அவள் சிரித்தாள், பயங்கரமாகச் சிரித்தாள்,

"நான் இன்னும் வேலைய விடல்ல. சும்மாதான் ஒரு பரீட்சை வச்சேன், நீங்க அதில பத்து மாக்ஸ் கூடவாங்கல. நல்ல வேளை தலையோடு போறது தலைப்பாகையோடு போச்சு. அந்த வகையில் சந்தோஷப்படவேண்டியதுதான்." புவனா எழுந்துவிட்டாள். தன் உடையில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிவிட்டு நடக்கலானாள்.

# மேல் முறையீடு.....

ஜெயமணி

நேரம் மாலை ஐந்து மணி.

கம்பீரமான தோற்றத்தில் சற்றே தோள்களைச் சரித்தவண்ணம் நீண்ட வராந்தா வழியே டொக்டர் மேகராஜன் நிதானமாக நடந்துகொண்டிருந்தார். அருகே உதவியாளர் பாலன். அவரிடம் கேட்கிறார்: "பாலு இன்றைக்கு எத்தனை கிடைச்சுது?" என்று.

"ஒண்ணுதான்."

இழுவையுடன் பதில் வந்தது.

விநாடி கழிந்தது.

"டொக்டர் அந்தப்பார்ட்டியிடமிருந்து ஃபோண் வந்தது. நாளை நிச்சயம் வேணும் என்றார். தருவதாக சொல்லியிருக்கிறேன்."

"கைவசம் ஏதும் இல்லையே? எல்லாம் நேற்றே பாக்பண்ணி அனுப்பியாயிற்றே!"

"சேர், இப்ப நமக்கு கிடைச்சிருக்கிறது ரொம்பவும் ஒத்துப்போறது."

"பார்ட்டி ரொம்பப் பெரிய இடம். ஹெல்த் எப்படி?. இன்ஃபெக்ஷன் ப்ரொப்ளம்...?"

"நோ, நோ, எதுவுமில்லை. நல்ல ஹெல்த்தியான உடம்பு. பிளட்கூட சேம் க்ரூப். பிரச்சனை கிடையாது."

"அப்போ இது ஒண்ணுக்கே சில லகரங்களைப் பெறமுடியும்." புன்னகையுடன் கூறிக்கொண்டு ஒப்பரேஷன் தியேட்டருக்குள் நுழைகிறார்கள்.

அங்கே....

விதி கூட ஒருகணம் விக்கித்து நின்றது. டொக்டர் மேகராஜனுக்கு எல்லாமே ஒழுங்காக, தயாரானபின்னர்தான் தெரியப்படுத்த வேண்டும். வந்தோம், வேலையை முடித்தோம் என்று வெளியேறிவிட வேண்டும்.

அதன் பிரகாரம், கட்டிலில் வெள்ளைத் துணியினால் முகத்தை மூடி, மயக்க நிலையில், உதவிக்கு நிற்கும் நேர்ஸ், அஸிஸ்டன்ட் டொக்டர் உட்பட யாவும் தயாராக இருந்தது.

என்றுமே ஒப்பரேஷன்போது முகத்தைப் பார்க்க சம்மதிப்பதில்லை டொக்டர் மேகராஜன். அதனால் தான் விதிகூட விக்கித்து நின்றது: பார்த்திருந்தால் என...

சில நிமிடங்களில் அறுவைச்சிகிச்சை முடிந்தது: வோஷ்பேஸனில் கைகளை சுத்தமாக கழுவினார்.– –நேர்ஸ் தந்த வெள்ளைத் துண்டில் அழுந்தத் துடைத்தவர், திருப்தியான புன்னகையுடன் வாசலை நோக்கித் திரும்பினார். இரண்டடி தான் நடந்திருப்பார். டெலிஃபோண் அலறியது.

"டொக்டர், ஃபோண் உங்களுக்கு."

பாலன் அழைத்தார்.

"ஹலோ, யார் பேசறது?"

"யார் என்பதை அப்புறமாகத் தெரிந்து கொள்ளலாம் சேர். இப்போ, உங்கள் ஒப்பரேஷன் வெற்றி என நினைக்கிறேன். சரிதானே?"

மறுமுனையில் ஏகத்தாளமான குரல் கேட்டது.

"ஹொஸ்ப்பிட்டலிலை ஒப்பரேஷன் பண்ணாமல், கசாப்புக்கடையிலா பண்ணுவது?."

"கசாப்புக்கடை வேலையை ஹொஸ்ப்பிட்டலிலை செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதுதான் என் வேலை."

"ஓ... நீயா.. ஏதோவொரு புனைபெயரில், பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுக்கிறேன் பேர்வழி, எனக் கூறிக்கொண்டு உன் கற்பனைக்கெட்டிய வரை கயிறு திரிக்கும் பரதேசி. வைடா ஃபோணை."

"கத்தியை வைக்க அவசரப்பட்டது போல ஃபோணை வைக்க அவசரப் படாதீங்க சேர். வைக்க முந்தி, முகத்தை மூடியிருந்த துணியைமட்டும் கொஞ்சம் விலக்கிப்பார்த்திருந்தால்...."

"என்ன... என்ன... சொல்கிறாய்?"

"ஆமாம் டொக்டர், எத்தனையோ பேருடைய கண்ணீருக்கு உங்கள் பணம், உயர் அதிகாரிகளின் தலையீடு அணைபோட, உறுப்புக்கள் கடத்தும் உங்களது முதலீடு இலாபகரமாக இயங்கியது. ஆனால் மேல் முறையீட்டுக்கு மனுப்போட்டவர்களை யாரால் தடுக்கமுடியும்? தெய்வம் நின்றே



அறுத்துவிட்டது. பாவம் உங்கள் உதவியாளர். கடத்தி, தயார்ப்படுத்தி அறுத்தெடுக்க வைத்தது உங்கள் மகனுடைய கிட்னி என்பது தெரியாது அவருக்கு."

நடுக்கமாகத்திரும்பினார் டொக்டர் மேகராஜன். ஃபான் காற்றில் துணி படபடத்து விலக அந்த.. அந்த முகம், புருவ முடிச்சு...ஓ..

எத்தனையோ பேருக்கு இதயம் அனுப்பிய டொக்டர் மேகராஜனுடைய இதயம், சுக்கலாக வெடித்து இரத்தத்தை வாயாலும் மூக்காலும் பீச்சியடிக்க, சுவரோடு சாய்ந்து வழுக்கி, நிலத்தில் சரிய, இரத்தம் கட்டில்வரை ஓடி– – சிந்திக் கிடந்த துளிகளோடு சங்கமமாகியது.

www.padippakam.com



# கிளி சொன்ன கதை

தருவது ரசிகன்

இலக்கிய நயம்

கிளியோடு என்னடி கொஞ்சல்?
களிகொள்ளும் பருவத்தாள் அசைந்தாள்.
குறை சொல்லும் தாயின் முகம் கண்டாள்.
உறைவிட்டுக் கிளம்பும் வாளன்றோ
விரைவாக பாய்ந்துவரும் அம்மாவின் கோபம்!

விலகிப் போனாள் கிளியைவிட்டு.
'பூங்குழலி' என்று அழைத்தது கிளி.
பேசும் கிளி; பொல்லாத குறும்புக்கிளி!
வீசும் வார்த்தைகளை பிடித்துவைத்து
காலம் தப்பாமல் திருப்பித் தரும்!

போருக்கு சென்றுவிடும் கண்ணாளன்
மாருக்கு நேர்வரும் பகை வென்று,
தேருக்குள் அமர்ந்து திரும்பும்வரை
யாருண்டு அவளுக்கு கிளி தவிர?

பள்ளியறையில் கிளிக்கும் ஒரு இடம்.
கட்டிலறை யுத்தம் எல்லாம்
பாவிக் கிளி தப்பாமல் பார்த்திருக்கும்.
கட்டிமுத்த 'இச்' ஒலியை
தட்டிவிடாமல் பிடித்து வைத்திருக்கும்.

ஒருடலும் ஈருயிருமாய்
மஞ்சத்தில் தஞ்சமாகி
மயக்கத்தில் உதிருகின்ற வார்த்தைகளை
மாயக் கிளி மனதில் வைத்திருக்கும்.

களி மயக்கத்தில் கிடக்கையிலே
கிளி இருப்பதோ நினைவு வரும்?
விழி செருகும், புலன் சொக்கும்
கிளியோ கண்களுக்குத் தெரியும்?

யோக கலைபோல போகம் முடிந்துவிட
யாகத்தீயாய் படர்ந்தவெப்பம் தணிந்துவிட
சாமக் கோழியும் கூவத் தொடங்கிவிடும்.
காலைவரை தூங்கிக் கண்விரிக்க
காலடிக்கு நேர் மேலே கிளி காத்திருக்கும்.

'அத்தான், அத்தான்' என்று அழைக்கும்
அவள் வியந்து நிமிர்ந்து பார்க்க,
'செத்தாலும் உன் உடலில் சாயவேண்டும்
முத்தே, என் சொத்தே' என்றெல்லாம்
அவன் பிதற்றல் நினைவு வைத்து
கிளி மீண்டும் ஒப்புவிக்கும்!

'விவஸ்தையே இல்லாத கிளி'
வெறுப்புப் போல வெட்கம் வரும்.
விட்டுக் கொடுக்காமல் கிளி,
"போதும் அத்தான் விடுங்கள்!"
என்று ஒரு போடு போடும்!

அடிப்பதுபோல் எழுவாள் கிள்ளை.
"அம்மாடி" என்று அவள்போல
சிணுங்கலாய் பேசிக் காட்டும்.
உதட்டு சிறையுடைத்து சிரிப்பு வரும்
அதட்டுவாள் கிளியை "சும்மாயிரு".

"பேசட்டுமேன்" என்று குரல் வரும்.
கட்டிலில் கிடந்து ரசித்தவன்
கொட்டுவான் பெரு நகைப்பை!

விழித்துத்தான் இருந்தானோ இதுவரை?
வாயைப் பொத்திக் கொண்டாள் குழலி.



கொழுப்புத்தான் பாரேன் கிளிக்கு.
வெளுத்துத்தான் போச்சுச் சாயம்!
என்றான்- இடியென நகைத்தான்!

காட்டிக் கொடுக்கும் கிளியே,
வாட்டிப் போடுகிறேன் பசியில்!
ஊட்டி வளர்த்தவனுக்கே துரோகமா?
நீட்டிக் கொண்டாள் கோபம்போல் முகத்தை!

போருக்கு அவன் போன பின்னர்
'பூங்குழலி' என்றழைத்து அவன்போன்றே
குரல் நீட்டி மாயம் காட்டும்.
கோபம் வராது, கொவ்வைப் பழம் கொடுப்பாள்!
'இச்' என்று சத்தம் காட்டி
வம்புக்கு இழுக்கும் குறும்புக்கிளி!

கட்டிலறையில் தனித்திருக்கும் வேளை
கிளிப் பேச்சை கேட்பதிலே களிப்பு!

போர்முனை கண்டுவிட்டு திரும்பியவன்
ஏர் முனையில் பூட்டிய காளையைபோல
தேர்விட்டு குதித்து வந்தான்.
'யார் என்று கேட்காதே நான்தான்
பார் நிலவே கதவு திற' என்றான்.

ஏங்கவைத்து பார்த்தீரே எத்தனை நாள்?
காக்கவைத்துப் பார்ப்போமே கதவடியில்!
தூங்கியது போலிருந்தாள் பூங்குழலி.
வாங்கியது ஏமாற்றம் அவன் நெஞ்சம்!

சந்தனம் பூசிய தனமாட
நந்தன விழிகள் சதிராட
சந்தன மலர்கள் கூந்தலில் ஆட
கண்ட வண்டுகள் களிப்பினில் ஆட
எந்தனை நீயும் கலந்திங்கு ஆட
சுந்தரப் பெண்ணே தாழ் திறவாய்!
விண்ணப்பம் போட்டான்!

திருக்கதவம் மட்டும் திறக்கவேயில்லை.
"உலையினில் இட்ட இரும்பாயானேன்.
கலையின் உருவே கதவம் திறவாய்!"
உள்ளேயிருந்து பதிலே இல்லை.

போர் முனை உடலை புரட்டி எடுத்தது
சீராட்ட உந்தன் உதவி தேவை
சிரசுகள் உருளும் களம் இனிப்போதும்
சரச சுகம் தரும் களமே வேண்டும்
சந்தன மயிலே நெஞ்சம் இரங்கு!
எத்தனை சொல்லியும் புண்ணியம் இல்லை.

என்ன செய்யலாம்?
எப்படி என்னவள்
இதயம் கனியச் செய்யலாம்?

மறவ குணத்தான்
சிந்தனை தீட்டினான்.
உதித்தது யோசனை!

நெஞ்சிலாடும் நிலவேகேள்!
நினைவு மீட்டு!
நின் செவியை நீட்டு!

களித்தோம், கலந்தோம்,
இரவினிடை இன்பத்தில் குளித்தோம்!
உயிரினிடை உயிராய் கலந்தோம்.
ஒருயிராய் சுகத்தில் மிதந்தோம்!

இதழ்கள் ஒய்வெடுத்துக் கொண்ட
இடைவெளியில் நமக்குள் நாமே
ஈடிணையற்ற மயக்க மொழியால்
இதயம் நனையும்வரை
என்னென்ன பேசினோம்?

காலையில் நாம் கண்விழிக்க
கோலக்கிளியன்றோ
குத்திக் காட்டியது!
கொட்டிக் குலுங்கியது!
வாய் பொத்தி நின்றவளே
வா இந்த கதவைத் திற!

உள்ளே சலங்கையாய் சிரிப்பொலி.
திருக்கதவம் தாழ் விலகித் திறந்தது.

கிளியின் கதை சொல்லி
திருக்கதவும் திறக்க
மனைவியிடம் போடும் விண்ணப்பம்
பழம்தமிழ் இலக்கியமாம்
கலிங்கத்துப் பரணியில்
ஒரு பாடலாக வருகிறது.

நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளி உரைப்ப
வாயைப் புதைக்கும் மட நல்லீர்!
மணிப்பொற் கபாடம் திறமினோ!

கலிங்கத்துப் பரணி- பாடல்67.
எழுதியவர்-சயங்கொண்டார்.

# ஒலிம்பிக் குண்டு வெடிப்பு குரலை வைத்து ஆளை தேடுகிறார்கள்

அட்லாண்டாவில் ஒலிம்பிக் போட்டி ஆரம்ப விழா நிகழ்ச்சிக்கு முன்னர் வெடி குண்டுப்புரளி கிளப்பப்பட்டது. பாதுகாப்பு அதிகாரிகள் சோதனை செய்து பார்த்தனர். வீண் புரளி எனக்கூறினார்கள். பின்னர் 27/7/96 சனிக்கிழமை அதிகாலை வெடித்த குண்டினால் இருவர் கொல்லப்பட்டும் 104 பேர் காயமடைந்தும் உள்ளனர். இக் குண்டு ஒலிம்பிக் பூங்காவில் வெடித்தது. இக்குண்டு வெடிப்பிற்கு 15 நிமிடத்திற்கு முன்னர் ஒரு நபர், அங்குள்ள தொலை பேசி ஒன்றிலிருந்து ஒலிம்பிக் பூங்காவில் குண்டு இருப்பதாக அறிவித்திருக்கிறார். இதுவும் ஒரு புரளி என பாதுகாப்பு அதிகாரிகள் அசட்டையாக இருந்துவிட்டார்கள்.

ஆனால் தொலைபேசி அழைப்பு விடுத்தவர் அமெரிக்க அவசர சேவை இலக்கமான 911 இலக்கத்தை சுழற்றியே குண்டுச் செய்தியை கூறியிருக்கிறார். இப்படியான அவசர அழைப்பு நம்பரை அழைப்பவர்களின் குரல்கள் உடனடியாகப் புதிவு செய்யப்படும். அடுத்ததாக இத் தொலைபேசி அழைப்பு எந்தத் தொலைபேசி இலக்கத்திலிருந்து (அதாவது எங்கிருந்து, அவசர அழைப்பு விடுக்கிறார் என்பதையும் அறிந்து கொள்ளலாம். குண்டு வெடிப்பு நடந்த இடத்திற்கு அருகில் தான் இருந்து குண்டுச் செய்தியை கூறியிருக்கிறார். அடுத்தது இவரது குரலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இவருடைய ஆங்கில உச்சரிப்பு வெள்ளையினத்தவரின் உச்சரிப்பு என புலனாய்வுத்துறையினர் கூறுகிறார்கள். ஆனால் சிலவேளைகளில் காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதையாகவும் இருக்கலாம் என்பதுபோல இவர் விளையாட்டுக்காக கூறியிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. கடந்த வருடம் லுக்லோஹாமா நகரத்தில் நடந்த குண்டு வெடிப்புக்கு வெள்ளையினத் தீவிரவாதிகள் தான் காரணமாயிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இதைவிட இக்குண்டு வெடிப்பு நடந்து 8 மணித்தியால இடைவெளிக்குள் மியாமி விமானநிலையத்தில் பயணிகளுடன் விமானத்தை கடத்த முயன்ற முஸ்லிம் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

நியூயோர்க்கில் விழுந்த விமானமான TWA 800 விமானமும் குண்டுவெடிப்பால் தான் நொறுங்கியிருக்கிறது என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதில் 230 பயணிகள் கொல்லப்பட்டிருகின்றனர்.

ஒலிம்பிக் வரலாற்றில் 1972ம் ஆண்டு ஜேர்மனி–மூனிச்சில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் பாலஸ்தீனிய தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். தற்போது 1996 அட்லாண்டாவில் குண்டு வெடிப்புச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. இக்குண்டுவெடிப்பை அமெரிக்க தொலைக்காட்சியின் சி.என்.என். நேரடியாக படம் பிடித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

Atlanta 1996

ஒரு முக்கிய குறிப்பு: அட்லாண்டாவை வன்முறை நகரம் என்றும் அழைப்பதுண்டு. அது இப்போது மீண்டும் உறுதி செய்யப்பட்டு விட்டது. அட்லாண்டாவில் ஒலிம்பிக்கை முன்னிட்டு இராணுவத்தினரை குவித்து வைத்து, பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஒரு குறைவுமில்லை என்று அறிவித்த அமெரிக்காவுக்கு பயங்கரமான அதிர்ச்சி.

குண்டுவெடிப்புக்களை பாதுகாப்பு ஏற்பாடுகளால் மட்டும் தடுக்கமுடியாது என்பதற்கு அட்லாண்டாவும் ஒரு உதாரணம்.

# சிந்தியா பதில்கள்

**★ டியர் சிந்தியா! நீங்கள் பிறந்ததற்காக வாழ்கிறீர்களா? அல்லது வாழ்வதற்காக பிறந்தீர்களா?**

ஆர். ஜெஸ்லின், பாலாங்கோட்டை, இறக்குவானை.

முன்னதில் ஒரு சிறு திருத்தம்-பிறந்ததால் வாழ்கிறேன். பின்னது ஓகே.

**★ எண்ணிய எண்ணம் நிறைவேற தூய உள்ளம் வேண்டுமா? தொண்டுள்ளம் வேண்டுமா?**

எம்.பி. சுப்பிரமணியம், எல்கடுவ.

தூய உள்ளத்தில் தொண்டு உணர்வும் கலந்து இருக்கும். எண்ணிய எண்ணம் நிறைவேற வெறுமனே உள்ளம் மட்டும் இருந்தால் போதாது; உறுதி, உற்சாகம், உத்வேகம் போன்ற உள்ளடக்கங்களும் நிரப்பிக்கொள்ளவேண்டும்.

**★ இங்கிலாந்தில் பாகிஸ்தான் அணியின் சுற்றுப் பயணம்; இந்திய அணியின் சுற்றுப் பயணம்-ஒப்பிடுக?**

வி. ரவிகரன், கொழும்பு-06.

இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் வெற்றி தோல்வி இல்லாமல் முடிந்தாலே போதும் என்று விளையாடியது. கங்குலி, டெண்டுல்கர் புண்ணியத்தில் தப்பினோம், பிழைத்தோம் என்று திரும்பியது.

இந்திய அணியில் ஒரு சிலரைத்தவிர பலர் இங்கிலாந்தின் செலவில் சுற்றிப்பார்த்து விட்டு திரும்ப நினைத்தார்கள். வெற்றியைப் பார்க்கும் அபிப்பிராயமே இருக்கவில்லை.

பாகிஸ்தான் அணியில் அநேகமாக அனைவருமே வெற்றி பெறவேண்டும் என்று விளையாடுகிறார்கள். முதல் டெஸ்ட் போட்டியில்-ஒருநாள் போட்டியில் ஆடுவதுபோல பந்துகளை துவைத்தெடுத்தார்கள். எடுத்த எடுப்பிலேயே இங்கிலாந்தை அதன் கோட்டையிலேயே உண்டு இல்லையென்று ஆக்கிவிட்டார்கள்.

**★ டியர் சிந்தியா! வகை தொகையற்ற கைதுகளால் பலன் உண்டா சொல்லுங்கள்?**

சி. மகேஸ்வரன், கொழும்பு-11.

ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்:

ஒருவனது மோதிரம் காணாமல் போய் விட்டது. உடனே பொலிஸில் புகார் கொடுத்தான். அடுத்த நாளே அவனது காற்சட்டைப் பையில் மோதிரம் இருந்து கண்டெடுத்து விட்டான். 'சேச்சே அநியாயமாக புகார் கொடுத்துவிட்டோமே' என்று நினைத்து பொலிஸ் நிலையத்திற்கு ஓடினான். விஷயத்தை சொல்லி மன்னிப்புக் கேட்டு, புகாரை வாபஸ் பெறுவதாகவும் சொன்னான்.

பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு வந்தது பாருங்கள் கெட்டகோபம். அவனை நோக்கி சத்தம் போட்டார்.

"என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய் மனதில்? நாங்கள் ஏற்கனவே ஒரு டஜன் குற்றவாளிகளைப் பிடித்து வைத்திருக்கிறோம். அதில் ஆறுபேர் குற்றத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்!"

**★ பெண்கள் ஆண்களைவிட தைரியசாலிகளாக இருக்கிறார்களா சிந்தியா?**

கே.எம். இக்பால், அ/நிக்கவெவ.

என்ன இக்பால், இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? இலங்கை போன்ற நாட்டிற்கு ஒரு பெண் ஜனாதிபதியாக இருப்பதே மகா தைரியம்தானே!

**★ டியர் சிந்தியா! கற்பனைக்கும், கனவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

எம். ஆர். எம். பைறூஸ், தித்தவெல்கால.

கண்களை மூடிக்கொண்டால்தான் கனவு சுகம். கண்களைத் திறந்திருந்தால்தான் கற்பனை செய்வது இதம்.

**★ டியர் சிந்தியா! குழந்தைகள் முன்பு சண்டை போடும் பெற்றோர்கள் அவர்கள் மனதில் தோன்றும் பயத்தையும், விரக்தியையும் நினைத்துப் பார்ப்பதில்லையே! நீங்கள் ஒரு யோசனை சொன்னால் என்ன?**

செல்வி பிலோமினா அல்பிறட், நீர்கொழும்பு.

சண்டைமட்டுமல்ல; வேறொன்றும் கூடாது.

ஒரு குழந்தை தன் தந்தையிடம் கேட்டது: "அப்பா! உங்களுக்கு இருட்டைக் கண்டால் பயமா?" "இல்லையே! யார் சொன்னார்கள்?" என்றார் அப்பா. "யாரும் சொல்ல வில்லை. பின்னே நீங்கள் ஏன் அம்மாவின் படுக்கையில் ஏறி அவளுடைய போர்வைக் குள் புகுந்து கொள்கிறீர்கள்?" என்று கேட்டது குழந்தை.

# கனவு காண்பது நல்லதா?

கிட்டாதாயின் வெட்டென மற. டேக் இட் ஈஸி பொலிஸி என்பது அதுதானுங்கோ.

**★ கனவு காண்பது மனதுக்கு நல்லது என்றும் சொல்கிறார்கள். கனவில் மூழ்கி அழியாதே என்றும் சொல்கிறார்கள். எதை நம்புவது?**

எம். புவனேஷ், பண்டாரவளை.

அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு. கனவுக்கும் அது பொருந்தும். கனவே வாழ்க்கையானால் பைத்தியம்தான் மிஞ்சும்.

'ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கு மிகப் பெரிய பைத்தியக்கார விடுதியைப் பார்வையிடும் ஆசை வந்தது. விடுதி நிர்வாகி ஜனாதிபதியை ஒரு அறைக்குக் கூட்டிச் சென்றார். "இந்த அறையில் இருப்பவர்களுக்கு கார் பைத்தியம் பிடித்திருக்கிறது." என்றார் நிர்வாகி.

அறைக்குள் யாரையும் காணவில்லை. ஜனாதிபதிக்கு ஆச்சரியம். "எங்கே ஒருவரையும் காணவில்லையே!" என்று கேட்டார்?

நிர்வாகி சொன்னார், "அவர்கள் எல்லோரும் அவரவர் படுக்கைக்கு அடியில் படுத்துக்கொண்டு 'காரைப் பழுதுபார்க்கிறார்கள்.'"

**★ நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வில்லனாக நடித்த படங்கள் எவை?**

ஏ. பெருமாள், நுவரெலியா.

வில்லத்தனமான கதாநாயகனாக வெளுத்துவாங்கிய படங்களில் சில: திரும்பிப்பார், உத்தம புத்திரன், கூண்டுக்கிளி, துளிவிஷம், ரங்கோன் ராதா. மேலதிகமாக ஒரு தகவல். பாடல்களே இல்லாமல் சிவாஜி நடித்த படம் 'அந்தநாள்.'

**★ டியர் சிந்தியா! முரசில் ஈழத்து ராஜேந்திர குமாரையோ, பட்டுக்கோட்டை பிரபாகரையோ உருவாக்கும் எண்ணம் உண்டா?**

நா. ஆனந்தன், கண்டி.

மன்னிக்கவும்! தங்களுக்கு அப்படியொரு வாய்ப்பை வழங்கமுடியாமைக்கு வருந்துகிறோம்.



'அந்த நாள்' பாடல்கள் கிடையாது

**★ இலங்கை மக்கள் அனைவருக்கும் நல்லதொரு செய்தியாக இருந்தால் அது எதுவாக இருக்கும்?**

சாகுல் ஹமீட் நியாஸ், பெரிய கிண்ணியா-06.

விலைவாசியில் பயங்கர வீழ்ச்சி. மின்சார வெட்டு என்ற சமாச்சாரமே இனிக்கிடையாது. பாண் மூன்று ரூபா, பருப்பும் மூன்று ரூபா. பாலும் மூன்றே மூன்றுரூபா இப்படியான வகையறாக்களில் ஒன்றாக இருக்கலாம். 'சமாதானம் வந்துவிட்டது' என்பது நல்ல செய்தியாக இருந்தாலும் மக்கள் அதனை நம்பமாட்டார்கள்.

**★ நாம் மிகவும் நேசித்த ஒருவர் நம்மைப் புறக்கணித்தால் என்ன செய்யலாம்?**

எச்.எம்.பௌமி, மரதன் கடவல.

**★ சிந்தியா! கம்ப இராமாயணத்திற்கும், வால்மீகி இராமாயணத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?**

மாயாண்டிதேவி, சின்னசெல்வகந்த.

படைத்தவர்களின் கற்பனை வளத்தில் தான் வேறுபாடு. வால்மீகியை கம்பன் 'ஓவர் டேக்' பண்ணிவிட்டார் என்பது என் அபிப்பிராயம்.

**★ சிந்தியா! நடிகர் ரஜினிகாந்தும் ரேவதியும் இணைந்து நடித்த படம் எது?**


எஸ்.எம். மெலோசா, கொழும்பு-8.

'கைகொடுக்கும் கை.' கடந்த தேர்தலில் போட்டியிட்ட ரேவதிக்கு ரஜினி கைகொடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. கை கொடுக்காத கை.


படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 42

## துயரக்கடலில் தத்தளித்த இராமபிரான்



இராமபிரான் தன் பாதங்களில் வீழ்ந்து கிடந்த இலக்குவனைத் தூக்கி நிறுத்தி, அவனுடைய கண்களிலிருந்து பெருக்கெடுத்தோடும் கண்ணீரைத் தன் விரல்களால் துடைத்துவிட்டார். அதே நேரத்தில் இராமருடைய கண்களும் கண்ணீரை உகுத்தன. அதனை அவதானிக்க இலக்குவனால் முடியவில்லை. காரணம், இலக்குவனுக்கு தனது அண்ணன் இராமருடைய முகத்தை நேருக்கு நேர் நிமிர்ந்து பார்த்துப்பழக்கமில்லை. அண்ணனின் முகத்தை நேருக்கு நேர்பார்ப்பது பண்பல்ல என்பது இலக்குவனின் கருத்து. இருப்பினும் அண்ணன் ஆழ்ந்த துயரக்கடலில் மூழ்கியுள்ளார் என்பதை அறியாதவனல்ல.

"தம்பி! வந்த அந்தப் பொன்மான் பொய்யான மான் என்று எச்சரித்தாய். அதனைப் பொருட்படுத்தாமல்- உன் சொல்லுக்கு மதிப்பளிக்காமல் விட்டுவிட்டமைக்கு ஏற்ற தண்டனை கிடைத்துவிட்டது. ஜானகிக்கு என்ன நேர்ந்திருக்குமோ தெரியவில்லையே! இங்கு நின்று வீண்பொழுது போக்காமல் பர்ணசாலை சென்று அங்கு என்ன நேர்ந்தது என்பதைப் பார்ப்போம் வா!" இவ்வாறு இராமர் கூறியதும் இருவரும் வில்லிலிருந்து விடுபட்ட பாணம் போல் பர்ணசாலையை நோக்கி விரைந்தனர்.

அங்கே பர்ணசாலையைக் காணவில்லை. ஒரு பெரும் பள்ளம் தான் காணப்பட்டது. அயலிலிருந்த பூஞ்செடி கொடிகளெல்லாம் வாடிவதங்கிக் கிடந்தன. எங்கும் பயங்கர அமைதி சூழ்ந்து சோகமே உருவாகிக் கிடந்தன. இக்காட்சியைக் கண்ட இராமர்- உடலை விட்டு வெளியேறிய உயிர் மீண்டும் உடலை வந்தடைய விரும்பும் போது அவ்வுடலே அங்கில்லாதது கண்டு ஏற்படும் துடிப்பைப் போன்று துடிதுடித்தார்.

தனது முழுச் செல்வத்தையும் புதையலாக நிலத்தில் புதைத்துவிட்டுச் சென்ற ஒருவன் திரும்பி வந்து பார்க்கும்போது அப்புதையல் சூறையாடப்பட்டிருப்பது கண்டால் அவன் எப்பாடு படுவானோ அவ்வாறான உணர்வினைப் பெற்றார் இராமர். இராமரின் துடிப்பினைக் கண்ட இலக்குவன் தன்னையே நொந்து கொண்டான். சீதையை எத்துன்பமும் அணுகாமல் பாதுகாக்க வேண்டிய கடமைப்பாடு தனக்கே அதிகமாக இருக்கிறது என்று உணர்ந்து தன்மீதே வெறுப்புற்றான் இலக்குமணன். தனக்குரிய கடமையிலிருந்து தவறிவிட்டமையினால் பெரும் துன்பமடைந்தான்.

### அவதார புருடருக்கு அல்லலேன்?

திருமாலே இராமாவதாரம் எடுத்து மனிதனாகப் பிறந்தாலும் அப்பரம்பொருளின் அம்சம் ஏன் துன்ப துயரங்களில் சிக்கிக் கலங்கவேண்டும்? சாதாரண மனிதர்களுக்குத் துன்பம் வந்தால் அத்துன்பத்திலிருந்து விடுபட வேண்டும் என்று தெய்வங்களைப் பிரார்த்திக்கின்றோம். துன்பம் நீங்கியதும் அந்தப் பரம் பொருளின் கிருபையினால் தான் துன்பம் நீங்கப்பெற்றோம் என்று இறைவனுக்கு நன்றி கூறுகிறோம். பிரார்த்தனையின் போது வைத்த நேர்த்திக் கடன்களை முழுமனதோடு நிறைவேற்றுகிறோம். இங்கு சர்வ வல்லமையுள்ள இறைவனின் அவதாரமே தன்னுடைய துணையைப் பிரிந்து துயரக் கடலில் மூழ்கித் திக்கு முக்காடுவதைக் காண்கிறோம். இது முரண்பாடாயிற்றே என்று அன்று முதல் இன்றுவரை விவாதிக்கப்பட்டு வரும் முடிவில்லாத- விடை தெரியாத ஒரு வினாவாகும்.

பரம்பொருளே மனித உருவில் ஒரு தாய்க்கு மகனாக மண்ணில் வந்து பிறக்கும் போது, மனிதனுக்குரிய ஆசாபாசங்களுக்குட்பட்டு, அவற்றால் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கு இடம் கொடுத்தேயாக வேண்டும். வால்மீகி மாமுனிவரும் கவிச்சக்கரவர்த்தி கம்பரும் துளசிதாசரும் மற்றும் இராம காதையை பல்வேறு மொழிகளில் எழுதிய பெருமக்களும் மேற்கண்ட விளக்கத்தையே தருகின்றனர். கண்ணபரமாத்மா உபதேசித்த கீதையும் இதே கருத்தைத் தான் வற்புறுத்துகிறது.

இன்று உலகின் கண் பரவியுள்ள சகல மதங்களின் வழிகாட்டிகள், அவதார புருடர்கள், இறை தூதர்கள் அனைவரும் இந்நிய திக்கு விதி விலக்கானவர்களல்ல என்று கூறிக்கொண்டு, இராமரின் துயரங்களில் நாமும் பங்கேற்போம்- வாருங்கள்.

கம்பர் பெருமான் இராமரின் துயரத்தை வர்ணிக்கும்போது, அவர் துயரத்தில் திக்கு முக்காடிச் சுழன்றவேளையில், "பூமி சுழன்றது; மலைகளெல்லாம் சுழன்றன; பேரறிவாளர்களின் சிந்தனைகள் சுழன்றன; அலைகளை வீசும் ஏழு கடல்களும் சுழன்றன; வானம் சுழன்றது; வேதங்கள் சுழன்றன; பிரம்ம தேவனின் கண்கள் சுழன்றன மற்றும் சூரிய சந்திரர்களும் சுழன்றன" என்று வர்ணிக்கிறார்.

இத்துடன் மட்டுமல்லாமல் இராமரின் துயரம் உச்சக்கட்டத்தை அடைந்தால் அதன் விளைவு என்னாகுமோ என்று புலவர் ஒரு பெரும் கேள்விக்குறியை வரைகிறார்.

அறத்தைச் சீறும் கொல்? அருளையே
சீறும் கொல்? அமரர்
திறத்தைச் சீறும் கொல்? முனிவரைச்
சீறும் கொல்? தீயோர்
மறத்தைச் சீறும் கொல்? என்கொலோ
முடிவு? என்று மறையின்
திறத்தைச் சீறும் கொல்
நெடுந்தகையோன்? என நடுங்கா....

(ஆரணிய காண்டம்-3476)

பொருள்:

நெடுந்தகையோனான (சீரிய பண்புகளையுடைய) இராமன், அறத்தின் மீது கோபம் கொள்வானோ; கருணைப் பண்பின் மீது கோபம் கொள்வானோ; சீதையைக் காப்பாற்றுவதற்கு வக்கில்லாமல் போன தேவர்கள் மீதோ அல்லது செயலற்றிருந்து விட்ட முனிவர்கள் மீதோ கோபிப்பானோ; அரக்கர்கள் செய்த கொடுமைகளுக்காக அவர்கள் மீது கோபப்படுவானோ; இத்தகைய தீமைக்கு இடம் தந்த வேதங்கள் மீது தன் கோபத்தைத் திருப்புவானோ என்று இராமரின் கோபம் எவரைச் சாடப் போகிறதோ என்ற ஐயம் எங்கும் பரந்து, பெரும் பயப்பிராந்தியை ஏற்படுத்தியது.

X⊂⊃•◆X

கோபமும் துக்கமும் ஒருவரிடம் ஒன்றிணையுமானால் அத்தகையவர் பித்துப் பிடித்தவர் போலாவார். இராமரும் ஏறத்தாழ அந்நிலையை அடைந்திருந்தார். மரஞ்செடி கொடிகள் எல்லாவற்றிடமும் சென்று சீதையைக் கண்டீர்களா என்று வினவினார். பறவைகள், மிருகங்கள் ஆகிவற்றிடமும் வினவினார். இக்காட்சிகளைக் கண்டதும் இலக்குவன் மேலும் கலவரமடைந்தான்.

### தரையில் கிடந்த தடயங்கள்

"அண்ணா! அண்ணி எங்கே சென்றார்; யார் கடத்திச் சென்றார்கள் என்பதனை அறிய இக்கானகம் எங்கணும் சென்று தேடிப்பார்ப்போம். கலக்கத்தை விடுத்து எழுந்திருங்கள்," என்று கூறிய இலக்குவனின் கண்களில் சில பொருட்கள் தென்பட்டன. காவி உடை, கமண்டலம், உருத்திராக்கம் போன்ற சிவசின்னங்கள் சிதறிக்கிடந்தன. இவற்றை இராமரிடம் காண்பித்து, "அண்ணா அதோ அவற்றைப் பாருங்கள்! சன்னியாசி வேடமிட்ட எவனோதான் அண்ணியை பர்ணசாலையுடன் பெயர்த்தெடுத்துச் சென்றிருக்கிறான். அவன் புஜபல பராக்கிரமம் கொண்டவனாகத்தானிருக்க வேண்டும். அரக்கர் பலரை நாம் அழித்தமையினால் பழி தீர்க்கும் எண்ணம் கொண்ட அரக்கன் ஒருவனின் வேலையாகத்தான் இருக்க வேண்டும்," என்று கூறினான். இருவருமாக அப்பொருட்களைப் பார்வையிடும் போது, தேர்ச்சில்லுகளின் தடம் நிலத்தில் பதிந்திருப்பதைக் கண்டார்கள். அத்தடத்தைப் பின் தொடர்ந்து சற்றுத் தூரம் சென்றதும் தடம் மறைந்து விட்டது.

இதனால் அத்தேர் நிலத்தில் சற்றுத் தூரம் ஓடிச்சென்று மேலே எழுந்து வான வீதியில் சென்றிருக்க வேண்டும் என்றும் உணர்ந்தனர்.

தடங்கள் சென்ற வழி தெற்கு நோக்கி இருந்தமையினால் அத்திசையிலேயே சீதை அபகரித்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். இதனால் இராமர் மேலும் கலக்கமடைந்தார். "தம்பி! சீதையை இனி நாம் காணப்போவதில்லை. ஜானகி இல்லாமல் நான் அயோத்திமாநகர் திரும்பப்போவதுமில்லை. நான் இங்கேயே தங்கி எனது எஞ்சிய காலத்தைப் போக்குவேன். நீ உடனடியாகச் சென்று பரதனிடம் நடந்தவற்றைக் கூறு. தவ வாழ்க்கையை விடுத்து அயோத்தி அரியணையில் அமர்ந்து முடிசூட்டி ஆட்சி செலுத்தச் சொல். நான் என் மனைவியையே காப்பாற்றத் தெரியாதவன்; ஒரு பெரும் சாம்ராஜ்ஜியத்தை என்னால் எப்படிக் கட்டிக்காக்க முடியும்? சீதை எங்கே என்று என் அன்னையர் கேட்டால் என்ன பதில் சொல்வேன்? ஜானகி எங்கே என்று ஜனக மாமன்னர் கேட்டால் என்ன சொல்வேன்?" இவ்வாறு மேலும் துயரத்துடன், சிறுகுழந்தை போல் இராமர் தேம்பி அழலானார்.

### ஜடாயுவைக் கண்டனர்

இலக்குவன் அண்ணனுக்கு பலவாறான சமாதானங்களையும் கூறி அவரை அழைத்துக்கொண்டு தெற்கே நடந்து சென்றான். இவர்கள் சென்ற வழியில் அரசர்கள் அணியும் பலவகை அணிமணிகள் சிதறிக்கிடந்தன. ஒரு புறத்தே பெரிய அம்பறாத்தூணிகள் கிடந்தன. மற்றொரு புறத்தில் மிகப்பிரமாண்டமானதொரு வில் உடைந்து கிடந்தது.

இவற்றையெல்லாம் கண்டதும் சீதையை அபகரித்துச் சென்றவன் எவனோ அவனுடன், அவளை விடுவிக்கப் பெரும்போர் ஒன்று நடந்திருக்கிறது என்ற எண்ணம் ஏற்பட்டது. அத்தகைய போரில் குதித்த பெருமைக்குரியவர் எவராக இருக்கும் என்று எண்ணியபோது ஒரு பெரிய பறவையின் இறக்கைகள் அப்பகுதி முழுவதும் பரந்து விழுந்து கிடப்பதைக் கண்டார்கள். தங்கள் தந்தைக்கு நிகரான ஜடாயுவே, சீதையைக் கொண்டு சென்ற கொடியவனுடன் சண்டையிட்டிருக்கிறார் என்று கண்டு கொண்டனர். விரைவாக நடந்து சென்றனர். அங்கே குற்றுயிராக வீழ்ந்து கிடந்த ஜடாயுவைக் கண்டு இருவரும் ஓடிச்சென்று அவரைத் தூக்கி எடுத்தனர்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 40**
**சரியானவிடை:- சன்னியாசி**

1. வே. வசந்த மல்லிகா.
களனி கங்கை மில் றோட், மட்டக்குளி, கொழும்பு.-
2. செல்வி கே. கோகிலம்.
குறிஞ்சாமுனை, கன்னக்குடா, மட்டக்களப்பு.
3. எச்.கே. மர்ழியா.
இல.284 ஒடாவியார் வீதி, ஏறாவூர்-02.
4. பீ.எஸ். பாஹிமா.
தெஹிகஸ்தலாவ, பலாங்கொடை.
5. மனோ கோபாலன். இல.16 நவீனசந்தை கட்டிடம், ஹப்புத்தளை.

**போட்டி இல. 42** கேள்வி:- சீதையை எத்திசையில் இராவணன் கொண்டு சென்றான்?

ஆகஸ்ட்.10 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி- இல.42, தினமுரசு வாரமலர், த.பெ.இல- 1772, கொழும்பு.**

# காதில் பூ கந்தசாமி

## டெஸ்ட் ஒன்று இன்னிங்ஸ் இரண்டு

சந்திர அணியினருக்கும், சூரிய அணியினருக்குமான டெஸ்ட் போட்டி மல்லை நகர விசாலமான மைதானத்தில் நடைபெற்றது.

ஏற்கனவே நடைபெற்ற சில டெஸ்ட் போட்டிகளில் சந்திர அணியினர் வெற்றி பெற்றமை தெரிந்ததே.

இம்முறை எப்படியாவது வெற்றிபெற்றே தீரவேண்டும் என்று தனது அணியினருக்கு கடும் உத்தரவு போட்டிருந்தார் சூரிய அணிக் கப்டன்.

முதலாவது இன்னிங்ஸில் முதலில் துடுப்பெடுத்தாடியது சூரியஅணி.

சந்திர அணியின் பந்து தடுப்பாளர்கள் 'பீல்டிங்' செய்ய தயாராவதற்கு இடையில் சூரிய அணியினர் அதிரடியான துடுப்பாட்டத்தில் குதித்தனர்.

முதல் பந்து சிக்ஸருக்கு போனது. இரண்டாவது பந்தும் சிக்ஸர். மூன்றாவது பந்து பவுண்டரி எல்லையை படுவேகமாக கடந்து சென்றது. முதல் ஓவரில் மட்டும் 25 ரன்கள் குவிந்தன.

அவசர காரியம் ஒன்றுக்காக சந்திர அணியின் கப்டன் வெளியூர் சென்றுவிட்டதால், அந்த அணியினருக்கு பீல்டிங் வியூகம் வகுப்பதில் சிரமம் ஏற்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எந்த இடத்தில் நின்று பந்தைத் தடுப்பது என்று சந்திர அணியினர் குழம்பிக் கொண்டிருக்க பத்து ஓவர்களில் 15 ரன்களை குவித்துவிட்டு மைதானத்தை சுற்றிலும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தனர் துடுப்பாட்ட வீரர்கள்.

ஆடுகளத்தை (பிட்ச்) துடுப்பால் தட்டிப் பார்த்த துடுப்பாட்ட வீரர்கள் முகத்தில் மகிழ்ச்சி காணப்பட்டதை தூரத்தில் இருந்தே நன்றாக, மிக நன்றாக நம்மால் அவதானிக்க முடிந்தது.

இரவு பகல் ஆட்டம் என்றாலும் கூட, முதல் இன்னிங்ஸ் கால நிலை காரணமாக அதிகாலையில் தான் ஆரம்பித்தது. அப்படியிருந்தும் இருள் சற்று தடிப்பாகவேயிருந்தது.

"பந்து வெள்ளையாக பளிச்சென்று தெரிந்தமையால், துடுப்பாட்ட வீரர்களுக்கு பந்தை கவனித்து விளாசக்கூடியதாக இருக்கிறது.

பந்து வீச்சாளர்கள் விக்கெட்டை குறிவைத்து பந்தை வீச முடியாமல் இருக்கிறது. ஆகவே ஆடுகள நிலவரம் சூரிய அணியினருக்கு வாய்ப்பாக மாறியுள்ளது" என்று பிரபல கிரிக்கெட் விமர்சகர் கவுண்டமணி தெரிவித்தார்.

கிரிக்கெட் விமர்சகர்கள் கவுண்டமணியும், செந்திலும் பேசிக்கொண்டதை வாசகர்களுக்கு தருகிறோம்.

செந்தில்:- அண்ணே, அண்ணே, அங்கே பாருங்கண்ணே!
கவுண்டமணி:- அங்கேதாண்டா பார்க்கிறேன் பரதேசி நாயே!
செந்தில்:- என்ன ஸ்கோர் அண்ணே!
கவு:- தமிழ்லே கேளடா தட்டைத் தலையா!
செ:- எத்தனை ஓட்டங்கள் அண்ணே?
கவு:- ஓட்டத்திற்கே இடமில்லையேடா, எல்லாமே சிக்ஸரும் பவுண்டரியும்தான். செஞ்சரிகளை தாண்டிட்டாங்கடா.
செ:- முன்னாடி ஏன் அண்ணே இவங்க தோற்றுப் போனாங்க?
கவு:- அடே, தேங்காய் தலையா, பேட்டியாடா எடுக்கிறாய்? கேளுங்கள் கொடுக்கப்படும் எண்ணு போர்டா மாட்டியிருக்கேன்!
செ:- உங்களுக்கு விஷய ஞானம் போதாது அண்ணே.
கவு:- என்ன சொன்னீங்க. எங்க திருப்பிச் சொல்லுங்க.
செ:- சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன் அண்ணே. தப்பா எடுத்துக்காதீங்க.
கவு:- அப்படிங்களா. சரி என்ன கேட்டே?
செ:- சூரிய அணி இப்படி செஞ்சுரி போட்றாங்களே. முன்னாடி ஏன் தோத்துப் போனாங்க எண்ணு கேட்டேண்ணே!
கவு:- இதுக்குத்தான் தலையில கிட்னி வேணுமென்கிறது.
செ:- அதை இப்ப தலையில வைச்சுட்டாங்களா?
கவு:- இல்லடா தலைதான் அதையெடுத்து வைச்சுக்கிட்டுது.
செ:- நீங்க சொன்னா ஓ.கேயண்ணே. என் கேள்விக்கு பதில் சொல்லுங்கண்ணே.
கவு:- முன்னாடி அவங்க நல்லா பீல்டிங் பயிற்சி எடுத்து, நல்லா பீல்டிங் வியூகம் போட்டு, எப்படி எப்படியெல்லாம் சூரிய அணிக்காரங்க பந்து வீசுவாங்க எண்ணு கணக்குப்போட்டு மைதானத்தில் இறங்கினாங்களா, சூரிய அணி தோத்துப்போச்சு. விக்கெட் இழப்பு அதிகமானா ஒரு மரியாதை இருக்காது பாரு. அதனால சூரிய அணிக்காரங்க ஆட்டத்தை நிறுத்திட்டு திரும்பி போயிட்டாங்க.
செ:- அண்ணே!
கவு:- என்னடா எருமைத் தலையா?
செ:- நீங்க ஒரு புத்தி சீவியண்ணே.
கவு:- எடே கரிநாக்கு வாயா, அது புத்தி சீவியில்லடா புத்திஜீவி.
செ:- ஏனண்ணே அப்படிச் சொல்றாங்க? புத்தியை வைச்சுத்தான் உயிர் வாழுறாங்களா?
கவு:- அவங்க பிழைப்பே அதை நம்பித்தானடா.
செ:- ஐஸீ! ஒரு உதாரணம் சொல்ல முடியுமா? ஐ.மீன் எக்ஸ்ஸாம்பிள்.
கவு:- இப்ப சூரிய அணி விளாசுது பாரு. அவங்கதான் முன்னாடி நின்னு கைதட்டுவாங்க. சூரிய அணியை கலந்துக்க வைக்காம கிரிக்கெட்டே நடத்த முடியாது. சூரிய அணியோட தான் நட்பாட்டமோ, போட்டியோ எதுவென்னாலும் நடத்தணும் என்பாங்க. சூரிய அணி தோத்துப்போயிடுச்சு எண்ணு வையி, சந்திர அணிக்கு சலாம் போட தொடங்கிடுவாங்க. அது மட்டுமில்லடா, இன்னொன்னும் செய்வாங்க.

செ:- சொல்லுங்கண்ணே!
கவு:- தாங்களே புதுசா ஒரு சொதப்பல் அணியை உருவாக்கிக்கொண்டு கிளம்பிடுவாங்க. சந்திர அணியோட ஒரு உடன்பாட்டுக்கும் போயிடுவாங்க.
செ:- என்ன உடன்பாடண்ணே?
கவு:- நாங்க பந்தை விக்கெட்டுக்கு போடவே மாட்டோம். நீங்க உயத்தி உயத்தி அடிச்சுக்குங்க. இடைக்கிடையே எங்க பந்து நல்ல பந்து என்று பாராட்டினீங்கன்னா போதும் என்பாங்க.
செ:- அண்ணே. நீங்க எங்கேயோ இருக்க வேண்டியவங்கண்ணே. இன்னொரு கேள்வியண்ணே.
கவு:- ஏன்டா, விடமாட்டியா. சரிடா கேளு.
செ:- சூரிய அணி முன்னணியில் இருந்தா என்ன செய்வாங்க?
கவு:- சந்திர அணியோட கொள்கை முரண்பாடு. போட்டிகளில் கலந்துக்க மாட்டோம் எண்ணு அறிவிச்சுட்டு துண்டை உதறி தோள்ல போட்டுக்குவாங்க. என்னடா ஸ்கோரு?
செ:- தெரியல்லையண்ணே.
கவு:- ஏண்டா தெரியேல்ல?
செ:- ஸ்கோர் போர்ட்டை மறைச்சுக்கிட்டு சந்திர அணிக்காரங்க நிற்கிறாங்கண்ணே!
கவு:- விலகச் சொல்லலாமாடா.
செ:- மாட்டாங்க.
கவு:- ஏனடா?
செ:- ஆட்டம் முடியட்டும். அதற்கப்புறமா பார்த்துக்கலாம் எண்ணு சொல்றாங்கண்ணே.
கவு:- அப்படியா? யாரது அந்தத் தம்பி இங்க வா தம்பி!
தம்பி:- அடடே கவுண்டமணியா. வணக்கமண்ணே.
கவு:- என்னைத் தெரியுமா?
தம்பி:- நல்லா தெரியுமே.
கவு:- நான் நடிச்ச படங்கள்ல பிடிச்ச படம் எது?
தம்பி:- அலைகள் ஓய்வதில்லை.
கவு:- அப்படியா! சரி ஸ்கோர் என்ன?
தம்பி:- எண்ணமுடியல்லை. 'றெக்கோட்பிறேக்' எண்ணு சொன்னாரு சூரிய அணி கப்டன்.
செ:- அதென்ன றைக்கோட்டு தம்பி?
தம்பி:- சூரிய அணி இதுவரை கலந்துக்கிட்ட போட்டிகளில் ஸ்கோர் கூட எடுத்தது இதுதான் எண்ணு சொன்னாங்க.
செ:- சந்திர அணிக் கப்டன் என்ன சொல்லுறாரு?
கவு:- அவர் என்ன சொல்லப்போறாரு. கைவிரலால எண்ணிப் பார்த்தா கணக்கு தப்பாயிடும்.



கம்பியூட்டர் முறையில் கணக்குப் பார்த்து சொல்லப்படும் எண்ணு சொல்வாரு.
செ:- எப்ப சொல்லுவாங்க.
கவு:- எப்ப வசதிப்படுமோ அப்ப.
செ:- சூரிய அணிக்காரங்க மட்டும் எப்படிச் சொல்லுறாங்கண்ணே.
கவு:- கணக்கு தங்களுக்கு சாதகமா இருக்கிறதால சொல்லுவாங்கதானே. ஐந்து செஞ்சுரி போட்டோம் பத்து செஞ்சுரி போட்டோம் எண்ணு துள்ளுறாங்க பாரு.
செ:- வெற்றி யாருக்கண்ணே சேரும்.
கவு:- வென்றென்ன, தோற்றென்ன, வில்லங்கமான உலகத்திலே? வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும் உலகத்தில!
செ:- தத்துவ வித்தகரண்ணே நீங்க. அண்ணே நான் போகப்போறேண்ணே.
கவு:- போ. இழுத்தா பிடிச்சுக்கிட்டிருக்கேன்.
செ:- அதில்லையண்ணே. ஒரு உதை தாங்கண்ணே.
கவு:-இன்னைக்கு உதைக்கிறமாதிரியில்லை. ஒரு சேஞ்சா இருக்கட்டுமேடா.
செ:- இல்லையண்ணே. நீங்க உதைக்காட்டி எனக்கு தூக்கமே வராதண்ணே.
கவு:- அப்படிங்களா? சரிடா. வடக்குப் பக்கமா திரும்பி நில்லு.
(கவுண்டர் உதைக்க செந்தில் விழுந்து புரண்டு எழுந்து ஓடுகிறார்.)

யாவுமே கற்பனை

Regd. as a News Paper at the G.P.O.(QD/24/NEWS/96)

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# சாதனைப் பாய்ச்சல்

ஸ்ரீ கல்யாணி ஜீவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
3233657

தருவது லியோ டெ



தடியூன்றிப் பாய்வதில் புதிய உலக சாதனை வீரர் ஒருவர் உருவாகிக் கொண்டிருக்கிறார். என்ன ஸ்ரைலாக தடியைப் பிடித்துக் கொண்டு தாவுகிறார் பார்த்தீர்களா. இவரது பெயர் ஒக்கோர்ற் பிளறிற்ஸ். தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர்.

தடியூன்றி உயரப்பாய்தலில் தற்போதுள்ள உலக சாதனை 6.14 மீற்றர். உக்ரெய்ன் நாட்டைச் சேர்ந்த செர்ஜி புப்காதான் அந்தச் சாதனைக்குச் சொந்தக்காரர். உயரம் தாண்டலில் 35 தடவைகள் உலக சாதனை படைத்தவர் செர்ஜி புப்கா. திருமணமாகி 2 பிள்ளைகள் இருக்கிறார்கள். வயது 33. அப்படியிருந்தும் செர்ஜி புப்கா உயரம் தாண்டலில் களைக்கவேயில்லை. புகுந்து விளையாடுகிறார்.

செர்ஜி புப்காவின் இடத்தை எதிர்காலத்தில் நிரப்பக்கூடியவர் என்று ஒக்கோர்ற் பிறிற்ஸ் கருதப்படுகிறார். இவரது வயது 22. பேர்லினில் நடந்த போட்டி ஒன்றில் ஒக்கோர்ற் பிறிற்ஸ் தாண்டிய உயரம் 6.3 மீற்றர். "தொடர்ந்து முயன்றால் செர்ஜி புப்காவின் இடத்தை இவர் பிடிக்கலாம்" என்று சொல்கிறார்கள் தடகளப் போட்டி விமர்சகர்கள்.

செர்ஜி புப்கா ஒரு சிங்கம் என்றால் ஒக்கோர்ற் பிறிற்ஸ் குட்டிச் சிங்கம். அதாவது குருளை. வயதிருப்பதால் இந்தக் குருளை சாதனைச் சிகரத்தை முத்தமிடக்கூடும்.

# வயதானால் துக்கமில்லை



வயதாகிக் கொண்டிருக்கிறது என்பதே சிலருக்கு வருத்தமான விஷயமாகி விடுகிறது. வயதாகிறதே என்ற கவலையை மட்டும் உதறிப் போட்டுவிடுங்கள். நீங்கள் வயதானாலும் ஆய கலைகள் அறுபதிலும் வல்லவராக இருப்பீர்கள்.

அதற்கு ஒரு உதாரணம் ஜோர்ஜ் போர்மன் உலக அதிபார குத்துச் சண்டை வீரர். (படத்தில் வலது புறம் சிவப்பு காற் சட்டையுடன் காணப்படுபவர்)

1968இல் நடைபெற்ற ஒலிம்பிக்கில் முதன்முதல் பட்டம் வென்றார்.

1973 இல் உலக அதிபார குத்துச் சண்டை சாம்பியனாகினார். 1974 இல் ஒரு சறுக்கல். முகமத் அலியிடம் தோற்றுப் போனார்.

குத்தி குத்தி களைத்துப் போகா விட்டாலும் சலித்துப் போய் விட்டது. 1977 இல் ஓய்வை நாடினார். குத்துச் சண்டை பயிற்சி பள்ளி நடத்தினார். 10 வருட ஓய்வின் பின் 1987இல் மீண்டும் களம் புகுந்தார். அப்போது 38 வயது. சிங்கத்துக்கு வயதாகி விட்டது. அவரது குத்தை சமாளிப்பது கஷ்டமல்ல என்றுதான் பலரும் நினைத்தனர். ஆனால் ஜோர்ஜ் போர்மன் அடித்து தூள் பண்ணி எதிரியைப் புறம் கண்டார்.

1994 இல் உலக அதிபார குத்துச்சண்டைப் போட்டியில் மோறெர் என்னும் போட்டியாளருடன் ஜோர்ஜ் போர்மன் மோதும் காட்சிதான் படத்தில் உள்ளது. அப்போது வயது 45 வருடம் 287 நாட்கள். (கிட்டத்தட்ட 46) பத்தாவது சுற்றில் மோறெர் மண்டியிட்டார். மீண்டும் உலக அதிபார குத்துச் சண்டை சாம்பியனானார். 45 வயதில் குத்துச்சண்டை சாம்பியனாகியது கின்னஸ் உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டது. குத்துக்கு வயதில்லை மனதில் வலுவிருந்தால் போதும்.


# டைசன் தேடுகிறார்

குத்துச் சண்டை வீரர் மைக் டைசன் தன்னை பலாத்காரம் செய்தார். தனது அறைக்கு நைசாக அழைத்து கட்டாயப்படுத்தி உறவு கொண்டார் என்று ஒப்பாரி வைத்த கறுப்பழகிதான் இவர். மைக் டைசன் சிறைக்குச் செல்ல காரணமாக இருந்த இந்த கறுப்பழகியை இப்போது காணவில்லையாம்.

மைக் டைசன் வெளியே வந்ததும் கறுப்பழகி தலைமறைவாகிவிட்டார். "மைக் டைசனை கொஞ்சக் காலம் உள்ளே தள்ளி புகழைக் கெடுக்க நினைத்த சிலரே கறுப்பழகியை வைத்து நாடகம் ஆடினார்கள். அழகி விரித்த வலையில் டைசன் வீழ்ந்தது மெய்யாக இருக்கலாம். ஆனால் கட்டாயப் படுத்தி உறவு கொண்டார் என்பதெல்லாம் கலப்படமற்ற பொய்.

மைக் டைசனின் எதிரிகள் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டு நீலிக்கண்ணீர் வடித்தாள் கறுப்பழகி. இப்போது டைசன் வெளியே வந்ததும் பயத்தில் தலைமறைவாகிவிட்டாள்.

பல கோடிகள் புரளும் குத்துச் சண்டைப் பந்தயங்களில் பொய்யும், புரட்டும், மாட்டி விடுதலும் சகஜம்தான்" என்கிறார்கள் டைசனின் விசிறிகள்.



# கரும்புயல்



ஜிம்மி அடம்ஸ். மேற்கிந்திய கிரிக்கெட அணியின் சகலதுறை ஆட்டக்காரரா.

புத்திசாலித்தனமான சுழற்பந்து வீச்சாளராக மேற்கிந்திய அணிக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறார்.

1994-95 இல் மேற்கிந்திய தீவு அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தபோது ஜிம்மி அடம்ஸ் தனது தனித்துவத்தை வெளிப்படுத்தி முத்திரை பதித்தார். அந்தச் சுற்றுப்பயணம் ஜிம்மி அடம்ஸின் கிரிக்கெட் வாழ்க்கையில் ஒரு திருப்பமாக அமைந்தது. அதன் பின்னரே ரசிகர்கள் கவனம் இவர்மீது திரும்பியது.

டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 4 சதம் போட்டிருக்கிறார்.

கடந்த ஏப்ரல் மாதம் ஜிம்மி அடம்ஸின் கிரிக்கெட் வாழ்க்கையில் மற்றுமொரு சந்தோசமான திருப்பம் ஏற்பட்டது.

மேற்கிந்திய தீவில் சுற்றுப்பயணம் செய்த நியூசிலாந்து அணியுடன் அன்டிகுவாவில் டெஸ்ட் போட்டி நடந்தது. ஏப்ரல் 27முதல் மே 2 வரை நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் ஒரு கரும் புயலாகவே மாறிவிட்டார் அடம்ஸ். பந்துவீச்சாளர்களால் அவரை அசைக்கமுடியவில்லை. டபிள் செஞ்சரி போட்டதோடு அவுட்டாகாமல் திரும்பினார். ரசிகர்கள் வியப்பில் உறைந்துபோயிருந்தனர். முதல் இன்னிங்ஸில் மொத்தமாக 208 ரன் எடுத்திருந்தார்.

ஜிம்மி அடம்ஸின் வயது 26. தொடர்ந்து விளையாடக்கூடிய வயதுதான். அதனால் சாதனைகள் தொடரக்கூடும்.



வாரமலர் தினமுரசு